# ஓம் சரவணபவ

# 2 பிரபல ஜோதிடர்களின்
## துல்லியமான கணிப்பில்
# புத்தாண்டுப் பலன்கள் 2026

Vol: 25 Issue : 04
ஆண்டு: 25 இதழ்: 04
Jan 2026
ஜன. 2026

ஆன்மிக மாத இதழ்
ரூ.40

இலவச
தனிப்
புத்தகம்!




ஓம்
சரவணபவ
ஜனவரி
2026
இதழுடன்
இலவச
இணைப்பு
2026
2
பிரபல
ஜோதிடர்களின்
துல்லியமான கணிப்பில்
புத்தாண்டுப் பலன்கள் 2026

# தை மகளே வருக!

சித்தாந்த ரத்தினம், இலக்கியச்சுடர்
முனைவர். இராம. கண்ணன்



தமிழ் மாதங்கள் பன்னிரண்டில், பண்டிகைகளும், விழாக்களும் இல்லாத மாதமே இல்லை எனலாம். சித்திரை கனி காணல் (விசு), சித்திரை பத்தாம் உதயம், (உழவர்களுக்கு) சித்ரா பௌர்ணமி, (குமரியில் விழுகின்ற கதிரையும், எழுகின்ற நிலவையும் ஒருசேர காணலாம்) என விழாக்கள் களைகட்டும். வைகாசி விசாகம், ஆனித் திருமஞ்சனம், ஆனி உத்திரம், ஆடி பதினெட்டாம் பெருக்கு, ஆடிப்பூரம், ஆடி இறுதி, ஆடி அமாவாசை, ஆவணி அவிட்டம், திருவோணம், புரட்டாசி சனிக் கிழமைகள், மகாளய அமாவாசை, ஐப்பசி அன்னாபிஷேகம், ஐப்பசி தீபாவளி, கார்த்திகை விளக்கீடு, மார்கழி திருப்பாவை, திருவெம்பாவை பாராயணம் (பாவை நோன்பு) வைகுண்ட ஏகாதசி (முக்கோடி ஏகாதசி) தைப்பொங்கல், தை அமாவாசை, தைப்பூசம், மாசிமகா சிவராத்திரி, மாசிமகம், பங்குனி உத்திரம் இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

தை மாதம், சேற்றிலே கால்வைத்த விவசாயிகள், சோற்றிலே கை வைக்க அறுவடைப் பயன்களை அனுபவிக்கும் மாதம். ஆதவனுக்கு நன்றி சொல்ல தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் கொண்டாடு கின்ற நல்ல நேரம். சூரியனின் பயணத் திசை மாற்றம். தைப்பூசம் முருகன் திருக் கோவில்களில் விசேஷ பூஜை கைங்கரியங் கள் விமரிசையாக நடைபெறும்.

வீட்டைச் சுத்தம்செய்து, பழையன கழித்து, புதியன புகுத்தி காய், கனி, கிழங்கு, மஞ்சள், இஞ்சி, செங்கரும்பு, வெண்பொங்கல், அக்கார வடிசில், படையல் வைத்து, ஆதவனுக்கு நன்றி சொல்லும் நிகழ்வு தைப்பொங்கல் உறவுகள், நட்புகளை இல்லத்திற்கு அழைத்துக்கூடி உண்டு கழித்துக் குலவிக்கழிக்கும் நல்லபொழுது எனச் சொல்லவும் வேண்டுமோ?

தை மாதம் மழை பொழிந்தால் மிகவும் சிறப்பாகக் கருதப்படும்.'தை மழையோ? நெய் மழையோ?' என்ற சொலவடை இன்றும் வழக்கில் உள்ளது.

திருமணமாகாமல் ஏங்கித் தவிக்கும், கன்னியருக்கும், காளையருக்கும், 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற சொல் வழக்கிற்கு இணங்க திருமணம் நடந்தேறும். தை மாதம் முழுவதும், விழாக்கள், விசேஷங் கள் தொய்வின்றி தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும். தை மாதம் தட்ப வெப்ப நிலை இதமாக இருக்கும். பனி சற்று அதிகமாக இருக்கும்.

'தைப் பனி தரையைத் துளைக்கும், மார்கழிப்பனி மச்சைத் துளைக்கும்' என்ற சொல் வழக்கு இன்றும் வழக்கில் உள்ளது.

ஆக, நல்ல காரியங்கள் செய்ய, புதுமனை புகுவிழா நடத்த, அலகு குத்திக் காவடி எடுக்க, கொடைவிழா நடத்த, இப்படி, நல்லவையே செய்ய உகந்த மாதம் 'தை' மாதம்.தை மகளைப் போற்றித் தரணி சிறக்க வாழ்வோம்!



**அனைவருக்கும் மனமார்ந்த**
**2026 புத்தாண்டு, தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்!**

-ஆசிரியர்

# நலம் தரும் சூரிய வழிபாடு!

இராமாயணத்தின் முக்கிய கருப்பொருள் தர்மம் வெல்லும், பாவம் தோற்கும், தந்தை சொல்லே மந்திரம், சகோதர பாசம், போர் தர்மம், பிறன் மனையை நோக்காமல் இருத்தல், குருபக்தி என குறிப்பிட்டு சொல்லலாம்.

சீதையை கவர்ந்து சென்றதால், சீதையை மீட்க இராமபிரானுக்கும், இராவணனுக்கும் போர் ஏற்படுகிறது. இராவணன் முற்பிறவியில் செய்த பாவத்தினால் மதிகெட்டு மாற்றானின் மனைவியை அடைய விரும்பி, அதனால் அரச பதவியையும், உயிரையும் துறக்க நேரிட்டது. சிவபக்தன், வேதங்களை முறைப்படி கற்றுத் தேர்ந்தவன், தானங்களை பல செய்தவன், வீரமும், தீரமும் கொண்டவன் என இராவணனைப் பற்றி பெருமையாக பேசினாலும் ஒரு சிறிய தவற்றினால் நீங்காத பழி சுமைக்கு ஆளானான்.

இராமபிரானுக்கும், இராவணனுக்கும் இடையே கடும் போர் நிலவும் சூழ்நிலையில், போரில் சுக்கிரீவனால் வதைக்கப்பட்ட அரக்கப்படைத் தலைவன் மகோதரனின் (மோதரன்) இறந்த உடலை, இராவணன் போர்க்களத்தில் பார்த்தவுடன் கோபத்துடன் இராமபிரானுடன் போர்புரிய தயாரானதை கம்பன்-

**"மோதரன் முடிந்த வண்ண மூவகை யுலகு முற்றும்**
**மாதிரத் தோடும் வென்ற வன்றொழி லரக்கன் கண்டான்**
**சேதனை யுண்ணக் கண்டான் செலவிடு செலவி டென்றான்**
**சூதனு முடுகித் தூண்டச் சென்றது துரகத் திண்டேர்."**

என வருணிக்கிறார்.

கொடிய பாவம்புரிந்த இராவணனும், தருமத்தின் தலைவனான இராமபிரானும் எதிர் எதிரே போர்புரியத் தயாராயினர். போருக்கு முன்பு சங்கொலி முழங்க வில் வித்தையில் திறமைசாலியான இருவரும் வில்லால் முதலில் போரைத் துவக்கினார்கள். அந்த சமயத்தில் ஏற்பட்ட வலிமை மிக்க இருவரின் வில்லின் ஒலியைப் பற்றி கம்பன்-

**"ஏழு வேலையு மார்ப்பெடுத் தென்னலாம்**
**வீழி வெங்க ணிராவணன் வில்லொலி**
**ஆழி நாதன் சிலையொலி யண்டம்விண்**
**டூழி பேர்வுழி மாமழை யொத்ததல்."**

வில்லன் ஒலியின் ஓசை அண்ட கோளம் பிளந்து, ஊழிகாலத்தில் பெரிய மேகங்கள் ஒன்றோடு ஒன்று மோதும் போது ஏற்படும்


ஓம் சரவணபவ

ஆன்மிக மாத இதழ்

Vol: 25 Issue : 04

ஆண்டு: 25 இதழ்: 04

ஜனவரி 2026

நக்கீரன் பப்ளிகேஷனுக்காக
நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ்,
105, ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை-600 014-ல் அச்சிட்டு
வெளியிடுபவர் : **நக்கீரன்கோபால்**
தொலைபேசி: 43993000
ஆசிரியர்: **நக்கீரன்கோபால்**

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | : | **RD.சரவணப்பெருமாள்** |
| உதவி ஆசிரியர்கள் | : | **சுரேஷ், தனுஷ், சத்யசீலன்** |
| பிழைதிருத்தம் | : | **எஸ்.ராஜா, சுகனேஷ், பி.மோகன்** |
| புகைப்பட கலைஞர் | : | **அரவிந்த்** |
| கணினி அச்சு | : | **ஜோ.ஸ்டாலின்** |

**omeditorial@nakkheeran.in**

Owned by Nakkheeran Publications,
Printed and Published by
**Nakkheeran Gopal.**
Printed at Nakkheeran Printers and Binders,
105, Jani jahan khan road, Royapettai,
Chennai-14.
and Published from the same address.
Phone: 43993000
Editor: **Nakkheeran Gopal**
Editor Incharge: **R.D.Saravanaperumal**

ஓசை போன்று மிக பயங்கரமாக இருந்ததை வர்ணிக்கிறார்.



கடும் போரில் இராமபிரானும், இராவணனும் மாறிமாறி முன்னிலைக்கு வந்தனர். வில்லால் போர் புரிந்த இராவணன் பின்பு சூலத்தைக்கொண்டு போர் புரியத் துவங்கினான். அதை தடுக்க இராமபிரான் விடுத்த கணைகள் யாவும் சில சமயங்களில் பயனின்றி போயிற்று. இதனால் ஒரு கட்டத்தில் சற்று மனச்சோர்வும், செய்வதறியாது இராமபிரான் இருந்த சமயத்தில் விண்ணிலிருந்து தேவர்களுடன் போரை பார்த்துக் கொண்டு இருந்த அகத்திய முனிவர் சூரிய பகவானை போற்றும்வண்ணம் 'ஆதித்ய ஹ்ருதயம்' எனும் மந்திரத்தை இராமபிரானுக்கு உபதேசிக்கிறார்.

இராமபிரானுக்கு ஏதோவகையில் ஏற்பட்ட மனக்கலக்கத்தையும், மனச்சோர்வையும் நீக்கிய இந்த மந்திரம் வால்மீகி இராமாயணத் தில் 107-ஆம் சர்க்கத்தில் வருகிறது. (இந்த நிகழ்வில் வால்மீகியும், கம்பரும் மாறுப்படுகிறார்கள்.)

**"ததோ யுத்தபரிஷ்ராந்தம் சமரே சிந்தயா ஸ்திதம்**

**ராவண் சாக்ரதோ த்ருஷ்ட்வா யுத்தாய சமுபஸ்திதம்"** 1



எனத் தொடங்கும் சுலோகத்தை அகத்தியர் உபதேசித்தார்.

அகத்திய முனிவர் உபதேசித்த மந்திரத்தை மூன்று முறை உச்சரித்து, சூரிய பகவானை தியானித்து புத்துணர்ச்சியுடன், புதிய வேகத்துடன் இராமபிரான் போரை தொடர்ந்தார். இதுவரை தனக்கு நிகராக யாரும் போர் புரிய துணியாத நிலையில் இராவணன், வயதில் சிறியவரான இராமபிரானின் மிகுந்த ஆற்றலுடன் செயல்படுவதைக் கண்டு திகைத்து போனான். வேதங்கள் கூறும் முதற்காரணனாகிய பரம்பொருள் இவன் தானே என்பதை 'வேத முதற் காரணனே?' என இராவணன் எண்ணியதாக கம்பர் கூறுகிறார்.

மிகுந்த ஆற்றலுடன் திறமையாக போர்புரிந்த இராமபிரானின் தாக்குதலால் நிலைகுலைந்த இராவணன் எதிர்கொள்ளமுடியாமல் தடுமாறினான். இராவணன் தளர்ச்சி அடைந்து சோர்வுற்ற போது போர் அறத்தை மதித்து இராமபிரான் அம்பு ஏய்வதை நிறுத்தினார். தன்னுடைய எதிரியான இராவணனை இந்த தருணத்தில் கொல்லுதல் நீதி இல்லை என்பதை உணர்ந்து பெருந்தன்மையுடன் செயல்பட்டார். பின்னர் தெளிவுற்ற இராவணன் மீது பல உத்திகளுடன் வீரத்துடன் போர்புரிந்து கடைசியில் இராவணனை வதைத்து போரில் வென்றார்.

திருமாலின் அவதாரமாக இராமபிரான் மண்ணுலகில் அவதாரம் எடுத்து இருந்தாலும் போர்புரியும் சமயத்தில் அவருக்கு இயற்கை தெய்வமான சூரியபகவானின் அருளாசிதான் தக்க தருணத்தில் வெற்றிக்கு துணைநின்றது.

சூரிய பகவானை போற்றும் இந்த ஆதித்ய ஹ்ருதய சுலோகத்தை பாராயணம் செய்தால் எதிரிகளால் ஏற்படும் பயம் நீங்கி நன்மையைத் தரும். சூரியபகவானை தைத் திங்கள் முதல் நாளன்று வழிபடுவது நம் மரபு. அன்று இந்த சுலோகத்தை பாராயணம் செய்துசகல மங்கலத்தையும் பெறுவோம். ●

✡ முனைவர் **இரா. இராஜேஸ்வரன்**

# அரவணை அமுது

✡ முனைவர் ந.விஜயசுந்தரி

**கி.**பி.1323-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1331-ஆம் ஆண்டுவரை முகமது பின் துக்ளக் ஆட்சியில் இருந்தார். இவர், ஸ்ரீரங்கம் திருக்கோவிலில் இஸ்லாமியர்களைக் குடியேற்றம் செய்தார் என்ற செய்தி 'கோயில் ஒழுகு' நூலில் காணப்படுகிறது. இஸ்லாமியர்களின் படையெடுப்பை முன்கூட்டியே அறிந்துகொண்ட வைணவ அடியார்கள், துணிச்சலுடன் கோவிலிலிருந்து விலை உயர்ந்த அணிகலன்கள், புழங்கு பொருள்கள் ஆகியவற்றை திருமலை திருப்பதிக்குக் கொண்டு சென்றுவிட்டதாகவும் குறிப்புள்ளது. கிபி 1371-ஆம் ஆண்டு இஸ்லாமியர்களை வென்று விஜயநகர பேரரசு நிறுவப்பட்டது. இதன்பின்னர் திருப்பதியில் இருந்து கடவுள் சிலை, ஆபரணங்கள், பொருட்கள் ஆகியன மீண்டும் ஸ்ரீரங்கத்திற்கு கொண்டுவரப்பட்டன. அரங்கனின் திருவுருவம் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கிபி 15, 16-ஆம் நூற்றாண்டு அளவில் இக்கோவில் நடைமுறைகள் முற்றிலும் மாற்றம் பெற்றன. இட்சுவாகு குலதனமான ஸ்ரீரங்க விமானம் பழுதுபார்க்கப்பட்டது.



விசய நகர பேரரசருக்கு ஒத்துப் போகக் கூடியவர்கள் மட்டும் திருக்கோவிலின் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் கிபி ஆயிரமாம் ஆண்டுவாக்கில் இராமானுஜர் வகுத்த நடைமுறைகள் அனைத்தையும் மாற்றினர். கோவில் நிர்வாகத்தில் வரிப்பணம் வசூலித்தல் தொடங்கி பல விதங்களில் முறைகேடுகள் நடந்தன. இவற்றைக் கண்டு பொறுக்கமுடியாத பலரும் கோவிலின் கிழக்குப் பக்கத்திலுள்ள வெள்ளை கோபுரத்தின்மீது ஏறி தற்கொலை செய்துகொண்டதாகவும்

**திருவரங்கம் கோவிலின் வரலாற்று ரீதியான தகவல்களைத் தந்தமைக்காக நாம் ஒருவருக்கு நன்றி கூறவேண்டும் என்றால் அவர் வேல்ஸ் என்ற ஆங்கிலேயர்தான்.**



*கோவில் ஒழுகு நூல் குறிப்பிடுகிறது. விஜயநகர மன்னர்களுக்குப் பின்னர், நாயக்கர்களின் ஆட்சி இப்பகுதியில் அமைந்தது. இவர்கள் திருக்கோவிலின் பழைய இடிந்த கட்டிடங்களை சரி செய்தனர். கோவிலின் வருமானத்தைப் பெருக்குவதற்காக புதிய புதிய அறக்கட்டளைகளை நிறுவினர். சொல்லப்போனால் சொக்கநாத நாயக்கர் காலத்தில் இக்கோவில் மீண்டும் பொலிவு பெற்றது. இன்றும் இக்கோவிலில் நாயக்க மன்னர்களின் கலைச்சுவடுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. குறிப்பாக விசயரங்க சொக்கநாதர் என்னும் நாயக்க மன்னர், மதுரையில் இருந்து தன் குடும்பத்துடன் ஸ்ரீரங்கம் அரங்கனை தரிசிக்கவந்து இங்கேயே தங்கியதற்கு அடையாளமாக, கோவிலின் இரண்டாம் திருச்சுற்றில் சொக்கநாத நாயக்கர் குடும்ப உறுப்பினர்களுடன் சிலையாக காட்சி அளிக்கின்றார்.*

*அதற்குப்பின் ஆங்கிலேயர்களின் ஊடுருவலின்போது ஆற்காடு நவாப்புகள் இக்கோவிலின் நிர்வாகத்தைக் கைப்பற்றினர். பின்னர் கிபி 1700-களில் மராட்டிய மன்னர்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. அவர்களை ஹைதராபாத் நிஜாம் வெற்றி கண்டார். பின்னர் சந்தா சாகிப் என்பவர் ஆற்காட்டு நவாப்பையும், ஆங்கிலேயர்களையும் ஒரு சேர எதிர்த்தார். பிரஞ்சுப் படை ஒன்றைக் கொண்டு திருச்சிராப்பள்ளி கோட்டையிலும், ஸ்ரீரங்கம் கோவில் திருச்சுற்றுக்களிலும் ஒளிந்துகொண்டு, இவர் தம்மைப் பாதுகாத்துக் கொண்டதாகக் குறிப்புகள் உள்ளன. மைசூர் படை உதவியுடன் பலரும் இக்கோவிலைத் தங்கள் குடியிருப்புப் பகுதியாகவும் மாற்றிக்கொண்டுள்ளனர். கிபி. 1781-ஆம் ஆண்டு ஹைதர் அலி என்ற மன்னனால் இக்கோயில் தாக்கப்பட்டது. இவர் மகன் திப்பு சுல்தான் இக்கோவிலின்மீது படையெடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. திருவரங்கம் கோவிலின் வரலாற்றுரீதியான தகவல்களைத் தந்தமைக்காக நாம் ஒருவருக்கு நன்றி கூறவேண்டும் என்றால் அவர் வேல்ஸ் என்ற ஆங்கிலேயர்தான். இவர் திருச்சிராப்பள்ளியின் மாவட்ட ஆட்சியராக இருந்து மிகப்பெரும் இலக்கியப் பணி ஒன்றை கிபி 1801-ஆம் ஆண்டில் செய்தார். ஸ்ரீரங்கம் கோவிலின் சிதறி கிடந்த வரலாறுகளைத் தொகுத்தார். இதன் பிரதி ஒன்றைக் கோவிலின் முக்கியமான இடத்தில் மறைவாக வைத்துப் பாதுகாத்தார். அதனைத் தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சியில் இக்கோவிலில் குறிப்பிடும்படியான மாற்றம் எதுவும் நிகழவில்லை. கோவில் நிர்வாகத்தில் ஒரு நிலைத்த தன்மை ஏற்பட்டது. அந்நிலை இன்றுவரை தொடர்ந்து நீடித்துவருகிறது.*




●



# நிபந்தனை!

முன்பெல்லாம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மணமகன் அல்லது மணமகள் தேடும்பொழுது நல்ல குடும்பம் மற்றும் பிள்ளைகளின் நற்குணத்தை மட்டுமே முக்கியமாகக் கருதினார்கள். ஆனால் இன்றைய சூழலில் பல பிள்ளைகளின் திருமணம் உரிய காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கு இருவீட்டார்கள் வைக்கும் நிபந்தனைகளே முக்கிய காரணமாக அமைகிறது. அதிலும் குறிப்பாக பெண் வீட்டார் வைக்கும் நிபந்தனைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. பெண் வீட்டினர் நிபந்தனை வைப்பது மகாபாரத காலத்திலும் நிகழ்ந்துள்ளது. அந்த நிபந்தனை ஏற்படுத்திய விளைவு இயற்கையின்முன் நாம் வைக்கும் எந்த நிபந்தனையும் நமக்குக் கட்டுப்படாது என்ற பாடத்தை நமக்குத் தருகிறது. அஸ்தினாபுர மன்னர் சாந்தனு மகாராஜா தன் முதல் மனைவி கங்காதேவியின் நிபந்தனையை மீறியதால் கங்கையைப் பிரிந்து வாழ்ந்துவந்த சூழ்நிலையில் மீனவப்பெண் சத்யவதியின்மேல் காதல்கொண்டு சத்யவதியை திருமணம் செய்ய விரும்பினார். சத்ய வதியின் தந்தை உபரிசரனிடம் சென்று முறைப்படி பெண் கேட்டார். ஆனால் சத்யவதியின் தந்தை சாந்தனுவிடம் "தங்களுக்கு ஏற்கெனவே தேவவிரதன் என்ற மைந்தர் இருக்கிறார். அதனால் அஸ்தினாபுரத் தின் அரியணையில் அமர்ந்து அரசாளும் உரிமை அவருக்கே உண்டு, ஆனால் என் மகள் வயிற்றில் பிறக்கும் வாரிசுகள் அரியணை ஏறி உங்கள் நாட்டை அரசாள தாங்கள் சம்மதித்தால் மட்டுமே எனது பெண் சத்யவதியை தங்களுக்கு திருமணம் செய்துவைப்பேன் என்ற நிபந்தனையை விதித்தார் உபரிசரன்.

அந்த நிபந்தனையை ஏற்க மனமின்றி மறுத்துவிட்டு வந்தாலும் சாந்தனுவின் மனம் சத்யவதியை மறக்க முடியாமல் வருந்தியது. தனது தந்தையின் மன வருத் தத்தை தேரோட்டிமூலம் அறிந்த தேவவிரதன் தனது தந்தையின் மன வருத்தத்தைப் போக்க எண்ணி சத்யவதியின் தந்தை யைத் சந்தித்து தங்கள் மகள் வயிற்றில் பிறக்கும் வாரிசுகளே அஸ்தினாபுர அரியணை அமர்ந்து ஆட்சி செய்யட்டும். அதற்கு நான் எந்த விதத்திலும் தடையாக இருக்கமாட்டேன். மேலும் எந்தச் சூழல் ஏற்பட்டாலும் நான் அரியணை ஏறமாட்டேன் என்று சபதம் செய்ததுடன் தான் திருமணமும் செய்துகொள்ளாமல் பிரம்மச்சரிய விரதத்தை மேற்கொள்வதாகவும் வாக்குறுதி அளித்தார். அன்றுமுதல் பீஷமர் என்ற பெயர் பெற்றார். பீஷ்மரின் வாக்குறியால், சத்யவதி சாந்தனுவின் திருமணம் நடந்தேறியது. இத்தம்பதியினர் சித்ராங்கதன், விசித்திரவீரியன் என்ற இரு குழந்தை களைப் பெற்றெடுத்தனர். இதில் சித்ராங்கதன் திருமணம் செய்வதற்குமுன்பே இளம்வயதில் ஒரு போரில் மாண்டு போனான். அடுத்து விசித்திரவீரியனுக்கு முடி சூட்டப் பட்டது. அம்பிகா, அம்பாலிகா என்ற இரு சகோதரிகளை மணமுடித்து வைத்தார்கள். விசித்திரவீரியனும் வாரிசுகள் இன்றி இளம்வயதிலேயே மாண்டு போனான். அதனால் அஸ்தினாபுரத்தை ஆள வாரிசுகள் இன்றி போனது. தனது மகள் வயிற்றில் பிறக்கும் வாரிசுகளே அஸ்தினா புரத்தை ஆளவேண்டும் என்ற சத்யவதியின் தந்தை உபரிசரன் இட்ட நிபந்தனை இயற்கையின்முன் தோற்று விட்டது. இச் சம்பவம்மூலம் நாம் விதிக்கும் எந்தவித நிபந்தனைக்கும் இயற்கை கட்டுப்படாது என்ற உண்மை நமக்குப் புரிகிறது. எனவே திருமணம் மற்றும் எந்த சூழ்நிலை யிலும் யாரிடமும் எவ்வித நிபந்தனையும் விதிக்காமல் கிடைப்பதை ஏற்றுக்கொண்டு மனநிறைவுடன் வாழ்வதால் இயற்கை மகிழ்ச்சிகொண்டு நமக்கு மகிழ்ச்சியைப் பரிசாகத் தருகிறது.

●



# எண் கணிதத்தில் உலக அற்புதங்கள்!

## பிறந்தநாள் பலன்கள்



✡ **மகேஷ் வர்மா**

***8,*** *17, 26 இந்த தேதிகளில் பிறந்தவர்கள் சனியின் ஆதிக்கத்தில் இருப்பவர்கள்.*

*இந்த தேதிகளில் பிறந்தவர்கள் உயர்ந்த நிலையில் இருப்பார்கள் அல்லது தாழ்ந்த நிலையில் இருப்பார்கள்.*

*சிலர் நாட்டின் தலைமை பீடத்தில் இருப்பார்கள். சிலர் அரசியல் கட்சியில் உயர்ந்த பதவியில் இருப்பார்கள். சிலர் தங்களின் சமூகத்தில் பெரிய மனிதர்களாக இருப்பார்கள். சிலர் தங்களின் ஊரில் பெரிய மனிதர்களாக இருப்பார்கள்.*

*சிலர் அரசாங்கத்தில் உயர் அதிகாரிகளாக இருப்பார்கள். சிலர் தனியார் நிறுவனத்தில் உயர் பதவியில் இருப்பார்கள்.*

*பிறருக்கு நன்மைகள் செய்பவர்களாக இருப்பார்கள். பெயர், புகழ் இருக்கும். பலருக்கு தலையில் வழுக்கை இருக்கும். தைரியமாக பேசுவார்கள். எதையும் சந்திக்க தயாராக இருப்பார்கள்.*

*நல்லது- கெட்டது எதையும் துணிச்சலாகச் செய்வார்கள். தங்களை நம்புபவர்களுக்கு இவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள். இவர்களை ஏமாற்ற நினைப்பவர்களுக்கு இவர்கள் விரோதிகளாக இருப்பார்கள்.*

*பலரும் இவர்களைப் பார்த்து பயப்படுவார்கள். பலருக்கு 8 என்ற எண்ணையே பிடிக்காது. ஆங்கில எழுத்துக்களின் எண்ணிக்கை 26. அதைக் கூட்டினால், 8 வரும். கூட்டு எண் 8 ஆக இருந்தால், கெட்ட காரியங்கள் அதிகமாக நடக்கும். சிலருக்கு கூட்டு எண்ணான 8 சரியாக இல்லையென்றால், வீழ்ச்சி உண்டாகும். சரியாக இந்தால், உயரத்தில் இருப்பார்கள்.*

*புதன் கிரகத்தின் எண் 5. இந்த தேதிகளில் பிறந்தவர்களுக்குப் பொருத்தமான எண் 5. புதன் கிரகத்தின் ஆட்சியில் பிறந்த 5-ஆம் எண்ணைக் கொண்டவர்கள் இவர்களுக்கு நண்பர்களாக இருப்பார்கள்.*

*வாழ்க்கையின் முற்பகுதி போட்டி, பொறாமை, போராட்டம் நிறைந்ததாக இருக்கும். ஆனால், இறுதியில் இவர்களுக்கு வெற்றி கிடைக்கும்.*

*கூட்டு எண் எப்போதும் சரியாக இருக்கவேண்டும்.*

*5, 14, 23, 32, 41, 50, 59, 77, 6, 15, 24, 33, 42, 51, 60.*

*இந்த எண்கள் கூட்டு எண்களாக இருந்தால் நன்றாக இருக்கும்.*

**அதிர்ஷ்ட தேதிகள்:** *5, 14, 23, 6, 15, 24*

**பொருத்தமற்ற தேதிகள்:** *1, 4, 3.*


**அதிர்ஷ்ட நிறங்கள்:** *மஞ்சள், நீலம்.*

**அதிர்ஷ்ட கற்கள்:** *நீலம் (ப்ளூ ஸஃபைர்).*

**வரக்கூடிய நோய்கள்:** *வயிற்று வலி, முதுகுத் தண்டு பாதிப்பு, மன குழப்பம், ரத்த அழுத்தம், ஆஸ்துமா, கண் நோய்.*

●

# தஞ்சாவூர் கவிராயரின் காலத்தின் வாசனை வீசும் ஞானத்தின் சிறிய புத்தகம்




'ஞானத்தின் சிறிய புத்தகம்' என்பது, "அகத்தைத் தேடி புறப்பட்டவர்களின் அடிச்சுவடுகளில் நடந்து அவர்கள் தவமியற்றிய தலங்களை நாடி நான் மேற்கொண்ட பயண அனுபவங்கள்" என்கிறார் கோபாலகிருஷ்ணன் என்கிற தஞ்சாவூர் கவிராயர்.

பொதுவாக, கவிராயரின் கட்டுரைகள் சமூகம், வரலாறு, கலாசாரம் என்று எந்தத் துறையாக இருந்தாலும் அவையாவும் இறைவண்ணம் திகழும் திரையோவியங் களாக நம்மை மெய் மறக்கச் செய்யும் நிகழ்ச்சிகளாக இருக்கும். அவற்றில் ஆத்மார்த்தமான ஆன்மிக அனுபவம் இயல்பாகவே இழைகளாகப் பின்னிப் பிணைந்திருக்கும். அப்படி இருக்கும்போது பிரத்யேகமாக ஆன்மிகத்திற்காகவே அவர் கட்டுரைகளைத் தீட்டினால் அது தீபார்த்தனை மாதிரி- திவ்ய ஷேத்ர யாத்திரைபோல உள்ளம் மணக்கும் நைவேத்தியம்போல சுகந்தம் சிந்தையில் சுழலத்தானே செய்யும்.

'வாழ்நாள் முழுவதும் அறிவின் துணைகொண்டு தேடிச் சேகரித்தவற்றை யெல்லாம் விட்டபிறகு ஞானம் கிடைக்கிறது. அண்ட சராசரங்களை அளந்துவிடும் வாமனனின் சிற்றடிபோல ஞானம் எப்போதும் சிறியதாகவே இருக்கிறது. மலைக் குகைகளின் மௌனங்

✡ **வே. குமரவேல்**

களிலும், சத்திரத்திண்ணைகளின் ஏகாந்தத்திலும், ஜீவ சமாதிகளின் அதிர்வுகளிலும் மூழ்கி எழும்போது அந்த ஞானமும் காணாமல் போகிறது. ஆசை அறுமின், ஆசை அறுமின் என்பது திருமூலர் வாக்கு என்கிறார் கவிராயர்.

'வாசனைகளின் சந்நிதி' என்கிற கட்டுரை கடந்துபோன பல தலைமுறைகளை நினைவூட்டுவதாக இருக்கிறது. "ஆலய கர்ப்பக்கிரக இருட்டில் கடைசி பக்தனாக நிற்கும் அனுபவம் பெரும்பாலானவர்களுக்கு கிடைத்திருக்கும். பாவை விளக்கின் தீச்சுடர் உள்ளே அம்மையின் மூக்குத்தியில் பட்டுத்தெறிக்கும் வாசனைகளின் சந்நிதியில் மெய்மறக்க முடியும். பிராகாரத்தில் நடக்கத் தொடங்கினால் உலகத்தையே தலைகீழாகப் பார்க்கும் வித்தையைக் கற்றதைப் போல பிராகார மண்டப விதானத்தில் தொங்கும் வௌவால்களின் வாசனையுடனேயே என் பால்யத்தின் நினைவுகள் இருக்கின்றன.


வாசனை என்பது ஜென்மாந்திரங்களாக வருவது. திருவையாறு காலபைரவர் சந்நிதியில் சதா எரிந்து கொண்டிருக்கும் குங்கிலியக் குண்டத்தைப் பார்க்கலாம். கோவில்கள், திருத்தலங்களின் பிராகாரங்களின் வீசும் வாசனை தனித்தன்மை கொண்டவை. மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் எங்கு திரும்பினாலும் தாழம்பூ வாசனை கமழும். மீனாட்சிக்கு சாத்தும் குங்குமம் தாழம்பூவால் செய்யப்பட்டது. திருவண்ணாமலை கோவில் வாசலில் கற்பூர வாசனையும் விபூதி வாசனையும் மணக்கும். தஞ்சை பருத்தியப்பர் கோவிலில் இலுப்பைப்பூ வாசனை இருக்கும். ஆலயத்தைச் சுற்றி இலுப்பைத் தோப்பு, திருப்பதி கோவிலைச் சுற்றி செண்பக வாசனை, உள்ளே போகப் போக பச்சைச் கற்பூரமும் ஏலக்காயும் கலந்த மணம் காற்றில், குருவாயூர் கோவிலில் சந்தனம் மணக்கும். குருவாயூரப்பனுக்கு 'பரிமளப்ரியன்' என்ற பெயரும் உண்டு.

ஆம்! கற்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ? திருப்பவழ செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ என்று நாதமழை பொழியும் நாடல்லவா இது. இஸ்லாமிய திருமண விழாக்களில் அத்தரை எடுத்து நெற்றியில் பிறைதீட்டி பொட்டும் வைப்பார்கள். அது மண அரங்கின் மனத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். காலத்தின் வாசனையை ஏற்கெனவே எழுதிய கவிராயரின் மறைஞான பட்டறிவு இறை ஒளியின் மகத்துவத்தையும் மருத்துவத்தையும் உணரச் செய்கிறது.

**'ஞானத்தின் சிறிய புத்தகம்'**

**இந்து தமிழ்திசை வெளியீடு**

**திருத்தலங்களின் பிராகாரங்களில் வீசும் வாசனை தனித்தன்மை கொண்டவை. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் எங்கு திரும்பினாலும் தாழம்பூ வாசனை கமழும். மீனாட்சிக்கு சாத்தும் குங்குமம் தாழம்பூவால் செய்யப்பட்டது.**





# குழந்தை கிருஷ்ணனுக்கு முடிஎடுத்த அம்பாஜி ஆலயம்!

அம்பாஜி மந்திர்....

இந்த ஆலயம் குஜராத் மாநிலத்தில் இருக்கிறது.

அங்குள்ள பானஸ்கந்தா மாவட்டத்திலிருக்கும் அம்பாஜி என்ற ஊரில் இந்த கோவில் இருக்கிறது.

இது ஒரு சக்தி பீடம்.

சக்தியின் இதயம் விழுந்த இடமிது.

புராண காலத்தில் தட்சன் ஒரு யாகம் நடத்துகிறார்.

அதற்கு மருமகன் சிவபெருமானை அவர் அழைக்கவில்லை.

அதனால் கோபமுற்ற அன்னை பார்வதி, அதைப்பற்றி கேட்பதற்காக தன் தந்தையை நாடிவருகிறார்.

அங்கு பார்வதி தேவிக்கும் அவரின் தந்தைக்குமிடையே வார்த்தை மோதல் உண்டாகிறது.

அங்கு அவமானமடைந்த பார்வதி யாககுண்டத்தில் இறங்கி தன் உயிரை மாய்த்துக்கொள்கிறாள்.

அதைத் தொடர்ந்து, தன் மனைவியின் இறந்த உடலை வைத்துக் கொண்டு சிவபெருமான் ருத்ர தாண்டவம் ஆடுகிறார்.

அதன்காரணமாக பூலோகத்திற்கு ஏதாவது பாதிப்பு உண்டாகி விடுமோ என்று பயந்த விஷ்ணு, தன் சுதர்சன சக்கரத்தை எறிய, அது சக்தியின் சரீரத்தை 51 துண்டுகளாக ஆக்குகிறது.

அந்த சரீரத்தின் துண்டுகள் பாரதத்தின் பல இடங்களில் விழுகின்றன.

அம்பாஜி என்ற இந்த இடத்தில் சக்தியின் இதயம் விழுந்தது.

அந்த இடத்தில்தான் இந்த ஆலயம் இருக்கிறது.

இங்கிருக்கும் கருவறையில் ஒரு கல் மட்டுமே இருக்கிறது. அதற்கு

✡ **மகேஷ் வர்மா**

உருவம் கிடையாது.

அந்த கல்லை பல்வேறு வகைகளில் அலங்காரம் செய்வார்கள். உயரமாக இருக்கும் அந்த கல்லை தினமும் காலையிலும் மாலையிலும் அலங்காரம் செய்வார்கள். முகத்தில் சிங்கம், மயில் போன்ற பல உருவங்களைக் கொண்டுவருவார்கள்.

காலையிலும் மாலையிலும் இந்த ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நடத்தப்படுகிறது.

இந்த ஆலயம் ராஜஸ்தானுக்கும் குஜராத்திற்கும் மத்தியிலுள்ள அராசு என்ற மலையின் அடிவாரத்தில் இருக்கிறது.

பௌர்ணமி காலத்தில் அதிகமான கூட்டம் இருக்கும். ஜூலை மாதத்தில் ஏராளமான பக்தர்கள் இந்த கோவிலுக்கு வருவார்கள். அந்தச் சமயத்தில் தீபாவளி பண்டிகையைப்போல மொத்த ஊரே அலங்காரத்தில் மின்னும்.

இப்போது இருக்கும் ஆலயம் 1,200 வருடங்களுக்கு முன்னால் புதுப்பித்து கட்டப்பட்டது.

இந்த ஆலயத்திலுள்ள சிலைக்கு மேலே இருக்கக்கூடிய கோபுரம் 103 அடிகள் உயரத்தைக் கொண்டது.

அந்த கோபுரத்தில் 358 கலசங்கள் இருக்கின்றன.

2008-ஆம் வருடத்தில் ஜூலை மாத திருவிழா சமயத்தில் 25,000 பக்தர்கள் இங்கு வந்தனர்.

ஒருகாலத்தில் சரஸ்வதி என்ற நதி இங்கு ஓடியதாக வரலாறு.

கடல் மட்டத்திலிருந்து 490 மீட்டர்





(1600 அடிகள்) உயரத்தில் இந்த கோவில் இருக்கிறது.

இந்த ஆலயத்தைப் பற்றிய குறிப்பு தந்திர சூடாமணியில் இருக்கிறது.

வல்லபி மன்னரான, சூரிய வம்சத்தைச் சேர்ந்த அருண்சேன் என்ற அரசன் இந்த ஆலயத்தை 4-ஆம் நூற்றாண்டில் கட்டியிருக்கிறான்.

பகவான் கிருஷ்ணர் சிறு குழந்தையாக இருந்தபோது, அவருக்கு இங்கு முடி எடுத்ததாக வரலாறு கூறுகிறது.

இராமர் இந்த கோவிலுக்கு வந்து வழிபட்டிருக்கிறார்.

தேசிய நெடுஞ்சாலை 48-ல் இந்த ஆலயத்திற்குப் பயணிக்க வேண்டும். அஜ்மீரிலிருந்து ரயிலில் பயணிக்க வேண்டும்.

அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து 167 கிலோமீட்டர் தூரத்தில் இந்த ஆலயம் இருக்கிறது.


சென்னையிலிருந்து அகமதாபாத்திற்குப் பயண நேரம் 32 மணிகள்.

இந்த ஆலயத்திற்கு அருகிலுள்ள ரயில் நிலையம் ஆபு ரோடு. அங்கிருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் இந்த கோவில் இருக்கிறது.

பலான்பூர் என்ற ஊரிலிருந்து 65 கிலோ மீட்டர் தூரத்தில் இந்த கோவில் அமைந் திருக்கிறது.

பேருந்து, ஜீப், வாடகைக் கார் ஆகிய வற்றின்மூலம் ஆலயத்திற்குச் செல்லலாம்.

●



# ஓஷோ மதிக்கும் புத்தரின் மகத்தான செயல்!

கவுதம புத்தரால் பெரிதும் கவரப் பட்டவர் ஓஷோ.

அவருடைய அருமைகளையும், பெருமைகளையும் பல இடங்களிலும் ஓஷோ பேசியிருக்கிறார்.

புத்தரின் ஒரு மகத்தான செயல் ஓஷோவைப் பெரிதும் கவர்ந்தது.

அது என்ன?

ஆடம்பர வாழ்க்கையை விட்டு புத்தர் வெளியே வந்ததுதான்...

அரண்மனை வாழ்க்கையைத் துறந்து விட்டு ஓடி வந்ததுதான்...

தன் தலையிலிருந்த மகுடத்தைக் கழற்றி வைத்து விட்டு வந்த உயர் செயல் தான்...

அரச வாழ்க்கையை வேண்டாமென விட்டெறிந்து விட்டு வருவது என்றால், அது சாதாரண விஷயமா?

கவுதம புத்தரைப் போன்ற ஞான நிலையை அடைந்த ஒரு மனிதரைத் தவிர, வேறு யாரால் அப்படிச் செய்ய முடியும்?

செல்வச்செழிப்பைத் துறப்பது என்பதை சாதாரண ஒரு மனிதனால் செய்ய முடியுமா?

கவுதம புத்தர் அத்தகைய ஒரு காரியத்தைச் செய்ததால் தான் அவரை மகத்தான மனிதர் என்று நாம் நினைக்கிறோம்.



✡ சுரா

புத்தரின் அந்தச் செயலின் மூலம் மக்களுக்கு ஒரு மிகப் பெரிய உண்மையைக் கூறுகிறார் ஓஷோ.

அது என்ன?

'மகுடம் என்பது ஆணவத்தின் அடையாளம்... கவுரவத்தின் அடையாளம்... ஆடம்பரத்தின் ஆடையாளம்... பணத் திமிரின் அடையாளம்....

அதைக் கழற்றி வைத்து விட்டு, சாதாரண மனிதனாக புத்தர் வருகிறார் என்றால், அவர் ஞானத்தின் அடையாளம் என்று அர்த்தம்.

அவர் மகுடத்தை நீக்குவதன் மூலம், ஆணவத்தை நீக்குகிறார்... ஆடம்பரத்தின் சின்னத்தை நீக்குகிறார்... கவுரவத்தை நீக்குகிறார்...

எப்போது அவர் மகுடத்தைத் தன் தலையிலிருந்து கழற்றினாரோ, அப்போதே அவர் புதிய மனிதராக பிறப் பெடுத்து விட்டார்... கர்வமற்ற மனிதராக ஆகிவிட்டார்... தலைக்கனமற்ற மனிதராக ஆகிவிட்டார்... பகட்டான போக்குகளிலி ருந்து விடுதலை பெற்ற மனிதராக மாறி விட்டார்... பளபளப்பான வாழ்க்கையை விட்டெறிந்த ஞானியாக உருமாற்றம் பெற்றவராக ஆகி விட்டார்.

இப்போது நாம் காணும் கவுதம புத்தர் சாதாரணமானவர்... எளியவர்.... பணிவானவர்... பிறரிடம் யாசிப்பவர்... ஆணவ குணம் சிறிதும் இல்லாதவர்.... ஞானத்தின் உறைவிடமாக இருப்பவர்... ஆன்மீக உலகத்தில் வாழ்பவர்.... மக்களின் கஷ்டங்களைத் தன் கஷ்டங்கள் என நினைப்பவர்....

தனக்குக் கிடைத்த செல்வச் செழிப்பில் மிதக்கக் கூடிய வாழ்க்கையை ஒரு இரவு வேளையில் வேண்டவே வேண்டாம் என்று ஒதுக்கி விட்டு, சாதாரண மனித வாழ்க்கையை வாழ்ந்ததால்தான் கவுதம புத்தர் காலத்தைக் கடந்து உலக மக்களின் உள்ளங்களில் நிரந்தரமாக உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.



காவி ஆடைகள் அணிந்தவரெல்லாம் ஞானிகள் அல்ல.

நீளமாக தாடியை வளர்த்து விட்டாலே அவர்கள் ஞானிகள் அல்ல.

ருத்திராட்ச மாலையை அணிந்தவரெல்லாம் ஞானிகள் அல்ல.

வசதி நிறைந்த வாழ்க்கையை உதறிய... மகுடத்தை நீக்கி விட்டு வீதிக்கு வந்த... அதிசயப் பிறவியான கவுதம புத்தர்தான் ஞானி... அவர் தான் உண்மையான துறவி... '

புத்தரைப் பற்றிய ஓஷோவின் இந்த கூற்றில் நூறு சதவிகிதம் உண்மை நிறைந் திருப்பதை நம்மால் உணர முடியும்.

அதனால்தான் கவுதம புத்தர் உலக மக்களால் மதிக்கப்படுகிறார்...கொண்டாடப் படுகிறார்.

●

# அஞ்சாத வாழ்வு அருளும்
# அஞ்சனை மைந்தன்!



இந்துக்கள் பெரிதும் போற்றி வணங்குகிற இதிகாசங்கள் இரண்டு. ஒன்று இராமாயணம்; மற்றொன்று மகாபாரதம்.

இராமாயணம் என்றதும் நினைவுக்கு வருவது இராமர், லட்சுமணன், சீதாபிராட்டி மட்டுமல்ல இராமபிரானின் ஆத்யந்த பக்தனாக விளங்கும் ஸ்ரீ ஆஞ்சநேயரும் ஆவார்.

கிஷ்கிந்தா என்ற வனப் பகுதியை ஆண்ட கேசரி என்ற வானர மன்னனின் மனைவி அஞ்சனாதேவி குழந்தை வரம் வேண்டி சிவபெருமானை நோக்கி தவம் இருந்தார். அவளிடம் ஈசனின் சக்தியை கொண்டுபோய் சேர்த்தார் வாயுபகவான். அதன்படி ஒரு மார்கழி மாத மூல நட்சத்திரம் அமாவாசையும் இணைந்த நன்நாளில் அவதரித்தார் அஞ்சனை மைந்தனாகிய ஆஞ்சநேயர்.

சிவபெருமானின் சக்தியில் தோன்றியவர் என்பதால் ஆஞ்சநேயருக்கு இயல்பாக அதீத பலம் இருந்தது. அவர் குழந்தையாக இருந்தபோது சூரிய கிரகண காலம் வந்தது. ராகுபகவான் சூரியனைப் பிடிப்பதற்காக நெருங்கிய போது சூரியன் செம்மை நிறமாக ஒரு பழம்போல இருந்தது. சூரியனை பழம் என்று நினைத்த குழந்தை ஆஞ்சநேயர் அதைப் பறித்து சாப்பிட எண்ணி வானில் சூரியனை நோக்கி பறக்க தொடங்கினார். குழந்தை வடிவ ஆஞ்சநேயர் வருவதைப் பார்த்த ராகுபகவான் அதைத் தடுத்து நிறுத்த முயன்றார். ஆனால் குழந்தை ஆஞ்சநேயரோ ராகுவை தள்ளிவிட்டு சூரியனை நோக்கி முன்னேறினார். இதனால் 'கிரகணம்' தடைபடுமோ என்று அஞ்சிய ராகு தேவர்களின் அதிபதியான இந்திரனிடம் முறையிட்டார். உடனே அங்கு வந்த இந்திரன் ஆஞ்சநேயரிடம் 'குழந்தாய் இது பழமல்ல சூரியன் என்று கூறியும் அவர் கேட்காமல் அடம் பிடித்தார். என்ன செய்வது என திகைத்த தேவேந்திரன் ஒரு கட்டத்தில் கோபமடைந்து தன்னுடைய வஜ்ஜிராயுதத்தால் ஆஞ்சநேயரின் தாடையில் தாக்கினார். இதனால் ஆஞ்சநேயர் பூமியில் போய் விழுந்தார். இந்திரன் தாக்கியதில் அவரது தாடை வீங்கியது. இதை அறிந்ததும் வாயு பகவானுக்கு கோபத்தை உண்டு பண்ணியது! அவர் தன் காற்றையெல்லாம் இழுத்துக்கொண்டு ஒரு குகைக்குள் இருந்து கொண்டார். இதனால் பிரபஞ்சத்தில் எங்கும் காற்று இன்றி அனைத்து ஜீவராசிகளும் துன்பத்தில் ஆழ்ந்தன. இதைக்கண்டு பதற்றம் அடைந்த இந்திரன் "வாயு பகவானே ஏன் இப்படி செய்தீர்கள்?" என்று கேட்டார்.

ஈசன் சிவபெருமானிடம் சக்தியைப் பெற்று அதனைக் கொண்டுபோய் அஞ்சனையிடம் கொடுத்து அதன்மூலம் பிறந்தவன் ஆஞ்சநேயர். அவர் அவதரித்ததற்கு உதவிய எனக்கு ஆஞ்சநேயரைத் தாக்கியது வேதனைப்படுத்திவிட்டது! எனவே "இனிமேல் எந்த அஸ்திரங்களாலும் ஆஞ்சநேயரை ஒன்றும் செய்ய முடியாது என்ற வரம் அளிக்கவேண்டும்" என்று கோரினார் வாயு பகவான். அதன்படி இந்திரன், பிரம்மா, அக்னி உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து அந்த வரத்தை அளித்தனர். எனவே அனுமனுக்கு 'அபராஜிதன்' என்ற பெயர் உண்டு. இதற்கு 'வெல்ல முடியாதவர்' என்று அர்த்தமாகும்!

அதித சக்தியுடன் திகழ்ந்த ஆஞ்சநேயர் பல அரிய செயல்களைச் செய்துள்ளார்.

✡ அயன்புரம் த. சத்தியநாராயணன்

இராவணனால் கடத்தப்பட்ட சீதையை மீட்கும் வழி தெரியாமல் கவலையுற்றிருந்த ஸ்ரீராமருக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் சிறந்த சேவகனாக தோளோடு தோளாக நின்று பணியாற்றினார்.

சுக்ரீவனிடம் இராமரை அழைத்துசென்று வாலிக்கும் சுக்ரீவனுக்கும் இருந்த பகையை முடிவுக்கு கொண்டு வந்தார்.

இராவணனுடனான யுத்தத்தில் இந்திரஜித்தின் அம்புபட்டு மயங்கிய லட்சுமணனைக் காப்பாற்றிட சர்வரோக நிவாரணியாக இருந்த சஞ்சீவிமலையை பெயர்த்து சுமந்துவந்தார்!

அசோகவனத்தில் சோர்வுற்றிருந்த சீதாபிராட்டியை இராம தூதனாக சென்று சந்தித்து ஆறுதல்படுத்தினார். இவை அனுமன் நிகழ்த்திய அற்புதங்களாகும்.

வெற்றிலை, வடைமாலை, துளசி மாலை, செந்தூரம் இவை ஆஞ்சநேயருக்கு உகந்தவைகளாகக் கருதப்படுகின்றன.

## வெற்றிலை

அசோகவனத்தில் கவலையுற்று இருந்த சீதாதேவி ஒரு கட்டத்தில் தன் உயிரை மாய்த்துக்கொள்ள தீர்மானித் தார். அத்தருனம் அங்குவந்த அனுமன் ராமராம என்று ராம நாமத்தை உச்சரித்தபடி இராமபிரான் தந்த கணையாழியைக் காட்டினார். இதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்த சீதாதேவி அங்கிருந்த வெற்றிலைக் கொடியிலிருந்து ஒரு வெற்றிலையைப் பறித்து அனுமனின் தலையில் போட்டு 'சிரஞ்சீவியாக இரு' என்று ஆசீர்வதித்தாராம். இதனால் 'வெற்றிலைப்பிரியர்' ஆனார். அதனால் பக்தர்கள் வெற்றிலை மாலை சூட்டினால் மிகவும் அகமகிழ்ந்து அருள்புரிவார் அஞ்சனை புத்திரன்!

திருமாலுக்கு மிகவும் பிடித்தது துளசி. திருமாலின் அவதாரம் ஸ்ரீராமர். எனவே அவருக்கு துளசி மாலை சாற்றப்படுவதுபோல் ராம பக்த அனுமனுக்கும் துளசி மாலை சாற்றப்படுகிறது.

## வடை மாலை

ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு வடை மாலை சாற்றி வழிபடுவது மிகச்சிறந்த ஒன்று ஆகும். இராவண யுத்தம் முடித்து அயோத்தி திரும்பிய இராம பிரானுக்கு பட்டாபிஷேக விழா நடந்தது. அதில் கலந்துகொண்ட அனுமனுக்கு சீதாதேவி முத்துமாலையைப் பரிசளித்தார். அதைப் பெற்றுக்கொண்ட அனுமன் அந்த மாலையிலி ருந்த முத்துக்களைக் கடித்து துப்பிக்கொண்டிருந்தார். இதைக்கண்ட சீதாதேவி என்ன அனுமன் இப்படி செய்கிறாய் என்று வினவ.

"தாயே இந்த மாலையில் இருந்த முத்துக்கள் ஒன்றில் கூட 'ராம ரசம்' இல்லை. ராம ரசம் இல்லாத எந்தப் பொருளும் எனக்கு உயர்ந்தது இல்லை என்றார். அனுமனின் இராம பக்தியை நினைத்து அனைவரும் அதிசயித்தனர்.

இதனால் பக்தர்கள் இராம நாமத்தை உச்சரித்தபடி உளுந்து மாலை கைகளால் தட்டி தட்டி வடை சுட்டு அனுமனுக்கு மாலையாக சாற்றுவார்கள். இராம நாமத்தை உச்சரித்தபடி சுட்ட வடை என்பதால் அதில் இராம ரசம் இருக்கும் என்று அதனை விரும்பி சுவைத்து மகிழ்ந்து அருள்புரிவாராம் அனுமன்!

## செந்தூரம்

எல்லா கோவில்களிலும் விபூதி, குங்குமம் வழங்குகிறார்கள். ஆனால் ஆஞ்சநேயர் ஆலயங்களில் மட்டும் நெற்றியில் இட்டுக்கொள்ள 'செந்தூரம்' வழங்கப்படுகிறது. இதற்கு காரணம் செந்தூரத்தை அசோகவனத்தில் இருந்த சீதை தன் நெற்றியில் இட்டுக்கொண்டிருந்தார். இதைக்கண்ட அனுமன் தாயே நெற்றியில் செந்தூரம் இடுவது ஏன் என்று வினவினார்! "இராமபிரான் நீண்டகாலம் ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் அதற்காகத்தான்" என்று சீதாதேவி சொல்ல 'ஸ்ரீ ராமபிரான் நலமுடன் வாழ வேண்டும் என்று கூறி அனுமன் உடல் முழுவதும் செந்தூரம் பூசிக்கொண்டாராம். எனவே ஆஞ்சநேயர் ஆலயங்களுக்கு செல்லும் பக்தர்களுக்கு செந்தூரம் வழங்கப்படுவதுடன் அனுமனுக்கும் சாற்றப்படுகிறது.

அனுதினமும் அனுமனை வழிபட்டால் எந்த துன்பங்களையும் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. மகாவிஷ்ணு, சிவன், பிரம்மா, இந்திரன், கருடாழ்வார் ஆகிய அத்தனை கடவுளரையும் வழிபட்ட பலன் அனுமனை வணங்கினால் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. மேலும் அனுமனின் வாலில் நவகிரகங்கள் ஐக்கியமாகி இருப்பதால் அவரை வணங்கி வழிபடுவோர்க்கு நவகிரக தோஷங்கள் அண்டு வதில்லை.

அறிவுக்கூர்மை, அச்சமின்மை, ஆன்மபலம், நோயற்ற வாழ்வு இவை ஆஞ்சநேயரை வணங்கி வழிபடுவோர்க்கு கிட்டும்.

அஞ்சாத வாழ்வு அருளும் அஞ்சனை மைந்தனாம் அனுமனை... பூஜித்து வணங்கி அவரின் திருவருளைப் பெறுவோம்! ●





# மலைமேல் பூஜை! மழை பொழிய வைத்த சப்த கன்னியர்கள்!

**நா**ங்கள் மலைமீது ஏறிச்செல்லும் இடம் பார்க்கவே மிகவும் அழகாக இருந்தது. இதை மணிமுத்தாறின் தலையணை என்று கூறுவார்கள். கோடை காலத்தில் இங்கு வந்துதான் மக்கள் பொழுது போக்குவார்களாம். உள்ளூர்காரங்களுக்குதான் இந்த இடம் மிகப் பரிச்சையமான இடம். ஒரு காலத்தில் குழந்தைகளோடும் குடும்பத்துடன் வருபவர்களுக்குத்தான் தற்போது வனத்துறை தடைபோட்டுவிட்டதே. ஆகவே, யாரும் இங்கே வருவது கிடையாது. ஆனால் ஆள்கள் வராத காரணத்தினால் ரம்மியமாக இருந்தது. இங்கு பிளாஸ்டிக் பொருட்களும், பாட்டில்களும் காணப்படவில்லை. அது ஒருவகையில் சந்தோஷம்தான்.

சமதளமாகத்தான் எங்கள் நடைபயணம் செல்கிறது. பெரிய பெரிய பாறைகள் தெரிகிறது. சில இடங்களில் குகை போன்ற தோற்றமும் காணப்படுகிறது. ஒரிடத்தில் மரம் ஒன்று சாய்ந்து கிடந்தது. அதையெல்லாம் தாண்டிச் செல்கிறோம். எங்கும் பசுமையாக இருக்கிறது.

ஜமீன்தார்கள் காலத்தில் மிகவும் ரம்மியமாக இருந்த இடம். இந்த வழியாக தாமிரபரணியின் துவக்க இடமான பாண தீர்த்தம் கூடச்சென்று விடலாமாம். வில் வண்டி மற்றும் குதிரைகளில் ஜமீன்தார்கள் இந்த வழியில் சென்று வந்துள்ளார்களாம். முற்காலத்தில் ஆற்றைக்கடந்து செல்ல பாலங்கள் அமைக்கப்பட்டிருந்ததாம். அதன் சுவடுகள் பல கிடந்தது. சில இடங்களில் இரும்பு பாலம் இருந்த சுவடு இருந்தது. ஆங்கிலேயர்கள்கூட இந்த வழியாகத்தான் பாணதீர்த்தம் சென்றுள்ளார்கள். அங்கிருந்த பங்களாவில் தங்கியுள்ளார்கள். ஜமீன்தார்கள் ஆடி அமாவாசையன்று பாணதீர்த்தத்தில் திதி கொடுக்க வரும் பக்தர்களுக்காக பல கலை நிகழ்ச்சிகளை இந்தப் பங்களாவில் நடத்தியுள்ளார்கள். பிரபலங்களின் நாட்டியங்கள் அரங்கேறிய இடமிதுவாகும். தற்போது நடந்தே செல்லமுடியாத அளவுக்கு பாதைகள் அழிந்துவிட்டது. முன்னால் செல்லும் ஒருவர் அடர்ந்து செடிகளை அகற்றி எங்களுக்கு வழியை உருவாக்கிக் கொண்டிருந்தார். யாராவது வழி தப்பிச்சென்று விடக் கூடாது என்பதில் குழுத்தலைவர் கட்ட

# சித்தர்களைத் தேடி மலைப்பயணம்! 6



பொம்மனும் ஊர் தலைவர்களும் கவனமாக இருந்தார்கள். எனவே அவர்கள் எங்கள் முன்னும் பின்னும் அரணாக வந்தனர்.

சுமை தூக்கிச்செல்பவர்கள் எங்கள் முன்னே நடந்து சென்று கொண்டிருந்தார்கள். இந்த பூமி செழிக்கவேண்டும். அதற்காக பூஜை பொருளை சுமக்கவேண்டும் என கடினமான இந்த வேலை செய்தவர்களை பாராட்டாமல் இருக்கமுடியுமா? எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு எங்களோடு சுமார் 20 அர்ச்சகர்கள் இருந்தனர். அதில் வயதான அர்ச்சகர் ஒருவர் தலைவராக வருகை தந்திருந்தார். அவருக்கு சமதளத்திலேயே நடக்க இயலாது. ஆனால் ஆர்வத்தில் இந்த கரடு முரடான பாதையில் நடந்து கொண்டிருக்கிறார். எல்லோருக்குமே இந்த பூமி செழிக்க மழை பொழிய வேண்டும் என்ற ஆசை தான். மணிமுத்தாற்றங் கரையில் மூன்று இடங்களில் ஆற்றை கடக்கவேண்டும். ஆற்றில் ஆழம் அதிகமாக இருக்கும் காரணத்தினால் பாறைகளில் தத்தி தாவித்தான் மறுபுறம் சென்றோம். சில இளைஞர்கள் எங்களை பிடித்து தூக்கிவிட்டனர்.


இப்போதுதான் ஒரு சம்பவம் நடந்தது. எங்களோடு பூஜை பொருள்களை தூக்கிவந்த சுமை தூக்கிகள் பாதை மாறி சென்று விட்டனர். பூஜை பொருள் இல்லாமல் பூஜை வைக்க முடியுமா? எங்கள் குழுவே தவித்து நின்றது.

முற்காலத்தில் இந்த ஆற்றங்கரையில் பழங்குடிகளான காணிகளின் மிகப்பெரிய குடியிருப்பு இருந்துள்ளது. இங்கு ஏற்பட்ட காலரா நோயினால் மிக அதிகமான உயிரிழப்பு ஏற்பட்டது. இதனால் இங்குள்ள காணி இனமக்கள் தங்கள் குடியிருப்புகளைத் தாமிரபரணி கரையான

**சப்த கன்னிகளும் இந்த பக்கம்தான் சுத்துவாவ. அவுக நாம போய் பூஜை செய்யப் போறோமே அந்த இடத்திலதான் தினமும் வந்து விளையாடுவாக. அதுக்கப்புறம் அந்த பக்கத்தில இருக்கிற அருவியில குளிப்பாவ...**



முத்தாலங்குறிச்சி **காமராசு**



காரையாறு மற்றும் மயிலாறு பகுதிக்கு மாற்றிவிட்டார்கள். குடியிருப்புகள் மாறிய காரணத்தினால்இவ்விடம் அடர்ந்த காடாக மாறி விட்டது.

தொடர்ந்து ஆற்றங்கரை வழியாக நடந்தோம். ஒவ்வொரு இடத்துக்கு ஒவ்வொரு பெயர் இருக்கிறது எனக் கூறினார்கள். கட்டபொம்மன் அய்யா அவ்விட பெயர்களை எங்களிடம் கூறிக் கொண்டே வந்தார். சுரைக்காய் ஓடை, கீழ கண்டம்பாறை, மேல கண்டம்பாறை என பெயர்களை கூறிக் கொண்டே அவர் முன்னால் நடந்தார். நாங்களும் அவர் பின்னாலேயே நடந்தோம்.

மிகப்பெரிய ஏற்றத்தில் ஏறினோம். சருக்கி விழுந்துவிடுவோம்போல இருந்தது. ஒரு பக்கம் அதாள பாதாளம். மறுமக்கள் மலை குன்றின் சரிவு. அந்த பாதையில்தான் நடந்து செல்கிறோம். பல குகைகள் இருந்தன. அதையும் கடந்தோம்.மணிமுத்தாற்றை மூன்று தடவை கடந்தோம். ஆற்றை கடந்தோம். மிகப்பெரிய பாறைகளில் இங்கிருந்து மறுபுறத்துக்கு தாண்டி குதித்தோம். இளைஞர்கள் மற்றவர்களை கையைப் பிடித்து தாங்கி மறுபுறம் கடத்திச் சென்றனர்.

ஒவ்வொரு இடத்திலும் ஆறு வரும் போது தலைகீழாக இறக்கத்தில் இறங்க வேண்டிய திருக்கிறது. ஆற்றைக் கடந்தவுடன் சரியான முட்டு ஏத்தம் ஏறவேண்டியிருந்தது. அர்ச்சகர்களில் பலர் சோர்ந்துவிட்டனர். இதில் ஏறுவதற்காக யாத்திரிகர்கள் அனைவர் கையிலும் கம்பு ஒன்றை கொடுத்துவிட்டார்கள். அதை தரையில் ஊன்றித்தான் ஏறுகிறார்கள்.

சுமார் ஐந்து வருடத்துக்குமுன்பு இது போன்ற ஒரு பூஜைக்கு மக்கள் வந்து இருக்கிறார்கள். அதன்பின் யாருமே இந்த பகுதியில் வரவில்லை. எனவே பாதை முழுவதுமே அடர்ந்து காணப்பட்டது. மனிதர்கள் நடந்தே செல்ல முடியாத இந்த பாதையில் பக்தர்கள் மிகவும் கஷ்டப்பட்டு, உயிரை பணயம் வைத்து பயணம் செய்து கடக்கிறோம். எங்குமே ஓய்வு எடுக்க முடியவில்லை.

இந்தப் பயணத்தின்போது அகத்தியரை வேண்டியபடியே நடந்தோம்.

பொதிகை மலை முழுவதும் அகத்தியரின் கட்டுப்பாடுதான். அவரை லாட சன்னியாசி என்று அழைப்பார்கள். ஆங்கிலேய துரை ஒருவன் அகத்தியரை வணங்கும் பக்தர்கள் உடலில் அகத்தியர் புகுந்து அருளாசி கூறுவதை கண்டு, வெகுண்டான். ‘அகத்தியர் உண்மையான தெய்வம் என்றால் இதோ சாமியாடுபவனை இந்த நெருப்பில் இறங்க சொல். அவன் உயிரோடு திரும்பிவந்தால் அகத்தியர் இருப்பதாக நம்புகிறேன்’ என்று கூறியுள்ளான்.

அடுத்த நிமிடம் நெருப்பு உருவாக்கப் பட்டது. அதில் அகத்தியர் அருள் கொண்டவரோ, உருட்டிய விழியுடன், பல்லை கடித்துக் கொண்டு வெறி வந்தவர்போல இறங்கினார். அவருக்கு எந்த பாதிப்பும் இல்லை. எனவே அதிர்ந்தே போய்விட்டான் துரை. ‘லாட் சன்னியாசி’ என தன்னை மறந்து கத்தியுள்ளான். ‘லாட்’ என்றால் மிகப்பெரியவன் என அர்த்தம். எனவே அகத்தியர் லாட சன்னியாசி ஆகிவிட்டார். அகத்தியர் போன்ற பதினெட்டு சித்தர்களை வணங்குபவர்கள் இங்கே அவர்களை சித்தர்களாக மட்டும் வணங்குவதில்லை. தங்களது குலதெய்வ

**பக்தர்கள் உடலில் அகத்தியர் புகுந்து அருளாசி கூறுவதை கண்டு வெகுண்டான். 'அகத்தியர் உண்மையான தெய்வம் என்றால் இதோ சாமியாடுபவனை இந்த நெருப்பில் இறங்க சொல். அவன் உயிரோடு திரும்பிவந்தால் அகத்தியர் இருப்பதாக நம்புகிறேன்!'**

மாகவே வணங்குகிறார்கள். எனவேதான் இங்கே அகத்தியரை நம்பியே இந்த பயணம் நடைபெறுகிறது. அதுவும் இடைக்காடரை போலவே நவகிரகங்களை மயக்கி மழை பெய்ய வைத்ததுபோலவே, தெய்வங்களை மயக்கி மழை பொழிய வைக்க இந்த அப்பாவி பக்தர்கள் கடினமாக நடந்துகொண்டிருக்கி றார்கள்.

சித்தர்கள் நவக்கிரங்களை ஏமாற்றி விட்டார்கள். அவர்களுக்கு அறிவு இருக்கிறது. தவ வலிமை இருக்கிறது. ஆனால் நாமே சாதரண மனிதர்கள். இந்த பூவுலகில் வசிக்கும் ஒரு பாவ ஜென்மங்கள். நாங்கள் இந்த பூஜையை சிறப்பாக செய்ய முடியுமா?

இன்று நாம் நடத்தபோகும் பூஜைக் கும் இடைக்காடர் நவகிரங்களை மயக்கி மழை பொழிய வைத்த சம்பவத்துக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது என்கிறார்களே. அப்படி இங்கே என்ன தான் பூஜை நடக்கப் போகிறது. குழுத்தலைவர் கட்டபொம்ம னிடம் கேட்டோம். அவர் சிரித்துக்கொண்டே சொன்னார்.

"அய்யா. நாம போற இடம் இருக்கே. அது ஆள் நடமாட்டம் இல்லாத இடம். இங்க மிருகங்கள் மட்டும்தான் சுத்தும். அதே நேரம் சப்த கன்னிகளும் இந்த பக்கம்தான் சுத்துவாவ. அவுக நாம போய் பூஜை செய்யப் போறோமே அந்த இடத்திலதான் தினமும் வந்து விளையாடுவாக. அதுக்கப்புறம் அந்த பக்கத்தில இருக்கிற அருவியில குளிப்பாவ. அது சரி. நாம கீழ வயக்காட்டுல மழை தண்ணி இல்லாம கஷ்டப்படுதோம். அவுக மட்டும் அருவியில குளிச்சிக்கிட்டு இருக் காவலே, நாம அதை தடுக்கணுமுன்னு நினைச்சி ஒரு வேலை செய்வோம்.

அங்கேபோய் நாம கூட்டிட்டு போறோமே இந்தவேத அந்தணர்கள். அவுகளை நல்லா வேதம் பாடி பூஜை செய்ய சொல்வோம். சப்தகன்னிகள் அந்த பூஜைக்கு மயங்கி அந்த இடத்துக்கு வருவாவ. அதுக்குள்ள முன்னால ஒரு கூத்து பண்ண ஆரம்பிச்சிடுவோம். அது என்ன கூத்து தெரியுமா? அதோ முன்னால போவுதே இரண்டு கிடாய். அந்த கிடாயை வெட்டி அதன் ரத்தத்தை அங்கன சப்த கன்னிகள் விளையாடும் பாறை மேலே தேய்ச்சு அசிங்கப்படுத்திட்டு, அந்த கிடாய் தலையை ஒரு உலை மூடியில வச்சு அருவி கசத்துல போட்டுட்டு மேல் பகுதிக்கு போயிருவோம்.

பூஜை மணத்துல அங்க சப்த கன்னிக வருவாவ. இங்க ரத்தம் தோய்ந்த இடத்தில கிடக்கிற அசிங்கத்தை பார்த்து அதிர்ச்சி அடைவாவ. நாம விளையாடுற இடம் இப்படி கிடக்கேன்னு, வருண பகவானை நோக்கி வேண்டி நிப்பாவ. உடனே வருண பகவான் இவுக கோரிக்கையை ஏத்து மழை பொழிய வைப்பாவ. வேணுமுன்னா பாருங்க நாம ஊருக்கு கிளம்பி மலையை விட்டு இறங்குமுன்பே மழை பொழிய ஆரம்பிச்சிடும். புது தண்ணி மணிமுத்தாறு அணைக்கு வந்திரும்னு' சொன்னார்.

எங்களுக்கு வித்தியாசமாக இருந்தது. இதுபோல ஒரு பூஜையை நினைக்கும் போது வித்தியாசமா தான் இருந்துச்சு. இது ஒரு குற்ற உணர்ச்சியை ஏற்படுத்துற பூஜையா இருக்கே. இது சாத்தியப்படுமா? கண்ணப்பன் தனது கண்ணை எடுத்து சிவனுக்கு வைத்தானே அதுபோன்ற ஒரு முரட்டு பூஜையாக அல்லவா இது இருக்கிறது என்று எண்ணினோம். ஆனாலும்

அவர்களின் நம்பிக்கை எனக்கு பிரமிப்பாக இருந்தது.

சரி இந்த சப்த கன்னியர்கள் யார்? அவர்களுக்கு வருண பகவானை மிரட்டி மழை பொழிய வைக்கும் சக்தி உள்ளதா? அப்படியென்றால் முதலில் நாம் சப்த கன்னியர்களை பற்றி அறியவேண்டும்.

சப்தகன்னியர் அல்லது சப்தமாதர் என்று தான் இவர்களை நாம் அழைக்கிறோம். இவர்கள் பிராம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி ஆகிய ஏழுபேர் ஆவார்கள். இவர்கள் யார்? இவர்கள் சக்தி தேவி தான். உலகை இயக்கும் ஐந்தொழில்கள் புரிந்து வரும் ஆதிசக்தி எடுத்த திருமேனிகளே, சப்த கன்னியர் என்னும் சப்த மாதாக்கள் .

ஒருவருக்கு குலதெய்வமே தெரியவில்லை என வைத்துக்கொள்வோமே. அவர்கள் தங்களது குலதெய்வமாக இந்த சப்த கன்னியர்களை தான் வணங்க வேண்டும். இந்த சப்த கன்னிகள் தோன்ற காரணம் என்னதெரியுமா? அசுரர்களை அழிக்க நமது உமையவள் எடுத்த அவதாரம் தான்.

ஒரு சமயம் சிவன் அநீதியை அழிக்க அந்தகாசூரன் எனும் அரக்கனுடன் போர் புரிந்தார். அந்த அரக்கன் சாதாரணவன் அல்ல.





அவன் உடலில் இருந்து ஒரு சொட்டு ரத்தம் விழுந்தாலும் கூட அதில் இருந்து மற்றொரு அசுரன் தோன்றவிடுவான். பலநாள் போராடியும் அசுரனை அழிக்க முடியவில்லை. போர் நடைபெறும் போது பல அசுரர்கள் தோன்றினார்களே தவிர அவர்களுக்கு அழிவு ஏற்படவில்லை. என்ன செய்ய என சிவன் யோசித்தான். உடனே விஷ்ணு பிரம்மா உள்பட தேவாதி தேவர்களுடன் ஆலோசனை செய்தான். உடனே ஒரே நேரத்தில் அவர்கள் சப்தகன்னிகளை உருவாக்கினார்கள்.

சிவன் தன் வாய் அக்னியிலிருந்து யோகேசுவரி என்ற சக்தியை தோற்றுவித்தார். யோகேசுவரி மகேசுவரி என்ற சக்தியை உருவாக்கினார். மகேசுவரிக்கு துணையாக பிரம்மா பிராம்மியை தோன்றுவித்தார். விஷ்ணு வைஷ்ணவியை தோற்றுவித்தார். இந்திரன் இந்திராணியையும், முருகன் கௌமாரியையும், வராக அவதாரம் வராகியையும், சண்டி சாமுண்டியையும் தோற்றுவித்தனர். இந்த சப்தகன்னிகள் ஒன்று கூடி அசுரனை அழித்தனர்.

இதுபோன்று பல்வேறு புராணங்கள் இவர்களைப்பற்றி உண்டு. மார்க்கண்டேய புராணத்திலும், காளிதாசனின் குமார சம்பவம் என்ற காவியத்திலும் இவர்கள் குறிப்பிடப்படுகிறார்கள்.

சும்ப - நிசும்ப என்ற அரக்கர்களை அம்பிகை அழிக்கப்போர் புரிந்த போது அவளுக்கு உதவியாக இத்தேவியர்கள் உற்பத்தி செய்யப்பட்டனர் என்றும் அதன் பிறகு அவர்கள் அரக்கர்களை அழித்தனர் என்றும் மார்க்கண்டேய புராணம் கூறுகிறது. காளிதாசனின் குமாரசம்பவம் என்ற காவியத்தில் சப்த கன்னியர் சிவனின் பணிப்பெண்டிர் என்ற குறிப்பும் கூறப்படுகிறது.

சப்தகன்னியரின் தோற்றத்தினைப் பற்றி மற்றொரு புராணக் கதை வேறு விதமாக பேசப்படுகிறது. மகிசாசுரன் கருவில் உருவாகாத பெண்ணால் மட்டுமே அழிவு உண்டாக வேண்டுமென வரம் பெற்றிருந்தான். அதனால் தேவர்களும்,

முனிவர்களும் மகிசாசுரனால் துன்பமடைந்தனர். அனைவரும் சென்று சிவனிடம் தங்களை காத்தருள வேண்டினர். உமையம்மையிடம் அனைவரையும் காத்தருள வேண்டினார் சிவன். அதனால் உமையம்மை தன்னிலிருந்து சப்த கன்னியர்களை தோற்றுவித்து மகிசாசுரனை அழித்தார். மகிசாசுரன் கொல்லப்பட்டதால் சப்த கன்னியர்களை கொலைப்பாவம் சூழ்ந்தது. அதனை நீக்க வேண்டி சப்தகன்னியர் சிவனை வேண்டினர்.



சிவன் கோலியனூர் எனும் தலத்தில் தன்னை வழிபட்டு வரும்படி கூறினார். சப்த கன்னியர்களை பாதுகாக்க தன்னுடைய அம்சமான வீரபத்திரனை உடன் அனுப்பி வைத்தார். இத்தலத்தில் சப்த கன்னியருக்கு தட்சிணாமூர்த்தியாக அமர்ந்து உபதேசம் செய்து கொலைப்பாவத்தினை நீக்கினார். என்று கோயில் தலபுராணம் கூறுகிறது.

மொத்தத்தில் அரக்கனை அழிக்க பிறந்தவர்கள் சப்த கன்னியர். இந்த சப்த கன்னியருக்கு கோபம் வரவழைத்து மழைபொழிய வைக்க வேண்டும் என்று நம்மோடு விவசாயிகள் நடுக்காட்டுக்குள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனாலும் எவ்வளவு தைரியம், சப்த கன்னிகள் குளிக்கும் இடத்தில் வந்து பாறையில் அசிங்கப்படுத்தி, அந்த இடத்தினை சுத்தப்படுத்த கன்னிகள் வருணபகவானை அழைப்பார்கள் என்று இவர்கள் பூஜை செய்ய வந்து கொண்டிருக்கிறார்கள்.

சப்தகன்னி வருவாரா? வருண பகவானை அழைப்பார்களா? அல்லது கோபத்தில் இந்த பூமியை வறண்ட பூமியாக மாற்றுவாரா? பல எண்ண ஓட்டங்கள் நமக்குள் இருந்தது.

வீறுகொண்டு நடந்தார்கள் பக்தர்கள். நாங்களும் அவர்கள் பின்னால் நடந்தோம். இந்த சமயத்தில்தான் மிகப்பெரிய சோதனை எங்கள் குழுவினருக்கு ஏற்பட்டது..

சுமை தூக்கிகளில் சுமார் 10 பேர் கொண்ட குழுவினர் பாதை மாறிச் சென்று விட்டனர். இவர்கள் மேலகண்டம்பாறை என்னும் இடத்தில் இருந்து பாதை தவறுதலாக கடந்து விட்டனர். இதனால் தாமிரபரணி நதி ஓடும் முக்கிய இடமான வானதீர்த்தம் செல்லும் பகுதிக்கு சென்று இருக்க வேண்டும். உடன் வந்தவர்கள் அவர்களை காணாமல் பதை பதைக்க ஆரம்பித்து விட்டனர். செல் போனில் தொடர்பு கொள்ளலாம் என்றால், யாருக்குமே டவர் கிடைக்கவில்லை. நட்ட நடு காட்டுக்குள் எப்படி தேடுவோம். எங்கே தேடுவோம்.

எல்லோருமே அதிர்ந்து விட்டனர். திக்கு தெரியாத காட்டில் எங்கே போய் தேடுவது. எப்படி தேடுவது?. பூஜை செய்யும் பொருளும் அவர்களிடம் தான் இருக்கிறது. குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் இல்லாமல் எப்படி பூஜை செய்வது. அர்ச்சகர்கள் மட்டும் தான் இங்கே இருக்கிறார்கள். மாலைக்குள் பூஜை செய்ய வேண்டும்.

இரவு மற்றொரு இடத்தில் தங்கி, கிழே இறங்கவேண்டும். சப்தகன்னிகளுக்கு பூஜை செய்யக்கூடிய பூ, பழங்கள், ஆடை அணிகலன்கள், வாசனை திரவியங்கள் எல்லாமே அவர்கள் வசமே உள்ளது. அந்த பொருட்கள் இல்லாமல் எப்படி பூஜை செய்வது?

**(பயணத்தினை தொடர்வோம்)**



# திருமணத் தடைநீக்கும் திருத்துருத்தி திருத்தலம்!

திருமணத்திற்குரிய சாஸ்திர சம்பிரதாயங்கள் இவைகள்தான் என உலகோருக்கு தன் திருமணத்தின் மூலமே சிவபெருமான் காட்டியருளிய திருத்தலங்கள் நான்கு. அவை திருத்துருத்தி, திருவேள்விக்குடி, திருஎதிர் கொள்பாடி, திருமணஞ்சேரி

இத்தலங்கள் திருமண சம்பிரதாயங்களை உணர்த்தும் திருத்தலங்களாகப் போற்றப் பட்டு வழிபடப்படுகின்றன. இவற்றில் சிவன் உமையை காந்தர்வ (இன்றைய காதல்) மணம் புரிந்த திருத்தலமே திருத்துருத்தி. துருத்தி என்பது ஆற்றிற்கு நடுவேயுள்ள மண் மேட்டை குறிப்பதாகும். புராண காலத்து திருத்துருத்தியே இன்றைய குத்தாலமாகும்.

**தலச்சிறப்பு**

சிவன் உமையம்மையை காந்தர்வ விவாகம் செய்தது, அம்மையப்பர் திருமணத்தை அவர்களது பிள்ளை விநாயகரே முன்னின்று நடத்தியது, திருமணப்பேறு அளிக்கும் வரப்பிரசாதியான அமிர்தமுகிழாம்பிகையை நாயகியாகக்கொண்டது, திருமணத்திற்காக கயிலாயத்திலிருந்து பெருமானுக்கு நிழலாக வந்த உக்தால மரத்தை தலவிருட்சமாகக்கொண்டது, மூர்த்தி, தலம், தீர்த்தம், உபதெய்வங்கள் என அனைத்துமே திருமண யோகம் அளிக்கத்தக்கது. அக்னி பகவான் தனக்கு ஏற்பட்ட பழி தீர சுவாமியை வழிபட்டது, விக்கிரமசோழ மன்னனின் மனைவி கோமளையின் குட்ட நோய் தீர்த்தது, வருணனின் சலோதரம் நீக்கியது, காளி, சூரியன், காமன் மற்றும் காசியபர் முதலிய ஏழு முனிவர்கள் வழிபட்டது, சுந்தரருக்கு சரும நோய் தீர்த்தது. சிவபக்தன் ஒருவனின் காச நோயை போக்கியது, காசித் தலத்துக்கு நிகரானது போன்ற பல்வேறு சிறப்புகளைக்கொண்டது. தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் 100-ஆவது மற்றும் காவிரியின் தென்கரைத்தலங்களில் 37-ஆவது திருத் தலம் திருத்துருத்தி.

**இறைவன்:** வீங்கு நீர் துருத்தி உடையார் என்று போற்றப்படும் சொன்னவாரறிவார். வடமொழியில் உக்தவேதீசுவரர்.

**இறைவி:** அரும்பன்ன வளமுலையாள், அமிர்தமுகாம்பிகை, **திருமணத்திற்காக**

*இறைவனை வேண்டிய கோலம்:* பரிமள சுகந்த நாயகி.

**தல விருட்சம்:** உக்தாலமரம் (ஒருவகை அத்தி மரம்), தீர்த்தம்: சுந்தர, காவிரி தீர்த்தங்கள்

**தல வரலாறு**

பசு உருவம் (கோரூபம்) கொண்டு தேரிழந்தூர், கோமல், திருக் கோழம்பம், கரைகண்டம் ஆகிய தலங்களில் சிவனை வழிபட்ட உமையம்மை இறுதியாக திருவா வடுதுறை தலத்தில் வழிபடும்போது சுய உருவத்தைப் பெற்றதுடன், சிவபெருமானின் திருக்காட்சியை காணும் பேறும் பெற்றார். ஆனால், திருமணம் நடைபெற முடியாமல் அம்பாளுக்கு மற்றொரு பணி காத்தி ருந்தது. அருகிலுள்ள குத்தாலத்தில் தன்னை மகளாகப் பெறவேண்டி தவம் செய்த பரத்வாஜ முனிவரின் விருப்பத்தை நிறைவேற்றும். விதமாக அவரது வேள்விக் குண்டத் தில் இறைவன் விருப்பப்படி பரிமளசுகந்தநாயகி என்னும் பெயருடன் பிறந் தாள். வளர்ந்து உரிய பருவம் அடைந்த பின்னர் மீண்டும் சிவனை மணம் புரிய வேண்டி, தினமும் காவிரிக்குச்சென்று ஆற்றின் நடுவிலி ருந்த மணல் திட்டில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தாள். எட்டாவது நாள் இறைவன் அந்த மணல் லிங்கத்திலி ருந்து கையை நீட்டி அம்பிகையின் கரம் பற்றினார்.

அம்பிகை நாணம் கொண்டு “சாத்திரங் களில் கூறியுள்ளபடி தாய் தந்தையர், உற்றார்

## ✡ நெய்வாசல் நெடுஞ்செழியன்

உறவினர் சூழ என்னைத் திருமணம் செய்து அழைத்துச் செல்லவேண்டும்” என்றும் மேலும், ‘திருமண வைபவத் தின்போது கடைபிடிக்கவேண்டிய சம்பிரதாயங்களை (திருமணச் சடங்குகள்) உலகத்தாருக்கு வகுத்துக் கொடுக் கும்படியாக நமது திருமணம் நிகழ்வுகள் அமைய வேண்டும்’ என்ற விருப்பத்தை வெளியிட அதை ஏற்றுக் கொண்டார். பின்னர் அம்பாளுக்கு வாக்களித்தபடி நந்திதேவரை அனுப்பி பரத்வாஜ முனிவரிடம் பெண் கேட்டு திருமணம் பேசி, குறித்தநாளில் கயிலாயத்திலி ருந்து புறப்பட்டு வந்து தனக்கு நிழற்குடையாக தன்னுடன் வந்த உக்தாலமரத்தின் கீழ் மணவாளராக எழுந்தருளி உமையம்மையை மனையாளாக்கிக் கொண்டார். இப்படி சொன்னது போல நடந்துக் கொண்டமையால் இறைவன் திருப்பெயர் ‘சொன்ன வாரறிவார்’ என்றாயிற்று.

பொதுவாக, சுபநிகழ்ச்சிகளின்போது விநாயக பெருமானை வணங்கி வழிபட்ட பின்னரே தொடங்கு வது மரபாகும். ஆனால் உலகத்தவரே பார்த்து வியந்த சிவன்பார்வதி திருக்கல்யாண வைபவத்தை தாமே முன்னின்று மகிழ்ச்சியுடன் நடத்திக்காட்டினார் விநாயகப்பெருமான். திருமணத்திற்காக கயிலாயத்திலி ருந்து பெருமானுக்கு நிழலாக வந்த உக்தாலமரமே இத்தலத்தின் தல விருட்சமாகும். அத்தி இனத்தைச் சேர்ந்த இம்மரம் ஆண்டு தோறும் பங்குனி மாதத்தில் பூக்கள் பூக்கின்றது. ஆனால் பன்னிரண்டு வருடங் களுக்கு ஒரு தடவை மட்டுமே காய் காய்க் கிறது.



இறைவியின் தவத் தினை ஏற்று இறை வன் சிவலிங்கத் திருமேனியிலிருந்து கரம் பற்றியதால் மூர்த்தி, தலம், தீர்த் தம்மற்றும்உபதெய்வங் கள் என அனைத் தாலும் திருமண

தொடர்ச்சி 37-ஆம் பக்கம்...



# பஞ்சாயதன பூஜை என்றால் என்ன?

**யோகம், தியானம் செய்வதால் மனிதன் நீண்டநாட்கள் வாழமுடியுமா? அதன் சிறப்பம்சம் என்ன?**

**-கே. பிரபாவதி, மேலகிருஷ்ணன் புதூர்.**

யோகம் என்றால் சுவாசத்தை அடக்கி, அடக்கியே சிலை மாதிரி உட்கார்ந்திருப்பது என்று பொதுவாக நினைக்கிறார்கள். யோகம் என்பதற்கு நேர் அர்த்தம் சேர்க்கை என்பது. நமது தினப்படி வாழ்வில் பலவித வஸ்துக்களோடு சேரவேண்டி இருக்கிறது. எனினும் இந்த சேர்க்கை நிரந்தரமில்லை. அப்படியில்லாமல், முடிந்த முடிவான ஒரே வஸ்துவோடு சேர்ந்துவிட்டோம். பின் அதிலிருந்து பிரிந்து வரவே முடியாது என்று ஆக்கி கொண்டுவிட்டால், அதுதான் நிஜமான யோகமாகும். நம் மனசின்மூலமாக இருக்கும் பரமாத்மாதான் அந்த ஒன்று ஆகும். மனதை, மூலத்தில், அந்த தெய்வத்தின் புறம் திருப்புவதற்காகவே யோகிகள் சுவாசத்தை அடக்குகிறார்கள். ஏனென்றால் எண்ணம் உதிக்கின்ற வேர் எதுவோ, அதுவே தான் சுவாசத்தின் வேரும் ஆகும். எனவே சுவாசம் மூலத்தில் நின்றால், மனமும் அதன் மூலத்துக்குப் போய் அடங்கிவிடுகிறது.

யாகம் செய்வது, விரதமிருப்பது, கோவில் கோபுரங்கள் கட்டுவதில் முனைப்பு, முயற்சியும் காட்டுவது, என இவையெல்லாமே சித்த சுத்திக்கு நல்ல வழியாகும். இதையெல்லாம் முடித்துவிட்டு பின் சுவாச பந்தம் பற்றி முயற்சிக்கலாம்.

'வியோகம்' என்பதற்கு விட்டுப்போவது என்று அர்த்தம். ஒரு தினுசான வியோகம்

வந்துவிட்டால், அதுவே யோகம் ஆகிவிடும் என்று பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்.

ஆக, யோகம் என்பது எதைப் பற்றியும் சிந்திக்காமல், இறைவனைப் பரப்பிரம்மத்தைப் பற்றியே, அதை ஒன்றை மட்டுமே யோசிப்பது யோகம் ஆகும்.

தியானம் என்பதும், மனதை ஒரு முகப்படுத்தி, நிலைப்படுத்துவதே ஆகும். சாதாரண மனிதர்கள் தியானம் செய்வர்.

சித்தர்கள், யோகிகள், யோகம் செய்வர். இவை இரண்டும் நீண்ட நாள் வாழும் திடத்தைத் தரும்.

**சாஸ்திரங்கள் பொய்யானால் கிரகணத்தைப் பார் என ஒரு சொலவடை உள்ளதே அதன்பொருள் என்ன?**

**-கே. எல். பகவதி,** சென்னை- 91.

ஒருவர் சாஸ்திரங்கள், பஞ்சாங்கம், ஜோதிடம் என இவை எல்லாமே பொய், ஏமாற்று வேலை என்று கூறலாம். ஆனால் பஞ்சாங்களில் கிரகண காலம் என்று குறிப்பிட்டு இருப்பார்கள். அதுவும் இன்ன நேரத்தில் இருந்து, இன்ன நேரம் வரை ஆரம்பித்து, முடியும் என்றும் கூறியிருப்பார்கள். சில கிரகணம் இந்தியாவில் தெரியும். சில கிரகணம் வெளிநாட்டில் தெரியும் என்றும் துல்லியமாக கணித்து கூறியிருப்பார்கள். அதன்படி உலகின் எல்லா பகுதியிலும் கிரகணம் நடந்துகொண்டுதானே வருகிறது. இதன்மூலம் சாஸ்திரங்கள் பொய் எனக் கூறுபவர்களும் கிரகணத்தை ஒத்துக் கொள்ளத்தானே செய்கிறார்கள். சாஸ்திரங்கள் நூறு சதவிகிதம் மெய்தான் என கிரகணங்கள் நிரூபித்துக்கொண்டு உள்ளது.

**பெண்களுக்குரிய பொறுப்புகள் கூடுதலாக உள்ளதா?**

**-எஸ்.ஆர். ஹரிஹரன்,** சென்னை.

இதிலென்ன சந்தேகம்- தற்போதைய சூழ்நிலையில், பெண்கள் வீட்டிலும் வேலை பார்க்கிறார்கள். அலுவலகத்திலும் வேலை பார்க்கிறார்கள். பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்கிறோம் என்கிற பெயரில், அவர்கள் தோளில் கூடுதல் சுமை, சுமக்க முடியாத பளுவை ஏற்றி வைத்து விட்டார்கள்.

வேலை செய்யும் பெண்கள் என்று, பிள்ளை பெறாமல் இருக்க முடியுமா? வீட்டு விலக்கு வராமல் இருக்குமா? இயற்கை நியதிப்படி அதனையும் சமாளிக்கத்தான் செய்கிறார்கள்.

சில வீடுகளில், பணம் சம்பாதிப்பதால் திமிர் வந்துவிடக்கூடாது என சில கணவர் வீட்டார்கள் சம்பாதிக்கும் பெண்களை பாடாய்படுத்துகிறார்கள்.

பெண்களின் கூடுதல் பொறுப்புகளை நினைத்து, ஒருபுறம் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் மறுபுறம் சற்று சங்கடமாகவும் உள்ளது. கூடிய மட்டும் பெண்களின் கூடுதல் பொறுப்புகளை பகிர்ந்துகொள்ள முயலுங்கள்.

**திருவிழாக்கள் பண்டைய காலத்தில் எப்போது ஆரம்பம் ஆனது?**

**-கவிதா,** ஆற்காடு

இராமாயாண காலத்தில், தசரத மன்னருக்கு புதல்வர்கள் பிறந்த போது அது பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

அதுபோல், இலங்கையிலிருந்து, இராமர், சீதா பிராட்டி யாருடன் வந்து, இராமர் சீதா பட்டாபிஷேகமும், விழாவாகக் கொண்டாடப்பட்டது. மக்கள், நகரை அலங்கரித்தும், புது வண்ண பட்டாடை உடுத்தியும், இசைத்தும், மோதகங்களை சுமந்தும், இராமருடன் சென்று விழா கொண்டாடினார்கள்.

ஆக, புராண காலத்தில் இருந்தே விழா எடுக்கும் வழக்கம் இருந்துள்ளது.

**நன்மையும், தீமையும் நம் கையில்தான் உள்ளதா?**

**சுரேஷ்,** திருச்சி

நன்றும், தீதும் பிறர் தர வாரா என்றே கூறப்பட்டுள்ளது.

எந்த வினையும், எதிர் வினையாற்றும் என்பர். இது பௌதீக விதி மட்டுமல்ல; வாழ்க்கை விதியும் கூட.

# அரைஞாண் கயிறு கட்டுவது மூடத்தனமா?

எனவே மனிதர்கள் செய்யும் நன்மைகள் சில மடங்காக எவ்விதத்திலாவது திருப்பிக் கிடைத்துவிடும். மனிதர்கள் செய்யும் தீமைகள், நூறு மடங்கு திருப்பிவரும்.

எனவே நன்மையும், தீமையும் நம் கையில் உள்ளது.



**நித்ய பூஜையில் கவனிக்க வேண்டியது என்ன?**

**–ரேவதி,** திருத்தணி

நித்ய பூஜை விஷயத்தில், கண்டிப்பாக குளிக்கவேண்டும். பெண்களுக்கு மட்டும் விதி தளர்வாக, கழுத்து மட்டும் குளிக்க சலுகை உள்ளது.

பூஜையறையை சுத்தமாக்க வேண்டும். பழைய பூக்களை எடுத்துவிட வேண்டும். அந்த காய்ந்த பூக்களை, கூடியமட்டும் செடி மரங்கள் அடியில் போடுவது உத்தமம்.

எவர் சில்வர் விளக்கு ஏற்றக்கூடாது. தெற்கு திசை நோக்கி தீபம் ஏற்றக் கூடாது.

வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் விளக்கு தேய்க்க வேண்டாம்.

ஈரத்துணியுடன் பூஜை பண்ணக்கூடாது. பூஜையறையில் இறந்தவர்கள் படம் கூடாது. காலை- மாலை விளக்கேற்ற வேண்டும். பூஜையில், உங்களுக்கு தெரிந்த ஸ்லோகம் கூறி வணங்குகள்.

சுவாமிக்கு, சிலர் சுத்தமாக தயாரித்த அன்னத்தை நைவேத்தியம் செய்வர். பழம், கல்கண்டு, உலர் திராட்சை, உலர் பழங்கள், உலர் பருப்புகள் இவற்றை ஏதேனும் நைவேத்தியமாக வைக்கவும்.

காலை- மாலை இருவேளையும் விளக்கேற்றி வணங்குவது உத்தமம்.

நித்ய பூஜை என்பது, உங்களின் வசதி, நேரத்திற்கேற்ப எளிமையான முறையிலாவது செய்துவிடுங்கள்.

அசைவம் சாப்பிட்டுவிட்டு, பூஜை செய்தால் பாவம் ஏற்படும். எதிர் விளைவுகள் உண்டாகும்; கவனம் தேவை.

**அன்றைய காலங்களில், தீபங்களை நெய்யினால் ஏற்றினார்களா?**

**–ஜெயந்தி,** இராயபுரம்

வீடுகளில் நெய் தயாரிப்பது என்பது, அன்றைய காலங்களில் வழக்கமான நிகழ்வாக இருந்தது. அனேக வீடுகளில் மாடுகள் வளர்ப்பார்கள். அதனால் நெய் தீபம் ஏற்றுவது இயல்பான விஷயமாக இருந்துள்ளது.

பழங்கால நிகழ்வுகளில் எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றப்பட்டது என ஏந்த விஷயமும் காணக் கிடைக்கவில்லை.

**பஞ்சாயதன பூஜை என்ற பெயரில் பூஜை இருந்ததா? விளக்கம் தருவீர்களா?**

**–தமிழ்செல்வி,** செங்கல்பட்டு

பஞ்சாயதன பூஜை என்ற பெயரில் பூஜை உள்ளது. ஈஸ்வரன், அம்பாள். விஷ்ணு, விநாயகர், சூரியன் இந்த ஐந்து பேருக்கும் மூர்த்தி வைத்து பூஜை செய்யவேண்டும். இதற்கு பஞ்சாயதன பூஜை என்று பெயர். அங்கங்கங்களோடு விக்ரங்களாக இல்லாமல், இந்த ஐந்தையும் இயற்கையாகவே கிடைக்கும். ஐந்து வஸ்துக்களில், ஆவாஹானம் செய்து

கேள்விகளை தபாலிலும் ombhava24@gmail.com
என்ற இ-மெயில் முகவரிக்கும் அனுப்புங்கள்!

பூஜைசெய்வது ஒரு மரபு ஆகும்.

ஈஸ்வரனுக்குரிய பாணலிங்கம் நர்மதை நதியில் ஓங்கார குண்டத்தில் கிடைக்கிறது. அம்பிகையின் ஸ்வரூபமான ஸ்வர்ணமுகி சிலா என்ற கல் ஆந்திராவில் ஸ்வர்ணமுகி ஆற்றில் கிடைக்கிறது. அது தங்க ரேக் ஓடிய கல். விஷ்ணுவின் வடிவமான ஸாலக் கிரகம் நேபாளத்தில் கண்டகி நதியில் அகப் படுகிறது. சூரியனுக்குரிய ஸ்படிகம் தஞ்சாவூரில் வல்லத்துக்கு பக்கத்தில் கிடைக்கிறது. விநாயகருக்குரிய சோணபத்ரக் கல் கங்கையிலே கலக்கிற சோணா நதியில் அகப்படுகிறது. ஆக, இந்த ஐந்தையும் ஓரிடத்தில் வைத்தால், இந்த தேசம் முழுவதையும் ஒன்றுசேர்த்து வைத்தது போலிருக்கும்.

இந்த ஐந்து மூர்த்திகளுக்கு செய்வது, பஞ்சாயதன பூஜை எனப்படும்.

**அரணைக் கயிறு கட்டும் பழக்கம் இன்றும் உள்ளதா?**

**-முருகன்,** மதுரை

இப்போதும் பிறந்த குழந்தைகளுக்கு அரணைக் கயிறு என்று அருணாக்கயிறு என்ற கருப்பு நிற இடுப்புக்கயிறு வழக்கம் உள்ளது. இதனை முக்கியமக திருஷ்டிக்காகத்தான் கட்டுவார்கள். எனினும் அடிவயிற்றில் நரம்புகள் மற்றும் ரத்தக்குழாய்கள் மெலிதாக, தோலுக்கு மிக அருகில் செல்கிறது. இந்த இடமான இடுப்பில் அரைஞான் கயிறு கட்டும்போது, மேல் வயிற்றிலுள்ள குடல் இறங்காமல் இருக்கும். மேலும் காத்து, கருப்பு அண்டாமல் இருக்கும் என்றும் நம்பினார்கள். வெள்ளி அரைஞான் கயிறு, குழந்தை பிறந்தவுடன் சீதனமாக கொடுப்பார்கள். எனினும் குழந்தைகளும், ஆண்களும் கருப்பு நிற அரை ஞாண் கயிறு அணிவது திருஷ்டி மற்றும் இடுப்பு பகுதி உறுப்புகளுக்கு நல்லது ஆகும்.

ஓம் பதில்கள்

ஆக, இதுவரையில் அரைஞான் கயிறு கட்டாதவர்கள், மூடநம்பிக்கை என்று தள்ளாமல், இப்போது கட்ட ஆரம்பியுங்கள்.

**ஆசைப்படுவதும் குற்றமா?**

**-அஞ்சலி,** திருச்சி

ஆசை என்பது நெருப்பு மாதிரி. நெருப்பில் எவ்வளவு பொருட்கள் போட்டாலும், அத்தனையையும் கபளீகரம் பண்ணிவிட்டு, பஸ்பமாக ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடும். வாழ்வை எத்தனைக்கு எத்தனை எளிமையாக வாழ்கிறோமோ, அத்தனைக்கத்தனை ஆத்ம லாபம் ஆகும்.

அடிப்படைத் தேவைகள் கிடைத்தாலே திருப்தியாக இருக்கவேண்டும். ஆசைக்குமேல் ஆசை, தேவைக்குமேல் தேவை என்று ஆலாய் பறக்கவேண்டாம் இருப்பதைக்கொண்டு நிறைவாக வாழக் கற்று கொள்ளவேண்டும். எனவே ஆசைப்படுவதும் குற்றம்தான்.

**அபசகுணமாக பேசுவது பாவம்தானே?**

**-மீரா,** ஆரணி

ஆம், நாம் எப்போதும் நேர்மறையான சொற்களைத்தான் பேச வேண்டும். எதிர்மறை சொற்கள். அது அபசகுணமாக பேசுவது என்போம். அதனைத் தவிர்ப்பது உத்தமம்.


நம்மைச் சுற்றி தேவதைகள் சுற்றிக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் எப்போதும் 'ததாஸ்து' எனக் கூறிக்கொண்டே இருப்பார்கள். 'ததாஸ்து' என்பதற்கு அப்படியே ஆகட்டும் என்று பொருள்.

யோசியுங்கள், நீங்கள் அபசகுணமாக பேசி கொண்டிருக்கும்போது, அப்போது அங்கே க்ராஸ் ஆகிகொண்டிருக்கும் தேவதைகள் அப்படியே ஆகட்டும் என்றி கூறிவிட்டால், அதுபோலவே பலித்துவிடும். அப்புறம் உங்கள் கதி என்னவென்று கொஞ்சம் சிந்தித்துக்கொள்ளுங்கள்.

எனவே அபசகுணமாக பேசுவது உங்களுக் குத்தான் பாவம் பிடிக்கும்.

# மீன்பிடி வலைகளில் சிக்கிய பகைவர்கள்!

வடதிசையிலிருந்த கலங்கரை விளக்கத்திலிருந்து யானைகள் மீது தாவிய எதிரிகளின் முன்னங்கைகளை வெட்டி எறியுங்கள் என யானை வீரர்களுக்கு இளந்திரையர் உத்தரவு பிறப்பித்தார். ஒரு யானையில் மூன்று பேர் அமர்ந்திருப்பார்கள். அவர்கள் யானைப் பாகர்களாகவும், சிறந்த போர்ப்பயிற்சி பெற்றவர்களாகவும் இருப்பார்கள். இளந்திரையரின் உத்தரவுப்படி யானைகள் மீது குதித்தவர்களின் முன்னங்கைகளைத் துண்டிப்பதில் அவர்களுக்கு சிரமம் ஏற்பட்டது. அவர்கள் தங்களது கைகளை சிங்கங்கள் தன் முன்னங்கால்களைப்



பலங்கொண்டமட்டும் எதிரிகள் மீது தாக்குவது போல் விரைவாகத் தங்களின் கைகளை அசைத்துக் கொண்டு, அசுர பலத்துடன் வீரர்களின் கழுத்துகளைத் தாக்குவதற்கே முயற்சி செய்துகொண்டிருந்த னர்.


எனவே, யானை வீரர்கள் தங்களது கூர்மையான உடைவாளினைத் தங்களின் கழுத்திற்குமுன் இறுகப் பிடித்துக்கொண்டு எதிரிகளின் கைகளில் காயமுறுமாறு செய்தனர். யானைகளிலிருந்து பக்கவாட்டில் அவர்களை வலிமையுடன் கீழே தள்ளி யானைகளை வைத்து மிதிக்கச் செய்தனர். தங்களிடமிருந்த ஈட்டிகளை எறிந்த வீரர்களையும் குதிரைப்படை வீரர்களையும் யானைகளுக்குப் பின்புறம் செல்லும்படி இளந்திரையர் உத்தரவிட்டார். அதன்படி, யானைகள் அனைத்தும் முன்வரிசைக்கு விரைவாகக் கொண்டுவரப்பட்டன. யானைகளின் துதிக்கைகளை இருபுறமும் வீசி எதிரிகள் தங்களை நெருங்காதவாறு அவர்களை முட்டித்தள்ளி கலங்கரை விளக்கத்தை நோக்கி எறியுமாறு யானை வீரர்கள் தங்களது யானைகளுக்கு சமிக்ஞை செய்தனர். அதே நேரத்தில், ஈட்டி எறிந்த வீரர்கள் அனைவரும் கடற்கரையில் உலர்த்த விரிக்கப்பட்டிருந்த பெரிய மீன்பிடி வலைகள் அனைத்தையும் எடுத்து வருமாறு இளந்திரையர் உத்தரவிட்டார். அதன்படி, கண் இமைக்கும் நேரத்தில் வீரர்கள் ஓடிச்சென்று அங்கிருந்த வலைகள் அனைத்தையும் எடுத்து ஓடிவந்தனர்.

வலைகளை நீளவாக்கில் விரித்து, அவற்றின் கீழ்ப்பகுதியை யானைகளை மிதிக்கச்செய்து, மேல் பகுதியை யானைகளின் துதிக்கைகளில் கொடுத்து கலங்கரை விளக்கத்தைச் சுற்றிலும் மீன்பிடி வலைகளால் அரண் அமைக்க உத்தரவிட்டார் இளந்திரையர். அதன்படி, எதிரிகளை சமாளித்துக்கொண்டிருக்கும் யானைகளுக்கிடையே காலாட்படை வீரர்கள் சென்று யானைகளின் பாதங்களில் வலைகளின் கீழ்ப்பகுதியைப் போட்டவுடன் யானை வீரர்கள் வலைகளின் மேல் பகுதிகளை துதிக்கைகளால் விரித்து மேல்நோக்கிப் பிடிக்கும்படி யானைகளுக்கு உத்தரவிட்டனர்.




அவ்வாறே கலங்கரை விளக்கத்தைச் சுற்றிலும் நெருக்கமாக நின்றிருந்த யானைகள், எதிரிகள் வெளியேறாதவாறு வலைகளால் அரண் அமைத்தன. இதன்மூலம் எதிரிகளின் தாக்குதல் அதிக அளவு குறைக்கப்பட்டது. எதிரிகள் தப்பிச்செல்ல அந்த வலையை நோக்கி ஓடிவந்தனர். அந்த சமயம் பார்த்து இளந்திரையனார், மோதுகின்ற எதிரிகள் மேல் வலைகளைத் துதிக்கையால் போர்த்தி, அவர்கள் மீது முன்னங்கால்களை மடக்கி அமுக்குமாறும், பிடித்திருக்கும் வலைகளை விட்டுவிடாமல் இருக்குமாறும், யானைகளுக்கு சமிக்ஞை செய்ய பாகர்களுக்கு உத்தரவிட்டார்.

இளந்திரையரது உத்தரவின் பேரில் யானைகள் தங்கள் முன்னங்கால்களை மடக்கி எதிரிகளை அமுக்கி வலைகளை அவர்கள் மீது போர்த்திப் பிடித்துக்கொள்ளச் செய்தனர் பாகர்கள். வீரர்கள் அனைவரும் வலை யில் சிக்கியிருந்த பகைவர்களைத் தப்ப விடாமல் பிணைத்துக் கட்டும்படி இளந்திரையன் காலாட்படையினருக்குக் கட்டளையிட்டார். வீரர்கள் பகைவர்களை இறுகப் பிணைத்துக் கட்டும்வரை யானைகள் தங்கள் பிடியிலிருந்து வலைகள் விலகாமல் இருக்குமாறு யானைகளுக்குப் பாகர்கள் சமிக்ஞை கொடுத்



✡ கிண்ணிமங்கலம் அடிகளார் **மு. அருளானந்தம்**



துக் கொண்டேயிருந்தனர். பகைவர் களிடமிருந்த தீவெட்டிகள் முழுவதும் அணைக்கப்பட்டன. வீரர்களின் துரிதமான செயல்பாடுகளால் எதிரிகள் அனைவரும் மீன்பிடி வலைகளுக்குள் சிக்குண்டனர்.

வலைகளைப் பிடித்திருந்த பிடி தளராதவாறு யானைகள் அனைத்தையும் பாகர்கள் மெல்ல எழச் செய்தனர். கலங்கரை விளக்கத்தைச் சுற்றியிருந்த யானைகள் அனைத்தையும் கிழக்கு மேற்காக ஒரே நேர்கோட்டில் நிற்கச் செய்யும்படி இளந்திரையர் ஆணை பிறப்பித்தார். அதன்படி காவல் வட்டத்தைத் தளர்த்தியபோது வலையில் சிக்காத பகைவர்களைத் தாக்கிக் கொன்றுவிடும்படி குதிரை வீரர்களுக்கு திரையனார் உத்தரவிட்டார். குதிரை வீரர்கள் தங்களது குதிரைகளைக் கலங்கரை விளக்கத்தைச் சுற்றிலும், அதனையொட்டி மறைந்திருந்த வீரர்கள் பக்கம் விரைவாகச் செலுத்தி, தங்களிடமிருந்த கோடாரி ஆயுதங்களால் அவர்களது முகங்களை சிதைக்கத் தொடங்கினர்.

கிழமேல் திசையில் வரிசையாக வலைகளைப் பிடித்திருந்த யானைகளை தென்திசைக் கலங்கரை விளக் கத்தை நோக்கிக் கடற்கரையில் பின்னோக்கி நகருமாறு திரையன் உத்தரவிட்டார். மெய்மொழி அரையனார் இருக்கும் தென்திசைக் கலங்கரை விளக்கத்தை நோக்கி யானைகள் பின்னோக்கி ஒரே நேர்கோட்டு வரிசையாக நடக்கத் தொடங்கின. குதிரை வீரர்கள் கலங்கரை விளக்கத்தைச் சுற்றிலும் பகைவர்கள் யாரும் இருக்க வாய்பில்லை என்பதை அறிந்தபின், தங்களது குதிரைகளை யானைகளை நோக்கி விரைந்து செலுத்தலானார்கள். யானைகள் பின்னோக்கிச் செல்லும் பாதைக்குக் குறுக்கே தடையாக இருந்த பொருள்களை அப்புறப்படுத்திய காலாட்படையினர் அரையனார் இருக்கும் கலங்கரை விளக்கத்தை நோக்கிச் சென்றனர்.

யானைகள் இழுத்துவரும்போது வலைகளில் சிக்கிய எதிரிகளின் கண்களில் மணற்துகள்கள் படிந்து கண்களைத் திறக்க இயலாத அளவிற்கு உறுத்தலாயின. அப்போது பகைவர்களின் வாயிலிருந்து வெளிவந்த கூக்குரலை, தன் குதிரையை யானை வரிசைக்குப் பின்னால் செலுத்திக்கொண்டே இளந்திரையனார் உற்று கவனித்தார். அவை நாகர்களின் பாசையைப்போல் இருந்தன.

அப்போது இளந்திரையனார் தனக்கு இடதுபுறத்திலிருந்த கடல் பரப்பு முழுவதும் செம்பொன் நிறத்தில் மனதை அச்சுறுத்தும் அளவிற்கு மாறியதைப் பார்த்தார். அது சேந்தன் நல்லனாரால் வெடிக்கச் செய்த மரக்கலனிலிருந்த எரிகலன்கள் வெடித்து எரியத் தொடங்கிய நேரம்.

அங்கே இளந்திரையனார் கண்ணுற்ற காட்சியை அங்கிருந்த அனைத்து வீரர்களும் பார்த்துப் பிரம்மித்து நின்றனர். யானைகளின் மீதிருந்தவர்கள் 'தென் கிழக்குத் திசையில் ஒரு கப்பற்கலன் எரிவதுபோல் தெரிகிறதே, அது யாருடைய கலனாக இருக்கும்? ஏன் எரிகின்றது?' என வினவலானார்கள்.

அப்போது இளந்திரையன் தனக்கு அடுத்த அதிகாரத்திலிருந்த சீராளரிடம் 'பரிவல்லாளரே இவர்களைப் பத்திரமாக தென் கலங்கரை விளக்கத்திற்குக் கொண்டுவாருங்கள்.

நான் முதலில் மெய்மொழி அரையனார் இருக்கும் இடத்திற்குச் செல்கிறேன்' எனக் கூறித் தன் குதிரையை விரைவாகப் பாய்ந்து செல்ல முடுக்கினார்.

நாம் இங்கு பாண்டிய நாட்டின் மருங்கூர் துறைமுகத்தைப் பற்றி தெரிந்துகொள்ளவேண்டும். மருங்கூர் துறைமுகமானது, அதன் வடக்குப் பகுதியில் இருக்கும் கலங்கரை விளக்கத்திற்கு முன்னால் இருக்கும் கப்பற்துறைகளில் பாண்டிய நாட்டிற்குக் கிழக்கு, வடகிழக்கு மற்றும் வடக்குத் திசைகளிலிருக்கும் தற்போதுள்ள சீனா, ஜப்பான், இந்தோனேஷியா, மலேசியா, தாய்லாந்து, கம்போடியா, நாவலந்தீவுகள் போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து வரும் கப்பல்களை நிறுத்துமிடமாகவும், தென்கலங்கரை விளக்கத்துக்கு அருகே இருக்கும் கப்பற் துறைகளில் ஈழம், ரோமாபுரி, எகிப்து மற்றுமுள்ள மேலை நாடுகளிலிருந்து வரும் கப்பல்களை நிறுத்துமிடமாகவும் செயல்பட்டது. இவ்விரண்டிற்கும் நடுவே தான் பாண்டியப் பேரரசுக்குரிய சுங்கச் சாவடிகளும் பாண்டிய நாட்டு வாணிபர்கள் உள்ள பகுதியும் இருந்தன.

இந்த மருங்கூர் துறைமுகமானது பூம்புகாருக்கு இணையானதாகவும், அன்றைய காலத்தின் நவீனமயமாக்கப்பட்ட அழகுமிகுந்த துறைமுகமாகவும், புதிதாக வடிவமைக்கப்பட்டிருந்தது. இத்துறை முகத்தில் வடக்கு கப்பற்துறைகளுக்கு வந்துசேரும் கப்பல்களிலிருந்து இறக்கு மதியாகும் பொருள்கள் யாவும், பாண்டியப் பேரரசால் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் மூலம் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, தெற்குப் பகுதியில் இருக்கும் ஈழம், எகிப்து, ரோமாபுரி மற்றும் பிற மேற்கத்திய நாடுகளிலிருந்து வந்திருக்கும் வியாபாரிகளுக்குக் கூடுதல் லாபம் வைத்து வணிகம் செய்யப்பட்டன.

இதேபோல் தெற்குப்பகுதி கப்பற்துறை களில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள் களும் கூடுதல் லாபம் வைத்து பாண்டிய நாட்டு வணிகர்களால் வடக்குப் பகுதியில் இருக்கும் கீழைநாட்டு வியாபாரிகளுக்கு வாணிபம் செய்யப்பட்டன. உள்நாட்டுப் பொருள்களும் இவ்வாறே இப்பாண்டிய வணிகக் குழுவால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு இரண்டு துறைகளிலும் நல்ல லாபத்துடன் வணிகம் செய்யப் பட்டன.

இவ்விரண்டு கப்பற்துறைகளிலிருக்கும் வெளிநாட்டு வணிகர்கள் ஒருபோதும் ஒருவரை ஒருவர் சந்திக்க இயலாது. இதற்கு மேலும் இவ்விரு பகுதிகளிலிருந்து இடமாறும் வியாபாரப் பொருள்களுக்கு துறை முகத்தின் மத்திய பகுதியில் இருந்த சுங்கச் சாவடிகளின்மூலம் சுங்க வரிகள் வசூலிக் கப்பட்டு வந்தன. இதனால் பாண்டிய நாட்டு வணிகப் பொருளாதாரம் கிடுகிடுவென வளர்ந்து பாண்டியத் தலைநகரான மதுரையம்பதியில் செல்வம் கொழிக்கத் தொடங்கியது.

இதனால் உலகமே போற்றும் அளவிற்கு பாண்டியப் பேரரசனின் தலைநகரில் பொன்னும் மணிகளும் மலைபோல் குவிந்தன. மக்களுக்கும் புரவலர்களுக்கும் புலவர்களுக்கும் பாண்டியன் வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தான். தமிழ் மொழி, பண்பாடு, கலைகள் வளர்க்கும் அவையங்கள் சிறப்புற நடத்தப்பட்டன. கல்விச்சாலைகள் சிறப்புற விரிவுபடுத்தப்பட்டன. பன்னாட்டு பயணியர்களுக்கு விருந்தோம்பல்களும் அரசு சார்பில் சிறப்பாக நடத்தப்பட்டன.

இவ்வாறு உலகமே வியந்து போற்றும் அளவிற்கு பாண்டியப் பேரரசை உருவாக்கித் தந்த சிற்பிகள் பத்துப் பேர்கள். அவர்களது மதிநுட்பங்களாலும் உலகளாவிய வாணிபங் களைப் பற்றிய விரிந்த அனுபவங்களாலும், உலக வணிகச் சந்தைகளை பாண்டிய நாட்டின் பக்கம் ஈர்க்க அவர்களால் போடப்பட்ட திட்டங்கள் அனைத்தும் பயனளித்தன.

இவ்வாறு உலகப் பொருளாதாரத்தை பாண்டிய நாடு நிர்ணயிக்கும் அளவிற்கான கட்டமைப்பை எவ்வாறு அவர்கள் அரும்பாடு பட்டு உருவாக்கினர் என்பதை வரும் இதழில் காண்போம்...

தொடர்புக்கு: 99445 64856
தொகுப்பு: சி.என். இராமகிருஷ்ணன்

# எம்.ஜி.ஆரால் தர்ம சிந்தனை பெற்றேன்!



## –அசத்தும் அமர்நாத்!

மனிதன் என்பவன் தெய்வம் ஆகலாம். வாரி வாரி வழங்கும்போது வள்ளல் ஆகலாம். வாழைபோல தன்னைத்தந்து தியாகம் ஆகலாம்.. உருகி ஓடும் மெழுகுபோல ஒளியை வீசலாம்..

இந்த பொன்னான வரிகள் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களுக்கே பொருந்தும். அதனால்தான் புரட்சி நடிகராக புகழோடு தமிழ் திரையுலகில் நாடோடி மன்னனாக பல ஆண்டுகள் வெற்றி பவனி வந்து 'மக்கள் திலகம்' ஆன அவர் மக்களால் 'தமிழக முதல்வர்' ஆக்கப்பட்டு, அவர் அமரர் ஆகி முப்பத்தி எட்டு ஆண்டுகள் ஆனபிறகும் அணையாத ஜோதியாக எம்.ஜி.ஆர் புகழ் இன்றும் மக்கள் மனதில் பட்டொளி வீச காரணம் புரட்சித்தலைவரின் மனித நேயமும், கொடை வள்ளல் குணமும், ஏழைகளுக்கு உதவும் இதயமும்தான் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

தமிழ்நாடு, இந்தியா மட்டுமின்றி உலகம் முழுக்க அவரது புகழ் இன்றும் நிலைத்திருப்பதால் பலகோடிக்கணக்கான எம்.ஜி.ஆர் ரசிகர்கள் அவர் மீண்டும் வரமாட்டாரா? என்று ஏங்கி தவிக்கிறார்கள்.

அந்த ரசிகர்களின் ஆவல் தீரும் வகையில் எம்.ஜி.ஆர் போலவே துபாயில் இருந்து வந்திருக்கிறார் எம்.ஜி.ஆர் அமர்நாத்.

அவரிடம் கேள்விகளை வீச, நம்மிடம் பதில்களை அளித்து பரவசம் அடையச் செய்தார்.

**எம்.ஜி.ஆர்போலவே ஆகிவிட ஏன் நினைத்தீர்கள்?**

'சிறுவயது முதலே புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் என்றால் எனக்கு உயிர்போல ஆகிவிட்டார். அவர் நடித்த படங்கள் அனைத்தையும் திரும்ப திரும்ப பல தடவை பார்த்து எம்.ஜி.ஆர் ரசிகராகிவிட்டேன் என்றே சொல்லலாம்.

நான் மருதமலை முருகப் பெருமானின் பரம பக்தன். அடிக்கடி இந்த கோவிலுக்கு வந்து வழிபட்டு செல்வேன். அந்த முருகன் தான் என் மனதில் நீ எம்.ஜி.ஆர் போல் ஆகிவிடு என்று சொல்லிக் கொண்டே இருப்பதுபோல் உணர்ந்தேன்.

துபாயில் எம்.ஜி.ஆர்போல் தொப்பி, கண்ணாடி, வெள்ளை வேஷ்டி சட்டை தோளில் சால்வையுடன் நான் ஹோட்டல் போன்ற பொது இடங்களுக்கு போன போது பலரும் என்னை சூழ்ந்துகொண்டு உண்மையிலேயே எம்.ஜி.ஆர் திரும்ப வந்துவிட்டார் என்று வரவேற்பு தந்தபோது எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.'

'தமிழ்நாட்டிற்கு வந்தபோது எனக்கு பல மடங்கு வரவேற்பை புரட்சி தலைவரின் ரசிகர்கள் தந்துவிட்டார்கள். என்னிடம் கை குலுக்கி மகிழ்ந்தார்கள். புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். செல்பி எடுத்தும் சந்தோஷம் அடைந்தார்கள்.

**எம்.ஜி.ஆரைப் போல பிறருக்கு உதவும்**







**வகையில் நீங்கள் என்ன செய்துவருகிறீர்கள்?**

‘மகாபாரதத்தில் கிருஷ்ண பரமாத்மா கர்ணனிடம் தர்மபுண்ணியம் அனைத்தையும் பெற்றபிறகு அவருக்கே பிறருக்கு கொடுக்கும் எண்ணம் வந்துவிட்டது. கர்ணனிடம் ‘நீ விரும்புவதை கேள்’ என்றாராம். கர்ணனும் கிருஷ்ண பரமாத்மாவின் விஸ்வரூப தரிசனத்தை விரும்பிக் கேட்க அவரும் ‘விஸ்வரூபம்’ எடுத்து காட்டினாராம்.

கர்ணனிடம் பெற்றதும் கண்ணனும் ‘கர்ணன்’ ஆனதுபோல் நானும் எம்.ஜி.ஆர். போல் உருவம் மாறியதும் அவரின் ஏழைகளுக்கு உதவும் ‘தர்ம சிந்தனை’ பெற்றுவிட்டேன். அதனால் எம்.ஜி.ஆர். போல் உருவத்தில் மட்டுமின்றி உள்ளத்திலும் எம்.ஜி.ஆர் ஆகி வியர்வை சிந்தி நான் துபாயில் உழைக்கும் பணத்தை, என்னால் இயன்ற தர்ம காரியங்களுக்கும், ஏழைகளுக்கும் தந்து வருகிறேன்.

**நீங்கள் சமீபத்தில் மெய்சிலிர்த்த அனுபவம் உண்டா?**

‘புரட்சித்தலைவர் வாழ்ந்த ராமாவரம் தோட்டத்திற்கு சென்று அவர் சாப்பிட்ட டைனிங் டேபிளில் அமர்ந்தபோது மனம் புல்லரித்துப் போனேன்.

சென்னை தி.நகர் எம்.ஜி.ஆர் வாழ்ந்த அவரது நினைவு இல்லத்திற்கு சென்று புரட்சித்தலைவர் பயன்படுத்திய கார், உடைகள், கண்ணாடி, தொப்பி மற்றும் ஏராளமான எம்.ஜி.ஆரின் புகைப்படங்களை பார்த்தும் ‘அடிமை பெண் சிங்கம்’ பார்த்தும் மனநிறைவு பெற்றேன்.

நடிகை லதா அம்மா இல்லம் சென்று அவரோடு உரையாடி மகிழ்ந்து வந்தேன்.

மதிப்பிற்குரிய சைதை துரைசாமியை சந்தித்து மனநிறைவு அடைந்தேன். பல அ.இ.அ.தி.மு.க தலைவர்களையும் சந்தித்து சந்தோஷம் அடைந்தேன். ஏராளமான எம்.ஜி.ஆர் ரசிகர்கள் புரட்சித்தலைவரே மறுபிறவி எடுத்து வந்துவிட்டதாகக் கருதி என்னை வரவேற்று கைகொடுத்து, கட்டித்தழுவி, புகைப்படங்களை வீடியோ, செல்பி எடுத்து எல்லையில்லா ஆனந்தம் அடைந்ததும் என்னை மகிழவைத்தது.

**ஏழை எளியோர், அனாதைகளுக்கு உதவும் திட்டம் உண்டா?**

‘பொன்மனச் செம்மல் காக்கும் கரங்கள் அறக்கட்டளை’ அமைத்துள்ளேன். இதன் மூலம் வசதி உள்ளவர்கள் விரும்பித்தரும் நன்கொடைகள் பெற்று நிறைய ஏழை, எளியோர், அனாதை இல்லங்களுக்கு உதவ திட்டமிட்டு இருக்கிறேன்.’

மருதமலை முருகனின் அருளாசியோடு இவரின் எண்ணம் ஈடேற வாழ்த்தி விடை பெற்றோம்.

தொடர்புக்கு: 95444 55055

பேட்டி, படங்கள்: **விஜயா கண்ணன்**

25-ஆம் பக்க தொடர்ச்சி...

யோகம் அளிக்கத்தக்கது, இத்தல நாயகி அமிர்தமுகிழாம்பிகை இறைவனை வழிபட்டு தன் திருமணத்தை தானே அமைத்துக் (நிச்சயித்துக்) கொண்ட வளாதலால் திருமண பேறு அளிக்கும் வரப்பிரசாதியாக விளங்குகிறாள்.

ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட இத்திருக்கோவில் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னர் அப்போது ஆட்சி செய்த சோழ மன்னர்களால் புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. ஆலயத்தின் முதல் சுற்றுச்சுவரில் ஏராள மான கல்வெட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் ஆகியோரால் பாடப்பெற்ற இவ்வாலய இறைவனை அம்பாளைத் தவிர அக்னி பகவான், வருணன், காளி, காமன், சூரியன், காசியபர், ஆங்கிரசர், கௌதமர், மார்க்கண் டேயர், வசிஷ்டர், புலஸ்தியர், அகத்தியர் போன்ற ரிஷிகளும் மற்றும் பரத்வாஜ முனிவரும் வழிபட்டு பேறுபெற்றுள்ளனர். தன்னால் தீண்டப்படும் பொருள்கள் எல்லாம் அழிந்துபோவதைக் கண்டு வருத்தமடைந்த அக்னி இங்கு வந்து தன் குறையை போக்கிக்கொண்டு அனை வருக்கும் பயனுள்ளவனான்.

சுந்தரரும் இத்தலத்து இறைவனை வழிபட்டுநோய் நீங்கப் பெற்றிருக்கிறார். திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியாருக்கு செய்து கொடுத்த சத்தியத்தை மீறி அவளைப் பிரிந்து வந்ததால் இரண்டு கண்களின் பார்வையையும் இழந்ததுடன், சரும நோய் பாதிப்பிற்கும் உள்ளானார். என்றா லும் வழியிலுள்ள தலங்களை தரிசிக்கத் தவறவில்லை. காஞ்சிபுரத்தில் ஒரு கண் பார்வையை மீண்டும் பெற்று இத்தலத்திற்கு வந்து இங்குள்ள இறைவனை மனமுருக வேண்டி தன்னை மன்னித்தருளும்படியும் தன் உடலை வருத்தும் நோயினை நீக்கு மாறும் வேண்டினார். இறைவனும் ஆலயத் தின் வடபாகத்திலுள்ள பதுமதீர்த்தத்தில் நீராடினால் உன் உடற்பிணி தீர்ந்துவிடும் என்று அருளினார். சுந்தரரும் அவ்வாறே செய்ய, நீரிலிருந்து எழும்போது முன்னிலும் பளபளக்கும் மேனி எழிலுடன் திகழ்ந்தார்.



சுந்தரர் நீராடிய பதுமதீர்த்தம் அதன்பின்னர் சுந்தரர் தீர்த்தம் என்றாயிற்று.

வித்யுன்மாலி என்பவன் சூரியனின் தன்மையை தனக்கும் தருமாறு சிவனை வேண்டி தவம் செய்தான். இதை தடுக்க நினைத்த சூரியன், வித்யுன்மாலியுடன் சண்டை யிட்டார். ஆனால் அதில் தோல்வியுற்று தன் தன்மையை இழந்தார். பின் ஒரு கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் இவ்வாலயம் வந்து காவிரியிலும், சுந்தரர் தீர்த்தத்திலும் நீராடி சிவனை வழிபட்டு பெருமானின் அனுகிரகத்தால் இழந்த பதவியைப் பெற்றார்.

உருத்திரசன்மன் என்பவன் முக்தி பெற காசிக்கு சென்றான். இத்தலமும் காசிக்கு சமமானது என்பதை உணர்த்த சிவன், குண்டோதரனை அழைத்து "நீ பாம்பு வடிவம் எடுத்து உருத்திரசன்மன் காசிக்கு செல்ல விடாமல் தடுத்து விடு'' என்று கூறினார். அதன்படி பாம்பு உருத்திரசன்மனைத் தடுக்க, அவன் தன்னைக் காத்துக் கொள்ள கருட மந்திரத்தை உச்சரிக்க, பாம்பு மயங்கி கீழே விழுந்தது. பாம்பை காப்பாற்ற சிவன் பாம்பாட்டி வடிவம் எடுத்துவந்தார். பாம்பாட்டியாக வந்திருப்பது சிவன் என்பதை அறிந்து உருத்திரசன்மன் வணங்க, ''இத்தலத்தை தரிசித்தாலே காசியில் தரிசித்த புண்ணியம் கிடைக்கும்" என்று அருளினார்.

### ஆலய அமைப்பு

ஊருக்கு நடு நாயகமாக அமைந்துள்ள இவ்வாலயம் இரண்டு பிரகாரங்களுடன் ஐந்து நிலை இராஜகோபுரத்துடனும் மேற்கு

நோக்கி அமைந்துள்ளது. இறைவன் மேற்கு நோக்கியும், இறைவி தெற்கு நோக்கியவாறும் அருள்பாலிக்கின்றனர். ராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் கொடிமரம், பலிபீடம், நந்தியைக் காணலாம். கொடிமரத்தில் கொடிமர வினாயகர் உள்ளார். வலப்புறம் உக்தால மரமுள்ளது. அதன்கீழ் சிவலிங்கவடிவில் மணவாளநாதரும், அவர் விட்டுச்சென்ற இருபாதுகைகளும், நாகரும் உள்ளனர். நந்தியைக்கடந்து உள்ளே செல்லும் போது இடப்புறம் அரும்பன்ன வனமுலை யம்மன் தனிக்கோவிலுள்ளது. இறைவன்- இறைவி இருவரது கோயில்களும் தனித்தனியே வலம் வருமாறு தனிப் பிரகாரங்களோடு அமைந்துள்ளன. விவாக பிராப்திக்காக இத்தலத்திற்கு வந்து வழிபாடு செய்பவர்களுக்கு தாய் தந்தையின் திருமணத்தை முன்னின்று நடத்திய விநாயகரே மங்கள நாயகராக முன்னின்று அனுகிரகிப்பது இத்தலத்தின் தனித்துவ சிறப்பாகும்.

இரண்டாம் வாயிலான கட்டைக் கோபுரம் வழியாக உள்பிரகாரத்திற்குச் சென்றால் பெரிய மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் வலஞ்சுழி விநாயகர் சன்னதியும், வடமேற்கு மூலை யில் மகாலட்சுமி சன்னிதியும், வடக்கு திருமாளப்பத்தியில் சபாநாயகர் சன்னிதியும் அவரது சன்னதிக்கு இடப்புறத்தில் மாலையாத்த விநாயகரும், நவக்கிரக பீடமும் உள்ளன. கிழக்கு திருமாளப்பத்தியில் சப்தரிஷீசுவரர், தனிசனீசுவரர், பைரவர் மற்றும் பஞ்ச லிங்கங்கள் உள்ளன. இத்தலத்து சனீஸ்வரர் 'மங்கள சனீஸ்வரர்' ஆவார். மேற்குபார்த்து அமர்ந்திருக்கும் இவருக்கு நேர்எதிரில் கிழக்கு நோக்கிய வண்ணம் வீற்றிருக்கும் மாலையாத்த விநாயகரின் பார்வை படுவதால் சனீஸ்வரருக்கு தோஷ பலன்களைத் தந்திடும் தன்மை பூரணமாக மறைந்து நற்பலன்களை அருளும் மங்களத் தன்மை ஏற்பட்டு விடுகின்றது. இப்படி ஒரே நேர்க்கோட்டில் எதிரெதிரே அமைந்துள்ள விநாயகரையும், சனீஸ்வரரையும் விளக்கேற்றி, அர்ச்சனை செய்து வழிபட்டு தரிசிப்பவருக்கு தோஷங்கள் அகன்று மங்கள நிகழ்வு கைகூடிடும் என்பது இத்தலத்து ஐதீகமாகும்.

இவர்களையொட்டி மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் வள்ளி- தெய்வானை உடனுறை ஸ்ரீசண்முகர் சன்னதியின் மிகப் பெரிய திருமேனிகள் பார்ப்பவர்களை பரவசத் திற்குள்ளாக்குகிறது. சண்முகர் சன்னதியை ஒட்டி சூரியன் அருள்பாலிக்கிறார். தொடர்ந்து ஆலயக்கிணறும், மடப்பள்ளியும் அமைந்துள்ளன. தெற்கு திருமாளப்பத்தி மண்டபத்தில் ஸ்ரீபரிமளசுகந்த நாயகியம்மன் சன்னதியும், 63 நாயன்மார்களும் இடம்பெற்றுள்ளனர். கருவறைக் கோட்டத்தில் பிரம்மா, துர்கை, அடிமுடிகாணா அண்ணல், வினாயகர், தட்சிணாமூர்த்தி, அகத்தியர் மற்றும் கருவறையை ஒட்டி சண்டிகேசுவரர் சன்னதி ஆகியவை இடம்பெற்றுள்ளது. சுவாமி கருவறை விமானத்திலுள்ள சுதைச்சிற்பங்கள் யாவும் பெரியவையாகவும், கலையழகோடும் காணப்படுகின்றன.

அனைத்திற்கும் உள்ளே அண்டமே என்னுள் அடக்கம் என்பதை உணர்த்தும் பெருமான் தண்டியும் முண்டியும் காவல் புரியும் கருவறையில், பெரிய சிவலிங்கத் திருமேனியராய், அனைவரையும் ஆட்கொள்ளும் கலையழகு கொண்டவராய் சுயம்புவாக காட்சியளித்து தெய்வ கடாக்ஷத்தை அருளுகிறார்.


### பிரார்த்தனையும் நேர்த்திக்கடனும்

ஸ்ரீபரிமளசுகந்த நாயகியின் அழைப்பில் இறைவனே வந்து திருமணம் செய்துகொண்ட தலமாததாலும், பெற்றோர் திருமணத்தை பிள்ளை வி நாயகரே நடத்தி வைத்ததாலும், சனீசுவரர் மங்களசனீசுவரராக அருள்பாலிப்பதாலும், எத்தகைய திருமண தடையையும் நீக்கி திருமணபிராப்தியை அருளும் மகத்துவம் கொண்ட தலமாக இது திகழ்கிறது.

***அமைவிடம்:*** மயிலாடுதுறை- கும்பகோணம் பேருந்து மார்க்கத்தில் குத்தாலம் பேருந்து நிறுத்தத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் வடக்கில் திருமணஞ்சேரி சாலையில் இத்தலம் அமைந்துள்ளது.

இவ்வாலயம் தினசரி காலை 9.00 மணியிலிருந்து பகல் 12.00 வரையிலும்; மாலை 5.30 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

✡ கோவை ராஜேந்திரன்




# தீவிர நம்பிக்கை!

இதுவரை சுருக்கமாக மனம் எனும் மகாசக்தி.

மனிதனைப் படைக்கும்பொழுதே மனம் எனும் மகா சக்தியையும் இறைவன் படைத்துவிட்டார்.

இறைசக்தி என்னும் பேரின்பத்தில் ஐக்கியம் ஆகவேண்டும் என்றால் இறைவன் வடிவமைத்து நமக்கு அருளிய மனம் எனும் மகாசக்தியே வாகனம்.

இந்த கணத்தில் மனம் ஆனந்தமாக இருக்கிறது என்றால் அது இறைவன் கொடுத்த வரம்.

மனம் துன்பத்தில் உழல்கிறது என்றால் நமது எண்ணங்களில் தவறு இருக்கிறது என்று இறைவன் நமக்கு நினைவு படுத்துக்கொண்டிருக்கிறார் என்று பொருள்.

பயமும், வஞ்சக எண்ணங்களும் இறைவனின் அருளான மனம் என்னும் மகா சக்தியை செயல் இழக்க முயற்சி செய்யும் அசுர சக்திகள்.

எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாத அன்பு, நன்றி உணர்வு, மன்னிக்கும் குணம் இவை மூன்றுமே அசுர சக்திகளை அழித்தொழிக்கும் பிரம்மாஸ்திரங்கள்.

*நம் மனம் இரண்டு வகையான தீவிர நம்பிக்கைகளை கொண்டுள்ளது.*

*ஒரு கல்லை செதுக்கி அழகான சிற்பத்தை உருவாக்குவது என்பது அழகான சிற்பத்தை மறைத்திருக்கும் தடைக் கற்களை வெளியேற்றும் செயலாகும்.*

*அதுபோலவே இறைசக்தி வியாபித்திருக்கும் ஆழ்மனதை அடைய மனதை சுற்றியுள்ள அசுர சக்தியால் உருவாக்கப்பட்ட தடைகளை வெளியேற்ற வேண்டும்.*

*1. அழகான சிற்பத்தை போன்றது இறைசக்தியோடு ஐக்கியப்பட்ட தீவிர*

# இறைசக்தியும் அறிவியலும்...

நம்பிக்கைகள்.

*2. தடைக்கற்கள் என்பவை அசுர சக்தியால் சூழப்பட்ட தீவிர நம்பிக்கைகள். இவை இரண்டையும் இறைவன் அருளிய சிந்தனை சக்தி துணைகொண்டு தனித்தனியாக பிரிக்கமுடியும். அசுர சக்திகளை வெளியேற்றமுடியும்.*

*மனதின் 'உள் கடந்து' இறைசக்தியை உணர மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்து மனதில் பதியவைத்துள்ள பல்வேறு பதிவுகளை (தீவிர நம்பிக்கைகளை) ஆராய்ந்து புரிந்துகொண்டால் எவையெல்லாம் இறைசக்தியோடு தொடர்புகொண்டுள்ள தீவிர நம்பிக்கைகள், எவையெல்லாம் அசுர சக்தியோடு தொடர்பு கொண்டுள்ள தீவிர நம்பிக்கைகள் என்று தனித்தனியாக பிரித்து புரிந்துகொள்ள முடியும்*

*தீவிர நம்பிக்கை என்றால் என்ன என்பதை புரிந்துகொள்வதற்கு மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி மற்றும் சிந்தனை சக்தியின் வளர்ச்சி பற்றிய புரிதல்வேண்டும்.*

### மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி மற்றும் சிந்தனைத் திறன் வளர்ச்சி

*மனித இனம் தோன்றி 8 முதல் 10 மில்லியன் ஆண்டுகள் ஆகின்றன. அதாவது 80 லட்சம் முதல் ஒரு கோடி ஆண்டுகள் வரை ஆகின்றன.*

*கற்களை பயன்படுத்த தொடங்கிய காலத்தை மூன்று வகையாக வகைப்படுத்தி உள்ளனர்.*

***பழைய கற்காலம்:*** Paleolithic Period (old stone age) 2.5 to 3.5 million years ago and continued until about 10,000 B.C.

***இடைக் கற்காலம்:*** Mesolithic Period (middle stone age) 10,000 to 20,000 years.

***புதிய கற்காலம்:*** Neolithic Period (New stone age)

*கற்களை பயன்படுத்தும் அளவுக்கு சிந்திக்கத் தொடங்கிய காலம் 25 லட்சம் முதல் 35 லட்சம் ஆண்டுகள் ஆகியிருக்கும். (கி.மு 25 மில்லியன்முதல் 35 மில்லியன் ஆண்டுகள்வரை.)*

*கி.மு 8,000 வரை கற்களை பயன்படுத்தும் அளவுக்கு மட்டும்தான் மனிதனின் சிந்தனை திறன் வளர்ந்துள்ளது.*

*கி.மு 5,000-3,500 ஆண்டுகளில்தான் வெண்கலத்தை பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.*

*கி.மு 3,000 ஆண்டுகளில்தான் நாகரிக வளர்ச்சி தொடங்கியது.*

*இரும்பை பயன்படுத்த தொடங்கிய காலம் கி.மு 1,200 முதல் 1,500 வரை.*

*மேற்கண்ட தகவல்களிலிருந்து ஆறாம் அறிவான சிந்தனை சக்தி எவ்வளவு மெதுவாக வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை கண்டு கொள்ளமுடியும்.*

*பயம், வஞ்சகம், ஆக்ரோஷம், பாசம் மற்றும் நன்றியுணர்வு ஆகிய அனைத்தும் விலங்குகளின் குணங்கள் ஆகும்.*

*மனித இனமும் எது சரி? எது தவறு? என்று அணுவளவும் சிந்திக்கத் தெரியாத விலங்குகளைப்போலவே எந்தவித மாற்றமும் இல்லாமல் விலங்கின் அனைத்து குணங்களும் மாறாமல் லட்சக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து வந்துள்ளது.*

*ஐந்தாம் அறிவுள்ள விலங்கின் நிலையிலிருந்து வளர்ச்சி அடைந்து இறைவன் அருளிய மனதை பயன்படுத்தும் ஆறாம் அறிவான சிந்திக்கும் திறன் உருவான காலம் கற்காலம்.*

*கி.மு 3,000 ஆண்டுகளில்தான் நாகரிக வளர்ச்சி தொடங்கியது என்ற தகவல் மனிதனின் ஆறாம் அறிவு மிகமிக மெதுவாக வளர்ச்சியடைய தொடங்கியுள்ளது என்பதை தெரியப்படுத்துகிறது.*

*மனிதனின் சிந்திக்கும் திறன் வளர வளரதான் கற்றுக்கொண்ட அல்லது உணர்ந்த செய்திகளை நீண்டநாட்கள் மனதில் பதிய வைக்கும் திறன் மேம்பட்டுள்ளது.*

மேலும் மனதில் பதிய வைத்த செய்திகளை மீண்டும் நினைவுக்கு கொண்டுவரும் திறன் வளர்ந்துள்ளது.

நினைவாற்றல் இதுவே விலங்கிலிருந்து மாறுபட்ட ஆறாம் அறிவின் பரிணாம வளர்ச்சி.

சிந்திக்கும் திறன் விலங்கிலிருந்து மாறுபட்டு சிறிது சிறிதாக வளர்ந்தாலும் அவை முழுமையாக அசுர சக்தியின் ஆக்கிரமிப்பில்தான் கட்டுண்டு வந்துள்ளது.

அதாவது பயமும் வஞ்சக எண்ணங்களும் மேலும் மேலும் வளர்ந்துள்ளது.

விலங்கின் குணமான வஞ்சக குணம் நினைவாற்றலால் சூழ்ச்சியாக வளர்ச்சி பெற்றுள்ளது என்பது ஆழமாக சிந்தித்தால் மட்டுமே புரிய ஆரம்பிக்கும்.

நினைவாற்றலின் துணைகொண்டு எதிரிகளை அழித்தொழிக்கும் குரூர எண்ணங்கள் வளர்ச்சி அடைந்துள்ளது.

சிறு சிறு கூட்டங்களாக வாழ்ந்துவந்த மனித இனம் ஆங்காங்கே இருக்கும் பிற மனித கூட்டங்களை அழித்தொழிப்பதும் அவர்களின் உடமைகளை எடுத்துவருவதும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்துகொண்டிருக்கும் நிகழ்வுகள்.

மனித இனம் வஞ்சகமாக சிந்தித்து பல நாட்கள் திட்டமிட்டு சரியான நேரத்திற்கு காத்திருந்து பிறரைக் கொல்லுதல் என்பது வஞ்சக எண்ணங்கள் சிறிது சிறிதாக சூழ்ச்சியாக மாற்றம் அடைந்ததை தெரிவிக்கின்றன.

பயமும் வஞ்சக குணமும் மேலும் மேலும் அதிகரித்துள்ளது என்பதற்கு மனிதன் சக மனிதனை கொடூரமாக கொல்லும் குணங்களே அத்தாட்சியாக விளங்குகிறது.

சக மனிதர்கள் தங்களை கொன்று விடுவார்கள் என்ற பயத்திலேயே மனிதக் கூட்டங்கள் வாழ்ந்துவந்துள்ளன. அந்த பயத்தின் விளைவாக எதிரிக் கூட்டங்களை போரில் கொன்று குவித்த பின்னர் மீதம் உள்ளவர்களை சிறைபிடித்து வந்து கொடூரமாக கொல்லுதல், கை- கால்களில் விலங்கிட்டு மற்றும் அடிமைகளாக மாற்றி சித்ரவதை செய்வது என்பது எதிரிகளின் மனதில் பயத்தை அதிகரிப்பதற்கு காரணமாகிறது.

மனித இனத்தின் வரலாற்றை சுருக்கமாக தெரிந்து கொள்வதன்மூலம் ‘சூழ்ச்சி’ என்னும் மாபெரும் அசுர சக்தி மனிதனின் புத்திசாலித்தனம் என்ற தீவிர நம்பிக்கையாக மாறி உள்ளது என்ற புரிதலே அசுர சக்தியில் இருந்து விடுபட்டு இறை சக்தியோடு ஐக்கியமாவதற்கு முதல் படியாக மாறும்.

இறை சக்தியையும் அசுர சக்தியையும் தனித்தனியாக தெளிவாக பிரித்து அவற்றை குழந்தைகள் பாடம் கற்றுக்கொண்டு மனதில் பதியவைப்பதுபோல ஆழமாக நம் மனதில் பதிய வைப்போம்.

சூழ்ச்சி பயமும் வஞ்சக குணமும் அசுர சக்தி.

எதிர்பார்ப்பு இல்லாத அன்பு, நன்றி உணர்வு, மன்னித்தல் ஆகியவை இறை சக்திகள்.

இன்றுமுதல் எவையெல்லாம் இறைசக்தி சார்ந்த தீவிர நம்பிக்கைகள், எவையெல்லாம் அசுரசக்தி சார்ந்த தீவிர நம்பிக்கைகள் என்ற அடிப்படை புரிதலோடு நம் அன்றாட வாழ்வின் நிகழ்வுகளை ஆழ்மனதிலுள்ள இறை சக்தியோடு தொடர்பு படுத்த துவங்குவோம்.

இறைவனை தரிசிக்க கோவிலுக்கு செல்கிறோம். கூட்டமாக இருக்கிறது. வரிசையில் மெதுவாக நகர்ந்து கொண்டிருக் கும்போது ஒருசிலர் இடையில் புகுந்து செல்வதையும் பார்க்கிறோம்.

இந்த நிகழ்ச்சி பெரும்பாலும் நம் எல்லாருக்கும் பழக்கமான ஒன்று.

முந்தி செல்பவர்களை பொறுமையாக பார்த்துக்கொண்டிருந்த நிகழ்வுகளும் உண்டு. பொறுமை இழந்து கோபப்பட்ட நிகழ்வுகளும் உண்டு. அளவுக்கு மீறி கோபம் அடைந்து அவர்களோடு வாக்குவாதம் செய்த நிகழ்வுகளும் உண்டு.

நாமும் பல சந்தர்ப்பங்களில் பிறரை முந்தி சென்ற நிகழ்வுகளும் உண்டு.

நாம் முந்தி செல்லும்பொழுது பிறரிடம் சொல்லமுடியாத ஏதோ ஒரு சரியான

காரணம் இருந்திருக்கலாம்.

அதுபோலவே கூட்டத்தில் முந்தி செல்பவர்களுக்கும் ஏதேனும் ஒரு காரணம் இருக்கும் என்று தீர்மானித்து நமது சிந்தனையை இறை சக்தியை நோக்கி செலுத்துவோம்.

வரிசையில் நிற்கும் அந்த நேரங்களில் நம்முடைய சிந்தனைகளில் அசுரசக்தி உள்ளதா, இறைசக்தி உள்ளதா என்பதை சிந்திக்க இறைவன் கொடுத்த நேரம் என்ற புரிதலுக்கு வருவோம்.

அசுரசக்தி முந்தி செல்லும். பிறரது நடவடிக்கைகளில் இருந்து கோபத்தை தூண்டிவிடும்.

இறைசக்தி பொறுமையையும் மன்னிக்கும் குணத்தையும் வலுப்படுத்தும்.

இறை சக்தியை நோக்கி எண்ணங்களை செலுத்தும்பொழுது முந்தி செல்பவர்கள் பற்றிய எண்ணம் (அசுரசக்தியின் ஆக்கிரமிப்பு) விடுபட்டு மனம் முழுமையாக விழிப்புணர்வுக்கு வந்துவிடும்.

முழுமையான விழிப்புணர்வில் நாம் நின்றுகொண்டிருக்கும் இடத்தில் வியாபித்துள்ள இறை சக்தியை உணர துவங்குவோம்.

இறைசக்தியின் மன்னித்தல் என்ற தீவிர நம்பிக்கையை பயன்படுத்தும்போது எத்தகைய மாற்றம் மனதில் நிகழ்கிறது மனம் எவ்வாறு ஆனந்தமயமாகிறது என்பது புரிய ஆரம்பிக்கும்.

அந்த தட்சணத்தில் மனம் முழுமையான பேரானந்தத்தில் திளைக்கும்.

இதுபோன்ற அன்றாட வாழ்வில் நிகழும் ஒவ்வொரு நிகழ்விலும் நமது எண்ண ஓட்டங்களை இனிமேல் ஆராய துவங்குவோம்.

குழந்தைகள் எழுத்தை கற்றுக்கொள்வது போல வீட்டில் இறைவனை நினைக்கும் போதும், கோவிலுக்கு செல்லும்போதும் வேறு எதைப்பற்றியும் சிந்திக்காமல் இறை சக்தியை நோக்கி நமது எண்ணங்களை செலுத்தும் பழக்கத்தை அதிகப்படுத்த அதிகப் படுத்த நமது புற சூழ்நிலைகள் அனைத்திலும் இறைசக்தியை உணரத் துவங்குவோம்.

சிறிது சிறிதாக கோவிலில் மட்டும்தான் இறைவன் இருக்கின்றார் என்ற அறியாமையிலிருந்து விடுபட்டு தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார். இறை சக்தி பிரபஞ்சம் முழுமையும் வியாபித்துள்ளது என்ற முதல் நிலை தத்துவம் நமது தீவிர நம்பிக்கையாக மாறும்.

இத்தகைய எண்ண ஓட்டங்களின் விளைவாக நம் மனம் எல்லா சூழ்நிலைகளிலும் பேரானந்தத்தை உணர ஆரம்பிப்பதைக் காணமுடியும்.

சூழ்ச்சி என்பது நமது புத்திசாலித்தனம் என்ற தீவிர நம்பிக்கையிலிருந்து விடுபட்டு அது அசுர சக்தியின் வெளிப்பாடு என்ற தீவிர நம்பிக்கையாக மனதில் பதிய வைப்போம்.

அத்தகைய தீவிர நம்பிக்கையுடன் நமது எண்ணங்களை ஆழ்ந்து கவனிக்கும் பொழுது எப்படியெல்லாம் ஒவ்வொரு விஷயத்திலும் நாம் வஞ்சகமாக சிந்திக்கிறோம் என்பது புரிய ஆரம்பிக்கும்.

உடனடியாக, ‘மன்னித்தல்’ அல்லது ‘நன்றி உணர்வு’ அல்லது ‘எதிர்பார்ப்பில்லாத அன்பு’ இவற்றில் ஏதேனும் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ பயன் படுத்தி அந்த எண்ணங்களை வெளியேற்றலாம்.

குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ஒரு முறையாவது ஒரு நிகழ்வையாவது அலசி ஆராய்ந்து இறைசக்தியின் எண்ணங்களை விழிப்புணர்வுக்கு கொண்டுவரலாம். அத்தகைய எண்ணங் களால் மாற்றம் அடைந்த உங்களது அனுபவத்தை தெரியப்படுத்தினால் வாசகர்கள் அனைவரும் கடினமான இந்தக் கருத்துகளை சுலபமாக புரிந்துகொள்வதற்கு இயல்பான உதாரணங்களாக மாறும்.

சூழ்ச்சி என்னும் அசுர சக்தியின் தீவிர நம்பிக்கையை சிந்தனை சக்தி வாயிலாக கண்டுகொள்ள தொடங்குவோம்.


பொய் சொல்வது என்பதே சூழ்ச்சிதான் என்பதை சிந்திக்கத் தொடங்குங்கள்.

**–விழிப்புணர்வைத் தொடர்வோம்!**

# செருத்துணை



கதை, ஓவியம் தமிழ்



# ண நாயனார்


கோவில் பிரகாரத்தில் வலம் வந்து கொண்டிருந்த அரசி பூமாலை கட்டும் மண்டபத்தின் பக்கத்திலே
விழுந்து கிடந்த ஒரு பூவை எடுத்து
முகர்ந்து பார்த்தாள்.
அதைக் கண்ட செருத்துணையார் சிவபெருமானுக்கு சமர்ப்பிக்க வேண்டிய பூவை முகர்ந்து பார்த்து சிவ அபராதம் செய்துவிட்டாள் என்று நினைத்து, அவளுடைய கூந்தலைப் பிடித்து இழுத்து
கத்தியால் அவளுடைய மூக்கை அரிந்தார்.
பின்னர் நெடுங்காலத் திருத்தொண்டின் வழி நின்று சிவபதத்தை அடைந்தார்.

# புகழ்த் துணை


செருவிலிபுத்தூரில்,
ஆதிசைவர் குலத்தில்
தோன்றியவர்
புகழ்த்துணையர்
அவர் சிவாகம விதிப்படி
பரமசிவனை அர்ச்சனை செய்து
வருங்காலத்தில் பஞ்சம்
உண்டாயினமையால்
பசி மிகப் பெற்றும், அர்ச்சனை
செய்வதை விடமாட்டேன் என்று
அல்லும், பகலும் அர்ச்சித்து
வந்தார்.
ஒருநாள் திருமஞ்சனமாட்டும்
பொழுது, மிகுந்த பசியினால்
கை சோர்ந்து
கலசந் திருமுடிமேல் விழ,
அவர் ஈசன் திருவடியிலே
விழுந்து அயர்ந்து,
திருவருளினால் நித்திரை
அடைந்தார்,


அப்பொழுது சிவபெருமான் அவருக்குச் சொப்பனத்தில் தோன்றி,
"பஞ்சம் நீங்கும் வரைக்கும் உனக்கு தினந்தோறும் இங்கே ஒவ்வொரு காசு வைப்போம்" என்று அருளிச் செய்தார்.
புகழ்த்துணை நாயனார் விழித்து எழுந்து பீடத்தின் கீழே ஒரு காசு இருக்கக் கண்டு, அதனைக் கைகொண்டு வாழ்ந்தார்.
அவ்வாறு ஒவ்வொரு காசு தினமும் பெற்று, பஞ்சம் நீங்கிய பின்னும் நெடுங்காலம் மெய்யடிமைத் தொழில் செய்து,
பரமசிவனது திருவடிநிழலை அடைந்தார்.

**'சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.'**

**-திருவள்ளுவர்**

உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால் அவரது சொல்லில் அநீதி பிறக்காது; நீதியும் நியாயமும் இருக்கும். அதுவே நீதியாகும் என்பதாம்.

பாண்டவர்கள் காட்டில் இருந்தபோது ஒருமுறை, கண்ணனை விருந்துண்ண, தங்கள் குடிசைக்கு அழைக்க விரும்பினர்.

கண்ணனை அழைக்கச் சென்றான் நகுலன். தனக்கு அன்று அவசியப் பணி இருப்பதால் வர இயலாது என்றார் கண்ணன். ஏமாற்றத்துடன் திரும்பினான் நகுலன். 'கண்ணன் அவருடைய பிரியமான பக்தன் அழைத்தால்தான் வருவார். அவர் என்னிடம் பேரன்பு உடையவர். நான் சென்று கண்ணனை அழைத்துவருகிறேன்' என கர்வத்துடன் கூறிச் சென்றான் அர்ஜுனன். அவனிடமும் தன்னால் வரமுடியாது எனக் கூறினார் கண்ணன். இதைக் கேள்வியுற்ற பாண்டவர்கள் செய்வதறியாது திகைத்தனர்.

பின்னர், தான் சென்று அழைத்து வருவதாகச் சொன்னான் பீமன். அனைவரும் அதைக்கேட்டு சிரித்தனர். பீமனைத் தவிர மற்ற அனைவரும் கண்ணனை ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்ததும் வணங்குபவர்கள். ஆனால் பீமன் ஒருநாளும் பிரார்த்தனையில் பங்கேற்றதில்லை. 'நம்மில் நீதான் கண்ணனிடம் குறைந்த பக்தியுள்ளவன்.

# பகையைப் பாசமாக்கி பன்மடங்கு பலன்களைத் தந்தருளும்

# திருக்கண்ணமங்கை ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள்!


ஆலயத் தோற்றம்

✡ **கோவை ஆறுமுகம்**




ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள்
அபிஷேகவல்லி

உன்னால் அவரை கண்டிப்பாக அழைத்துவர முடியாது' என்றனர் அனைவரும்.

'கவலைப்படாதீர்கள். நான் அழைத்துவருகிறேன்' என்றான் பீமன். திரௌபதியிடம் 'நீ விருந்துக்கு ஏற்பாடு செய், நான் கண்ணனுடன் வருகிறேன்' என்றான் பீமன்.

கண்ணனிடம் சென்று 'கண்ணா! நீ விருந்துக்கு வராவிட்டால் எங்களுக்கும் இன்று உணவில்லை. திரௌபதி ஏற்கெனவே சமைக்கத் துவங்கிவிட்டாள். ஆகையால் நீ என்னுடன் கட்டாயம் விருந்துக்கு வர வேண்டும்' என்றான் பீமன்.

அதன்பின் பீமன் தன் கதையைக் கையில் எடுத்து, கண்ணனிடம், 'நீ வராவிட்டாள் இந்தக் கதையால் என் தலையை மோதிக் கொண்டு உயிர் விடுவேன்' என்றான். 'எனக் காக உயிரையும் துறக்க நினைத்த, நீதான் உண்மையான பக்தன்' எனக்கூறி பீமனுடன் விருந்துக்கு வந்தான் கண்ணன்.

கண்ணன்மீது தீவிரமான பக்தியுடையவன் பீமன். ஆனால் மற்றவர்களைப்போல் ஒருநாளும் வெளிப்படுத்தியதில்லை. அத்தகைய உண்மையான பக்திக்காகத்தான் பீமன் அழைத்ததும் விருந்துக்கு வர சம்மதித்தார் கண்ணன்.

கடவுளிடம் நாம் மேற்கொள்ளும் பக்தியானது வெளிப்பகட்டுக்காக இல்லாமல் தூய்மையான மனதுடன் ஆத்மார்த்தமாக இருத்தல் வேண்டும்.

மகேந்திரபுரி நாட்டை ஆண்ட மன்னன் மணிவர்மன், மக்களுக்கு புதுமையான போட்டி ஒன்றை நடத்த எண்ணினான். தீவிரமாக சிந்தித்து, 'அரண்மனை கோட்டையின் கதவை, கைகளால் தள்ளித் திறப்பவருக்கு நாட்டின் ஒரு பகுதி வழங்கப்படும். போட்டியில் தோற்றால் கைகள் வெட்டப்படும் என அறிவிப்பை வெளியிட்டான் மன்னன்.

மக்கள் பலவாறாக இதுபற்றி பேசிக்கொண்டனர். பயத்தால் பங்கேற்பதை அனைவரும் தவிர்த்தனர். அந்த நாட்டைச் சேர்ந்த இளைஞன் அகிலன் மட்டும் துணிந்தான். போட்டியில் பங்கேற்று முயற்சி செய்ய முன்வந்தான். அதற்காக கோட்டை வாசலுக்கு வந்தவனை பலரும் எச்சரித்தனர்.

'தோற்றால் உன் கைகள் வெட்டப்படும். பின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.' ஊர்மக்கள் பேச்சுக்கேட்டு, 'ஐயா... போட்டியில் வெற்றிபெற்றால் ஒரு நாடு கிடைக்கும். நானும் ஒரு அரசனாக ஆவேன்; தோல்வியடைந்தால் கைகள்தானே போகும். உயிரை இழக்கமாட்டேன் அல்லவா' என கூறியபடி கோட்டைக் கதவை கைகளால் தள்ளினான்.

அது சட்டென திறந்துகொண்டது.



கதவு தாழிடப்பட்டிருக்கவில்லை. உட்புறமாகத் திறந்துதான் இருந்தது. அகிலனின் துணிச்சலை வரவேற்று, 'தோற்றுவிடுவோமோ... எதையாவது இழந்து விடுவோமோ என எண்ணி எதற்கும் முயற்சிக் காமல் மக்கள் பல சந்தர்ப்பங்களை விட்டுவிடுகின்றனர். தன்னம்பிக்கை யுடன் முயற்சிப்போர் வெற்றி பெறுகின்றனர்' என கூறி மன்னன், பரிசு வழங்கி கௌரவித்தான்.

பீமனைப்போல் நேர்மையும், அகிலனைப்போல் நெஞ்சுறுதியும் கொண்டு தன்னம்பிக்கை, இறை நம்பிக்கையுடன் முயற்சித்தால் எங்கும் எதிலும் வெற்றி மேல் வெற்றிகிட்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாய் விளங்குகின்றதொரு திருத்தலம் தான் குடவாசல் வட்டத்தில் திருக்கண்ண மங்கையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பக்த வத்சலப் பெருமாள் திருக்கோவில்.

**இறைவன்:** ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள், பத்தராவிப் பெருமாள்.

**இறைவி:** அருள்மிகு கண்ணமங்கை நாயகி (அபிஷேகவல்லி).

**உற்சவர்:** பெரும் புறக்கடல் பெருமாள்.

**ஊர்:** திருமருகல்.

**கோலம்:** நின்ற கோலம், ஸ்ரீ தேவி பூமி தேவி தாயார்கள் மற்றும் ஆண்டாள்.

**புராணப் பெயர்:** லட்சுமி வனம்.

**ஊர்:** திருக்கண்ணமங்கை,

**மாவட்டம்:** திருவாரூர் மாவட்டம்..

**தலவிருட்சம்:** மகிழ மரம்.

**தீர்த்தம்:** தர்ஷண புஷ்கரணி தீர்த்தம்.

சுமார் 1,200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்த இவ்வாலயம் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்குவது குறிப்பிடத் தக்கது. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருத்தலங்கள் 108 திவ்ய தேசங்கள். அதில் 18-ஆவது திவ்ய தேச மாகவும், சோழநாட்டுத் திருப்பதிகளில் 16-ஆவது திருத்தலமாகவும் போற்றப் படுவதோடு இன்னும் பல்வேறு சிறப் புக்களை பெற்றதொரு திருத்தலம்தான் திருக்கண்ணமங்கை திவ்யதேசம்.

'புண்ணியம் ஏழு புவியில் பெற்ற தலமே!







பாற்கடலைக் கடைவது ஒன்றும் சுலபமான செயல் இல்லை என்பதை உணர்ந்த தேவர்கள் அதற்கு வழிகூறும்படி திருமாலைக் கேட்டனர். மந்திரகிரி மலையை மத்தாக்கி வாசுகி என்ற பாம்பை கயிறாக்கி பாம்பின் தலைப்பகுதியில் அசுரர்களும், வால்பகுதியில் தேவர்களும் நின்று பாற்கடலைக் கடைந்தால் அமிர்தம் கிடைக்கும் என்று வழி கூறினார் திருமால். அதன்படி தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைத்தனர்.

மண்ணிலே மங்கையை மணந்த தலமே!
பாற்கடல் பள்ளிகொண்ட பரந்தாமன் தலமே!
கார்முகில் வண்ணன் கண்ணன் மங்கள தலமே!

சந்திரன் பெற்ற சாபம் தீர்த்த தலமே!
மந்திர தீர்த்தம் மகாலட்சுமி அபிஷேகமே!
சித்ராபௌர்ணமியில் சிந்தைகவர் திருவிழாவே!
சித்தம் குளிர்ந்து சிங்காரம் பொங்குமே!
பத்திரமாய் காக்கும் பக்தரை பத்தராவியே!
பத்திரமாய் கூடாகும் பணிவான தேனீக்களே!

பண்ணிலே வந்திடும் பக்தவத்சல பெருமாளே!
கண்ணிலே கருத்திலே கலந்திடு பெருமாளே!
திருமகளை திருவாரூரில் திருமணம் செய் திருமாலே!
திருக்கண்ண திருத்தலத்தில் திகழும் திருமாலே!'
-திருமங்கை ஆழ்வார்.

**தல வரலாறு**

ஒருசமயத்தில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் கடும்போர் மூண்டது. இதில் இரு தரப்பிலும் பலர் உயிரிழந்தனர். கவலையடைந்த தேவர்கள், இந்திரன் தலைமையில் நான்முகனை சந்தித்து போருக்கு தீர்வு காணுமாறு வேண்டினர். நீண்ட சிந்தனைக்குப்பின் அவர், திருமால் இப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பார் என்றார்.

தேவர்களும் திருப்பாற்கடலில் பள்ளிகொண்டுள்ள திருமாலை சந்தித்து இறவா நிலைமை அடைய வழிகூறும்படி வேண்டி நின்றனர். திருமாலும் திருப்பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து வெளிப்படும் அமிர்தத்தை அருந்தினால் இறவாநிலை ஏற்படும் என்று தெரிவித்தார்.

பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து கற்பக விருட்சகம், காமதேனு முதலானவை தோன்றின. நிறைவில் திருமகள் வெளிப்பட்டாள். முதலில் அவள் திருமாலின் சௌந்தர்யத் தோற்றத்தைக் கண்டாள். அந்த தோற்றத்தையே மனதில் நிறுத்தி இத்தலம் வந்து பெருமாளை அடைய கடுந்தவம் இருந்தாள்.

திருமகள் தவமிருப்பது பெருமாளுக்குத் தெரியவந்தது. தனது மெய்க்காப்பாளரான விஷ்வக் சேனரிடம் இதுகுறித்து கூறி முகூர்த்தத் தேதி குறித்துத் தர கூறினார்.

பிறகு மகாலட்சுமிக்கு காட்சி கொடுத்து முப்பத்து முக்கோடி தேவர்கள் சூழ திருமால் இத்தலத்திற்கு வந்து லட்சுமியை கரம்பிடித்தார். தனது பாற்கடலைவிட்டு வெளியே வந்த திருமகளை மணம் முடித்ததால் பெருமாளுக்கு ‘பெரும்புறக்கடல் பெருமாள்’ என்ற பெயர் நிலைத்தது. மகாலட்சுமி இத்தலத்தில் தவமிருந்ததால் இத்தலம் ‘லட்சுமி வனம்’ என்றழைக்கப்படுகிறது. இத்தலத்திலேயே திருமணம் நடந்ததால் ‘கிருஷ்ண மங்கள க்ஷேத்திரம்’ என்ற பெயரும் ஏற்பட்டது.

ஒரு தலத்துக்கு இருக்க வேண்டிய விமானம், ஆரண்யம், மண்டபம், தீர்த்தம், க்ஷேத்திரம், நதி, நகரம் என்ற ஏழு லட்சணங்களுடன் இத்தலம் அமையப் பெற்றதால் இத்தலத்திற்கு ‘சப்த புண்ணிய க்ஷேத்திரம் ‘சப்தாம்ருத க்ஷேத்திரம்’ என்ற பெயர்களைப்





பெற்றது. மேலும் மோட்சம் வேண்டுபவர்கள் இத்தலம் வந்து ஓர் இரவு மட்டும் இங்கு தங்கினால் போதும். பக்தர்களுக்காக ஆவிபோல் வேகமாக வந்து அருள்பாலிப்பதால் பக்தர் ஆவி- பத்தராவி என்ற பெயர்பெற்றார் பெருமாள்.

இத்தலத்தில் திருமால்- திருமகள் திருமணம் நடைபெற்றதால் அந்நிகழ்வை எப்போதும் காண வேண்டும் என்று தேவர்கள் நினைத்தார்கள். அதனால் தேனீக்கள் வடிவம் எடுத்து இருப்பதாகக் கூறுவர். அதற்கேற்ப தாயாரின் சந்நிதியின் வடபுறத்தில் ஒரு தேன்கூடு உள்ளது. இந்த தேன்கூடு எவ்வளவு காலமாக இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. இத் தேனீக்கள் பக்தர்கள் யாருக்கும் இன்னல்கள் விளை விப்பதில்லை. இது இத்தலத்தில் நிகழும் அற்புதம் ஆகும்.

### சிறப்பம்சங்கள்

- இறைவனின் திருநாமம் ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள். உற்சவர். பெரும்புறக்கடல். மூலவர் உத்பவ விமானத் தின்கீழ் அருள்பாலிக்கிறார். சிவபெருமான் நான்கு திசை களையும் நான்கு உருவமெடுத்து காத்துவருகிறார்.

- இறைவியின் திருநாமம் கண்ணமங்கைநாயகி. மகாவிஷ்ணு வாமன அவதாரம் எடுத்தபோது வானத்தை அளந்த காலை பிரம்மன் தன் கமண்டல நீரால் அபிஷேகம் செய்தார். அதிலிருந்து தெறித்து விழுந்த ஒரு துளி இவ்விடத்தில் விழுந்தது. அதுவே தர்ஷண (தரிசன) புஷ்கரணி ஆனது. சந்திரன் தனக்கு ஏற்பட்ட சாபம் நீங்க அலைந்தபோது இந்த புஷ்கரணியை கண்டான். இதைப் பார்த்தவுடனேயே அவனது சாபம் தீர்ந்தது. எனவேதான் இதற்கு தர்ஷண புஷ்கரணி (தரிசித்த மாத்திரத்தில் பயன்தர வல்லது) என்ற பெயர் ஏற்பட்டது. இங்குள்ள தாயாரை பெருமாள் இந்த தீர்த்தத் தால் அபிஷேகம் செய்து பட்ட மகிஷியாக்கினார். இதனால் இந்த தாயாருக்கு அபிஷேகவல்லி என்ற பெயர் உண்டாயிற்று.



பட்டசிராஜ பட்டாச்சார்யார்



ராஜ்குமார்



கோபிநாதன்

- நாலாயிரத் திவ்ய பிரபந் தத்தை தொகுத்தவர் நாதமுனிகள். இவருக்கு திருக்கண்ண மங்கை யாண்டான் என்ற சீடர் ஒருவர் இருந்தார். இவ்வூரில் பிறந்த இவர் பெருமாளிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர். கோவிலை சுத்தம் செய்து பெருமாளே அடைக்கலம் என்று இருந்தார். ஒருநாள் இவர் வேத பாராயணம் செய்துகொண்டே, நாய் வடிவம்கொண்டு மூலஸ்தானத் திற்குள் ஓடி ஜோதியாகி இறை வனுடன் கலந்தார். இன்றும் ஆனி மாதம் திருவோண நட்சத்திரம் இவரின் மகாநட்சத்திரமாகக் கொண்டாடப்படுகிறது. இவரது பெயரே (திருக்கண்ணமங்கை) இவ்வூருக்கும் நிலைத்துவிட்டது. பத்மபுராணம் 5-ஆவது காண்டத்தில் 81 முதல் 87 வரையிலான 7 அத்தி யாயங்களில் இத்தலம் பற்றி சிறப் பாகக் கூறப்படுகின்றது.

- இத்தலம் வைணவமரபின் தென் கலை மற்றும் வைகானச ஆகமத் தைப் பின்பற்றி அனுதினமும் ஆறு கால பூஜைகள் நடைபெறுகிறது.

- திராவிடக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட இத்தலம் கி.பி. 6 முதல் 9-ஆம் நூற்றாண்டு வரையிலான ஆழ்வார் துறவிகளின் ஆரம்பகால, இடைக்கால தமிழ் நியதியான நாலாயிரத் திவ்யப்





பிரபந்தத்தில் மகிமைப்படுத்தப்பட்டு, கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இடைக்கால சோழர்களால் தொடங்கப்பட்ட தாகவும், பின்னர் தஞ்சாவூர் நாயக்கர்களின் பல்வேறு காலங்களில் பங்களிப்புகள் செய்யப் பட்டதாகவும், சோழர்கால கல்வெட்டுக்கள் மூன்று உள்ளதாகவும் தலபுராணம் சொல்கிறது.

● பஞ்சகிருஷ்ண தலங்களில் ஒன்றான திருக்கண்ணமங்கையின் தல விழாக்கள் கிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசி சனிக்கிழமை, நவராத்திரி, வைகுண்ட ஏகாதசி பரமபத வாசல் திறப்பு மற்றும் விஜயதசமி விழாக் களாக இருந்தாலும் முக்கியமான திருவிழா என்றால் சித்திரை மாத பௌர்ணமியை ஒட்டி பத்து நாட்கள் பிரம்மோற்சவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அச்சமயத்தில் கலந்துகொண்டு வழிபடு பவர்களுக்கு எண்ணம் எளிதில் நிறை வேறும் என்கிறார் ஆலய செயல் அலுவலர், கு. ராஜ்குமார்.

● திருமங்கையாழ்வார் தனது 14 பாசுரங் களில் பாடியுள்ள திருக்கண்ணமங்கை திருத் தலத்தில் உறையும் ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள் அருள்மிகு கண்ணமங்கை நாயகி தாயாரை முகமலர தரிசித்தால் அகம் மகிழ வைப்பார்கள் என்பது உள்ளூர்வாசிகளின் சொல்வழக்கு மற்றும் மனசஞ்சலம் நீங்கி மனமகிழ்வோடு வாழலாம் என்கிறார் கோவில் கணக்கர் க. கோபிநாதன்.

● மேற்கின் காவல்தெய்வமான வருணனும், ரோமச முனிவரும் மற்றும் முப்பத்து முக்கோடி தேவர்களும் திருக்கண்ணமங்கை அம்மையப்பனை தரிசித்து பலன் கண்டுள்ளனர்.

● முன்னொரு நாளில் மது, கைடபர் என்ற இரண்டு அசுரர்கள் பிரம்ம தேவனிடமிருந்து வேதங்களை அபகரித்துக் கொண்டு கடலில் மறைந்தனர். வேதங்களை மீட்கும் பொருட்டு, உதவிகேட்க திருமாலி டம் சென்றார் பிரம்மன். பாற்கடலிலுள்ள திருமாலுடைய கோவில் காப்பான் ஸநந்தன் என்பவன், பகவான் பாற்கடலில் இல்லை. மகாலட்சுமி தரிசன புஷ்கரணிக் கரையில் தவம் செய்வதால் அவருக்காக திருக்கண்ண மங்கையில் தரிசன புஷ்கரணியின் மேற்கு திசையில் உள்ளார் எனக் கூறினான். இதைக்கேட்ட பிரம்மன் பாற்கடலின் வடபுறத்தில் திருமாலை நினைத்து தவம் புரிந்தார். தவத்தின் பயனாக திருமால் விரைந்துவந்து அசுரர்களை வதம் செய்து வேதங்களை மீட்டுத்தந்தார். பின்னர் தன்னை வணங்கிய பிரம்மனிடம் அவர் இந்த லட்சுமிக்ஷேத்திரம் மகா புண்ணியமானது. என் பாத தீர்த்தமே தரிசன புஷ்கரணி. பிராட்டியோடு நான் இங்கு நித்தியவாசம் செய்கிறேன். இந்த புஷ்கரணிக் கரையில் தரிசனம் கொடுத்தபடியால் இதற்கு தர்ஷண

புஷ்கரணி எனப்பெயர் ஏற்படும் என்றார்.

108 திவ்ய தேசங்களில் ஒன்றானதும், கிருஷ்ண மங்கள க்ஷேத்திரம் என்கிற திருக் கண்ண மங்கையின் தலைமை பட்டாச்சாரி யார் கூறுவது:

தர்ஷண புஷ்கரணியை ஸ்தானு என்ற சிவன், பிரம்மன், முருகன், விநாயகர் ஆகியோர் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு திக்குகளில் காத்துவருகின்றனர். நடுவில் க்ஷேத்திர பாலகனோடு இந்திராதி தேவர்கள் அவர்களுக்குரிய திக்குகளில் காவல் புரிவதோடு, முப்பத்து முக்கோடி தேவர்கள், வசிஷ்டர், வாமனர், ஜாபாலி, காசியபர், பராசரர், வியாசர், விஸ்வாமித்திரர், அஷ்ட வக்ரர் ஆகிய பிரம்மரிஷிகள் திசைதோறும் நின்று தீர்த்த சேவைபுரிவதாக தலபுராணம் சொல்கிறது. இத்தல மகிமைகளை என்ன வென்று சொல்வது?

ரோகிணி நட்சத்திரக்காரர்களுக்கு பரிகார தலமாக விளங்குகிறதே அதைச் சொல்வதா? இத்தல பட்சிராஜன் மிகவும் பிரசித்தி பெற்ற வர். இவரைப் பிரார்த்தித்தால் கைமேல் பலன்கிட்டும். எந்தக் காரியம் குறித்து வேண்டிக்கொண்டாலும் உடன் முடித்து கொடுக்கக்கூடியவர் பட்சிராஜன். இவருக்கு ஒன்பது கஜம் கட்டம் போட்ட கறுப்பு நூல் கலக்காத புடவை சாற்றுவது மரபு. நாள் தோறும் பிரார்த்தனை, திருமஞ்சனம் ஆகியவை இங்கு மட்டும் தான் என்பது கூடுதல் சிறப்பு. பக்தர்களின் வேண்டுகோளை நின்ற கோலத்தில் சங்கு, சக்கரம் தரித்தவாறு காட்சியளிக்கும் கருடாழ்வார் உடனுக்குடன் பூர்த்தி செய்வதால் கண்கண்ட தெய்வமாகத் திகழ்கிறார். திருமணமாகாதவருக்கு திரு மணப் பேறு அளிக்கிறார். ஞாயிறு, வியாழன் ஆகிய கிழமைகளிலும், சுவாதி நட்சத்திரத் தன்றும் இவருக்கு திருமஞ்சனம் செய்து அம்ருத கலசம் நிவேதனம் செய்வது வழக்கம்.

திருமாலின் வாகனமாக அமைந்தவர் கருடன். வைணவ சமயத்தின் பெருமாள் கோவிலின் மூலவரை வணங்குவதற்கு முன்னர் கருடனை வழிபடவேண்டும் என்பது வைணவ ஆகமத்தின் நியதியாகும்.

**ஆலயப் பிரதான அர்ச்சகர் கூறுவது**

நவநாகங்களில் ஆதிசேஷனை இடதுகால் நகத்திலும் குளிகனை கழுத்தின் பின்புறத்திலும், வாசுகியை பூணூலாகவும், தட்சகனை இடுப்பிலும், கார்க்கோடகனை கழுத்து மாலையாகவும், பதுமம் மற்றும் மகாபதுமம் எனும் நாகர்களை இரண்டு காதணிகளாகவும், சங்கசூடனை தலைமுடி யிலும் அணிந்திருப்பார் கருடன். வேறு எந்த தலத்திலும் இல்லாத சிறப்பு பிரார்த்தனை என்னவென்றால்; கருடாழ்வாருக்கு ஒன்பது கஜம் கட்டம் போட்ட கறுப்புநூல் கலக்காத புடவை சாற்றி; தங்களது முறையான கோரிக்கைகளை வைத்து வழிபட்டால் காலதாமதமின்றி காரிய சித்தி ஏற்பட்டு தெளிவுபிறக்கும் என்கிறார். அத்துடன் எந்தெந்த கிழமைகளில் தரிசனம் செய்தால் எப்படிப்பட்ட பலன் என்பதையும் கூறுகிறார்.

**ஞாயிறுக்கிழமை:** தீராத நோய்கள் தீரும், மருத்துவச் செலவுகள் குறையும். மனக் குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும்.

**திங்கட்கிழமை:** குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். சொந்தங்களிடையே மன ஸ்தாபங்கள் நீங்கும்.

**செவ்வாய்க்கிழமை:** தைரியம் பெருகும். எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை வளரும்.

**புதன்கிழமை:** கண்ணுக்குத் தெரிந்த-தெரியாத எதிரிகள் அனைவரும் அழிவர். எதிரியற்ற நிலை உருவாகும்.

**வியாழக்கிழமை:** ஆயுள் அதிகரிக்கும். கண்டங்கள் விலகும்.

**வெள்ளிக்கிழமை:** கடன் தொல்லை நீங்கும். பணவரவு அதிகரிக்கும்.

**சனிக்கிழமை:** நற்கதி அடையும் பாக்கியம் கிட்டும். வழக்குகள் வெற்றியாகும்.

1. விமானம்- உத்யலாவதக விமானம்

2. மண்டபம்- வேத மண்டபம்

3. ஆரண்யம்- கிருஷ்ணாரண்யம்

4. க்ஷேத்திரம்- கிருஷ்ண மங்களக்ஷேத்திரம்

5. தீர்த்தம்- தர்ஷண புஷ்கரணி

6. ஆறு- விருத்தகாவேரி எனப்படும் வெட்டாறு

7. நகரம்- கண்ணமங்கை மாநகர்

ஆக இந்த ஏழு லட்சணங்களும் ஒருங்கே

அமையப்பெற்றதால் ஸப்தாம்ருத க்ஷேத்திரம் என்று பெயர் பெற்றது.

**கோவில் அமைப்பு**

நீர்வளம், நிலவளம்மிக்க காவிரித் தென்கரையில் திருவாரூர் மாவட்டத்தில் கண்ணமங்கை நகரினிலே ஆலயச் சுவர்கள் நாற்புறமும் தேரோடும் பெரிய வீதிகளால் சூழப்பட்டு கிழக்கு நோக்கிய 5 நிலை 90 அடி உயரமுள்ள ராஜகோபுரத்தின் நுழைவாயிலில் நான்கு தூண்கள்கொண்ட திறந்த மண்டபம் உள்ளது. அதன் கிழக்கே இம்மாநிலத்தின் மிகப்பெரிய கோவில் குளங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்ற தர்சன புஷ்கரணி தீர்த்தக் குளம் உள்ளது.

நான்கு பிராகாரங்களைகொண்ட இத்தலத்தில் முதல் கோபுரமான மொட்டை கோபுரத்தை கடந்து உள்ளே சென்றால் பலி பீடமும் கொடிமரமும் உள்ளன. இடப்புறம் ஆழ்வார்கள் சன்னதி, வலப்புறம் ஸ்ரீ மணவாள மாமுனிகள் சன்னதி இதைத் தொடர்ந்துள்ள ராஜகோபுரத்தைக் கடந்தால் முதல் பிராகாரம் வரும் செண்பக பிராகாரம் என அழைக்கப்படும் இந்த வெளிச்சுற்றில் நந்தவனமானது கோவிலுக்கு மாலைபோல் அமைந்துள்ளது. இப்பிராகாரத்தின் வலப் புறத்தில் திருமங்கையாண்டான் திருவரசும், தலவிருட்சமாகிய மகிழமரமும் உள்ளது. பலி பீடத்தில் மேற்புறத்தில் 2-ஆவது ராஜகோபுரம் உள்ளது. அதன் உட்புறம் கருடாழ்வார் சன்னதி பெருமானை நோக்கியவண்ணம் உள்ளது. தென்கிழக்கு பகுதியில் திருமடைப்பள்ளியையும், மடைப்பள்ளி நாச்சியாரையும் காணலாம். அதையடுத்து திருவந்திகாப்பு மண்டபம் உள்ளது.

கர்ப்பகிரஹம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகிய அமைப்புகளுடன் தாயார் சன்னதி உள்ளது. அர்த்த மண்டபத்தில் செவ்வக வடிவிலுள்ள சாளரத்தில் தேன்கூடு உள்ளது. பெருமாள் தாயார் திருக்கல்யாணத்தை காணவந்த முப்பத்து முக்கோடி தேவர்களும் இங்கு தேனீயாக இருப்பதாக ஐதீகம்.

ஆழ்வார்கள் சன்னதி, பிராகாரத்தின் நடுப்பகுதியில தென்புறம் சொர்க்கவாசல் கோபுரத்துடன் உள்ளது. வசந்த மண்டபம், தேசிகர் சன்னதி, ஹயக்ரீவ பெருமாள் கோதண்டராமர் சன்னதி, யாகசாலை, லட்சுமி, நரசிம்மர் யாழ் மீட்டும் நங்கை உருவங்கள் உள்ளன.

விசாலமான மகாமண்டபம், அதை யடுத்து அர்த்த மண்டபம், கருவறை என்ற அமைப்புடன் பெருமாள் சன்னதி விளங்குகிறது. மூலவர் பக்தவத்சலப் பெருமாள் அருள்பாலிக்கிறார். பிரம்மா நான்கு வேதங்களையும் நான்கு தூண்களாக நிறுத்தி ஸ்ரீ மண்டபமாக அமைக்கப்பட்ட இடத்தில் பெருமாள் தாயாரின் திருமண வைபவ நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பெரிய பெருமாளான மூலவர் 16 அடி உயரத்தில் நின்ற கோலத்தில் இருபுறமும் ஸ்ரீதேவி பூதேவி நாச்சியார்களுடன் எழுந்தருளி அருள்பாலிக்கிறார்.

வருகிற ஆங்கில புத்தாண்டு 2026 ஜன வரி, மார்கழி மாதத்திலேயே தரிசனம் செய்து மகிழ்வுடன் வாழுங்கள் என்று திருக்கோவில் நிர்வாகிகள் வருக என அழைக்கிறார்கள்.

**நடைதிறப்பு:** காலை 8.00 மணிமுதல் 12.30 மணிவரையும்; மாலை 5.00 மணிமுதல் இரவு 8.30 மணிவரை ஆலயம் திறந்திருக்கும்.

**ஆலயத் தொடர்புக்கு:** செயல் அலுவலர் (திருக்கோவில் அலுவலகம்) ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள் திருக்கோவில், திருக்கண்ணமங்கை அஞ்சல் 108 திவ்ய தேசக்கோவில், திருவாரூர் வட்டம்- 610 104. செயல் அலுவலர் கு. ராஜ்குமார். செல்: 94897 82566. கோவில் கணக்கர், க. கோபிநாதன் செல்: 90802 88115.

**பூஜை விவரங்களுக்கு:** பட்சிராஜ பட்டாச்சார்யார், செல்: 99437 02989.

**அமைவிடம்:** திருவாரூர் மாவட்டம், திருவாரூரிலிருந்து கும்பகோணம், செல்லும் சாலையில் எட்டுக் கிலோமீட்டர் தொலை வில் உள்ளது திருக்கண்ணமங்கை. பேருந்து வசதி நிறைய உள்ளது. பிரதான சாலை யிலேயே ஆலயம் அமைந்துள்ளது.

படங்கள்: போட்டோ கருணா

# கொள்ளைக்காரனை காவியம் பாடும் கவிஞனாக மாற்றிய ஈஸ்வரன்!

✡ எஸ். பி.சேகர்

இராமாயணத்தை இயற்றியவர் வால்மீகி மகரிஷி என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. அந்த வால்மீகி மகரிஷி எப்படிப்பட்டவராக இருந்தார். அவர் காவியம் படைக்கும் கவிஞனாக எப்படி மாறினார். அதற்கு காரணமாக, இருந்த ஈஸ்வரன் தோன்றிய இடம் பற்றிய இதிகாச வரலாறு பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இருண்ட காடு. யாரும் தனி அந்த காட்டுவழியே போவதற்கு பயம் கொள்வார்கள். இரண்டு பெரிய நகரம் மற்றும் கிராமங்களுக்கு இடையே அந்த அடர்ந்த காட்டுப் பகுதி அமைந்திருந்தது. அதனால் பல்வேறு பகுதி கிராம மக்கள் நகர மக்கள் போகும் போது அந்த காட்டை கடந்துதான் செல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது.

இந்தகாட்டுப்பகுதியில் ஒருகொள்ளையன் தன் கூட்டத்தாரோடு சேர்ந்து மக்களை வழிமறித்து. அவர்களது உடைமைகளை கொள்ளை அடித்துக்கொண்டிருந்தான். இதன்காரணமாக மக்கள் வணிகர்கள், தனித்தனியாக செல்லாமல் கூட்டம் கூட்டமாக காட்டை கடந்து செல்வார்கள். அப்படி எவ்வளவு பாதுகாப்பாக சென்றாலும் கூட அந்த வழிப்பறிக் கொள்ளையர்கள், அவர்களை மறித்து மிரட்டி கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அவ்வப்போது நடந்துகொண்டுதான் இருந்தது. மக்கள், வணிகர்கள், தங்கள் உயிரை கையில் பிடித்துக் கொண்டு இந்த காட்டை கடந்து சென்று வந்தனர்.

இந்த காட்டின் கொள்ளை கூட்டத்தின் தலைவன் தலைமையில் கொள்ளையர்கள் கூடாரம் அமைத்து தங்கிகொண்டு, வழிப் பறிக் கொள்ளையில் ஈடுபட்டு வந்தனர். எத்தனை பாதுகாப்புடன் காட்டைக் கடந்தாலும், இந்த கொள்ளையர்களிடம் மாட்டிக்கொண்டு மக்கள் தங்கள் உடைமைகளை இழந்து வந்தார்கள்.

அந்த கொள்ளை கூட்டதலைவன் கொள்ளையடிப்பதில் மிகவும் சாமர்த்திய சாலி. இதனால் பலர் அவனை அண்டி கொள்ளையர்களாக மாறி கொள்ளை









யடிக்கும் பொருட்களில் பங்குபெற்று வாழ்ந்த னர். சில நேரம் இந்த கூட்டத்தின் தலைவன் தனியாகவும் வழிப்பறி செய்ய கிளம்பி விடுவார். அந்த கொள்ளையன் தான் கொள்ளையடிப்பதற்கு மற்றவர்களிடம் கூறிய காரணம் இதுதான். தனக்கு பெரிய குடும்பம் உள்ளது. மனைவி, குழந்தைகளை யும், தன்னை அண்டியிருக்கும் உற்றார்-உறவினர்கள், நண்பர்கள் போன்றவர்களை காப்பாற்றவேண்டியதும் தன் கடமை அதற்காகவே கொள்ளைத் தொழிலை எடுத்ததாகக் கூறிவந்தான்.

அந்த கொள்ளையர் கூட்டத் தலைவன், ஒரு நாள் தனியாக கொள்ளை அடிப்பதற்கு சென்றுகொண்டிருந்தான். அப்போது ஒரு முனிவர் கையில் ஒரு தம்புராவோடு நாராயணா.... நாராயணா..... என்றபடி வந்து கொண்டிருந்தார். அவர் வேறு யாருமல்ல நாரத மகா முனிவர்தான் கொள்ளையன் அவர் எதிரில் போய் நின்றான். கொள்ளை யனின் ஆஜானுபகுவான உருவத்தை பார்த்து நாரதர் நடுநடுங்கிப் போனார். இருந்தும் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு யாரப்பா நீ, உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவன் நான் யாராக இருந்தால், உமக்கு என்ன உம்மிடம் இருக்கும் உடைமைகளை எல்லாம் என்னிடம் எடுத்துக்கொடு என்று மிரட்டினான். அப்போதுதான் முனிவருக்கு அவன் ஒரு கொள்ளைக்காரன் என்பது தெரிந்தது.

முனிவர் அவனிடம், அப்பா நீ இப்படி செய்வது மகாபெரிய பாவம் அல்லவா? காட்டைக் கடந்து செல்பவர்களையெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டிருந்தால், எமன் ஒருநாள் உன் உயிரை கொள்ளை அடித்துச்சென்று நரகத்தில் தள்ளுவாரே, இது மகா பாவம் அல்லவா என்று கொள்ளையனுக்கு அறிவுரை சொன்னார். கொள்ளையன் முனிவரின் பேச்சைக் கேட்பானா? என்ன? முனிவரே தேவையில் லாமல் பேசி, என் நேரத்தை வீணாக்காதே. என் மனைவி, மக்கள், உறவு, எல்லோரும் ஒவ்வொரு நாளும், நான் என்ன கொண்டு வரப்போகிறேன் என்று ஆவலோடு வழி மேல் விழி வைத்து காத்திருப்பார்கள். அவர் களை திருப்திபடுத்தவும் அவர்களை காப்பாற்றவும்தான் நான் இந்த கொள்ளைத்

தொழிலையே செய்கிறேன்.

உம்மிடம் இருக்கும் உடைமைகளை உடனே கொடுத்தால் உயிர் பிழைத்து செல்லலாம். இல்லாவிட்டால் இங்கேயே நீர் செத்துப் போக உம்மை தயார் செய்துகொள்ளும் என்று, கடுமையான வார்த்தைகளால் நாரதரை மிரட்டினான். கொள்ளையனின் வார்த்தைகள் கடுமையாக இருந்தும்கூட, நாரத முனிவர் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அந்த கொள்ளையனிடம் கொஞ்சம் கொஞ்சமாக பேசி... பேசி... அவன் மனதை நல்வழிக்கு திருப்புவதற்கு முயற்சி செய்தார்.

அப்பா நான் ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்கிறேன். அதற்கு நீ பதில் சொன்ன பிறகு என்னிடம் இருக்கும் எல்லா உடைமைகளையும், நீயே எடுத்துக் கொள்ளலாம் என்றார். சீக்கிரம் கேளுங்கள் என்றான் கொள்ளையன். ‘இந்த கொடுமையான கொள்ளை, கொலை தொழிலை உன் மனைவி, மக்களுக்காகத்தான் செய்கிறேன் என்கிறாயே அது உண்மையா?’ என்று கேட்க, கொள்ளையன் ‘ஆம்... அவர்கள் தானே, என் எல்லா சுக துக்கங்களிலும் என்னோடு இரண்டற கலந்திருக்கிறார்கள். எனக்காக அவர்கள் தங்கள் உயிர்களைக் கூட தியாகம் செய்வார்கள் என்று கூறினான்.

அப்போது நாரதர், ‘உன் எல்லா சுகங்களிலும் பங்கு கொள்வார்கள் என்கிறாய். அவர்கள் தங்கள் உயிரை உமக்காக கொடுக்கப் போவதாக எப்போதாவது சொல்லி இருக்கிறார்களா? என்ன? அவர்கள் நீ செய்யும் இந்த பாவத்தில் ஒருபோதும் பங்கேற்க மாட்டார்கள். சம்மதிக்க மாட்டார்கள் என்று நாரதர் சொல்ல, ‘என்ன இப்படி சொல்லி விட்டீர்கள், அவர்கள் வாய் திறந்து எனக்காக உயிரை கொடுப்பதாய் சொன்னதில்லை, ஆனால் என்மீது வைத்துள்ள அன்பு பாசம் கொஞ்ச நஞ்சமல்ல முற்றும் திறந்த வரான உமக்கு அது. பத்தி எல்லாம் ஒன்றும் தெரியாது’ என்று கொள்ளையன் எகத்தாளமாக கூற அப்போது நாரதர் ‘அப்பா உன் பாவங்களில் அவர்கள் பங்கு கொள்வார்களா அப்படி என்றால் அவர்களிடம் சென்று நீ கேட்டுப்பார்’ என்று சொல்ல, அதில் என்ன சந்தேகம் நான் கொள்ளையடித்துக்கொண்டு வருவதை பங்கு போட்டுக்கொள்ளும் அவர்கள் என் பாவத்திலும் பங்கு கொள்வார்கள் என்றான் கொள்ளையன்.

அது உண்மையா என்பதை நீ அவர்களிடம் சென்றுகேட்டு தெரிந்துகொண்டுவா! என்று நாரதர் சொல்ல, ‘தேவையில்லை அது அவசியமும் இல்லை’ என்றான் கொள்ளையன். அப்போது நாரதர், ‘நீ உன் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் குறித்து அவசியம் தெரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் உன் பாவத்தில் பங்கு கொள்ள மாட்டார்கள் என்று நான் கூறுகிறேன். இது உண்மையா? பொய்யா? என்பது நிரூபணமாக வேண்டுமென்றால் நீ அவர்களிடம்சென்று, இதேகேள்வியை கேட்டு பதில் தெரிந்துகொண்டு வா’ என்று கூறினார்.



இங்குள்ள மரத்தில் என்னை கட்டிப் போட்டுவிட்டு உன் வீட்டிற்குப் போ அங்கு மனைவி, பிள்ளைகளிடம் நீ செய்யும் பாவங்களில் பங்கெடுத்துக் கொண்டு இறந்தபிறகு நரகத்திற்கு செல்ல அவர்களும்

தயார் என்று ஒப்புக்கொண்டால், நீ என்னிடம் உடனே வா என் உடமைகளை எடுத்துச்செல் என்று கூறினார் நாரதர். கொள்ளையர் தலைவன் கொஞ்சம் யோசித்துப் பார்த்தான். அந்த முனிவர் சொல்வதும் அவன் மனதிற்கு சரியாகப்பட்டது. சரி நாம் நம் குடும்பத்தினரிடம் சென்று கேட்டுவிட்டுத் தான் வருவோமே என்று, முடிவெடுத்த அந்த கொள்ளையன் நாரத முனிவரை, அங்கிருந்த ஒரு மாதத்தில் கட்டிப் போட்டுவிட்டு தன் குடும்பத் தினரை சந்திக்க சென்றான் கொள்ளையன். சில மணித்துளிகள் கழித்து மீண்டும் திரும்பிவந்த கொள்ளயன் முற்றிலும் மாறி இருந்தான். முனிவரின் காலில் விழுந்து சுவாமி நீங்கள் சொன்னதுதான் சரி என்று கண் கலங்கியபடியே கட்டப்பட்டிருந்த முனிவரின் கட்டுக்களை அவிழ்த்துவிட்டான். அப்போது நாரத முனிவர் 'வீட்டில் என்னப்பா நடந்தது' என்று கேட்டார்.



சாமி, நீங்கள் சொன்னபடி, நான் போய் என் மனைவி, குழந்தைகள், உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நான் கொள்ளையடித்துக் கொண்டுவரும் பாவத்தில், நீங்களும் பங்கு கொள்வீர்கள் தானே என்று கேட்டேன். எல்லாரும் ஒரே விதமாக, இல்லை எங்களை காப்பாற்ற வேண்டியது உனது கடமை.நீ எப்படி பொருள் கொண்டு வருகிறாய் என்பது எங்களுக்கு கவலை இல்லை. நீ பாவ வழிகளில் சம்பாதித் தால் அந்த பாவங்களை நீ மட்டும் தான் அனுபவிக்கவேண்டும். அதில் எங்களுக்கு எந்த பங்குமில்லை' என்று கூறிவிட்டார்கள் என்று கூறினான் கொள்ளையன்.

'அவர்கள் கூறியதில் தவறில்லையே அப்பா, மனைவி, மக்கள், உறவினர்களை காப்பாற்று வது. உன் கடமை அதை நீ நல்லவழியில் செய்கிறாயா! தீமையான வழியில் செய்கி றாயா! என்பதைப்பற்றி அவர்களுக்கு கவலை இல்லை. ஆனால் நீ எந்த வழியில் பொருள் சம்பாதித்து அவர்களை காப்பாற்ற வேண்டும் என்பதை நீதான் தீர்மானிக்கவேண்டும்' என்று கூறினார்.

அப்போது கொள்ளையன், முனிவரே! நீங்கள் தான் நான் செய்த பாவங்களில் இருந்து விடுபட ஒரு நல்ல வழி காட்ட வேண்டும் என்று கேட்டான். அப்போது நாரதர், 'நீ செய்த பாவங்களுக்கு எல்லாம் தகுந்த பிராயச் சித்தம் உண்டு. நீ ராம நாமத்தை சொல்லிக்கொண்டு இருப்பதே அதற்கு பிராய சித்தம்' என்றார். 'அது என்ன சாமி ராம நாமம், அது என் வாயிலேயே நுழையவில்லையே' என்று கொள்ளையன் கேட்க, 'பரவாயில்லை. இதோ இங்கிருக்கும் மரத்தின் பெயர் என்ன' என்று கேட்க, இது மரா மரம் என்று கூறினான். நீ இந்த மரத்தின் பெயரை மட்டும் சொல்லிக்கொண்டே இரு அது போதும் நீ பாவத்திலிருந்து விடுபடுவாய் என்ற கூறினார். ஆகட்டும் சாமி என்னை பாவச்செயல்களில் இருந்து விடுபடுவதற்கு வழிகாட்டிய தாங்கள் யார்? என்று கேட்டான்.

அப்போது நாரதர் என் பெயர் நாரதர் அனைத்து லோகங்களிலும் சுற்றிக் கொண்டிருப்பவன்' என்று கூறிவிட்டு புறப் பட, 'முனிவரே! தாங்கள் கூறியபடி, நான் இந்த மரா மரத்தின் பெயரை கூறிக்கொண்டே இருப்பேன் என்று கூறி, வணங்கி நாரத முனிவரை அனுப்பி வைத்தான் அந்தக் கொள்ளையன். நாரதரும் தன் வழியே புறப் பட்டு சென்றார். அவர் போனபிறகு அந்த கொள்ளையர் தலைவன் அங்கேயே அமர்ந்து



கோவில் திருப்பணி துவக்க விழாவை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் அவர்கள் கலந்துகொள்ள பாலாலயம் நடைபெற்று, தற்போது கோவில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தன்னை மறந்து மரா.... மரா..... என்று ஜெபிக்க ஆரம்பித்தார். அது ராம.... ராம.... ராம.... என்று ஒலிக்க ஆரம்பித்தது. நாளடைவில் ராம நாமம் உச்சரித்துக்கொண்டிருந்த, அந்த கொள்ளையரை சுற்றிலும் புற்று வளர்ந்தது அந்த ராம... நாம... ஜெபத்தால் அவன் பாவமெல்லாம் அழிந்து ஞானம் பெற்றார். தவம் முடிந்து புற்றிலிருந்து வெளியே வந்தார். அவர்தான் வான்மீகி என்று அழைக்கப் படும் வால்மீகி முனிவர். இவர்தான் பின்னர் இராமாயண காவியத்தை எழுதி அழியா புகழ்பெற்றவர்.

இங்குள்ள இறைவனை வழிபட்டு ஞானம் பெற்ற பிறகு தான் வால்மீகி மகரிஷி ராமாயண காவியத்தை இயற்றியுள்ளதாக இதிகாசங்கள் கூறுகின்றன.

இவ்வாறு கொள்ளையனாக இருந்து மகாகவியாக மாறினார் என்பதை கேள்விப் பட்ட சூரிய குல மன்னனான திருபுவனம் என்பவர் வால்மீகி மகரிஷியை சந்திக்க இங்கு வந்தார்.



விக்னேஸ்வரன்

அவர் தங்களை தரிசனம் செய்யும் பாக்கியம் எமக் குக் கிடைத்தது சந்தோஷம் என்று கூறி, அந்த மன்னன் பொன்னையும் பொருளையும் வால்மீகி முனி வரிடம் சமர்ப்பித் தார். அதைக் கண்ட முனிவர் மன்னா இந்த ஆசைகளை எல்லாம் கடந்து வந்து விட்டேன், இவற்றால் எனக்கு ஆகப்போவது ஒன்றும் இல்லை. எனவே, இந்த பொருளைக் கொண்டு, இங்குள்ள இறைவனுக்கு ஆலயம் எழுப்பு என்று கூறினார். அவ்வாறே திருபுவன மன்னன் முதன்முதலாக இவ்வாலயத்தை அமைத்தார். அதன் பிறகு கரிகால் சோழன் உட்படசேர, சோழ, பாண்டிய மன்னர்கள் இவ்வாலய இறைவனை வந்து வழிபட்டனர். அதற்கு சான்றாக இவ்வாலயத்தில் சோழலிங்கம், சேரலிங்கம், பாண்டிய லிங்கம் என்று தனித் தனி லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள் ளன.

சனிபகவான் சாப விமோச னம் பெற்ற தலம் இது.

இவ்வாலயத்தின் தல விருட்சமாக ஆலமரம் உள்ளது. புகழ்பெற்ற இவ்வாலயம் 20 ஆண்டுகளுக்குப்பிறகு தற்போது பக்தர்கள் பங்களிப்போடு அறநிலை யத்துறை ஒற்றுழைப்போ டும். கோவில் புனரமைப்பு பணி நடைபெற்று வருகின்றன. விரைவில் கும்பாபிஷேகம் நடை பெறவுள்ளது. இவ் வாலய திருப்பணியில் தங்களின் பங்களிப்பை செலுத்த விரும்புவர்கள் கீழ்க்கண்ட



சுப்பிரமணியன்



மகேஸ்வர சாமி

எண்ணில் தொடர்பு கொள்ளலாம். திருமாலுக்கு வரம் அளித்த இந்த தீர்த்தபுரீஸ்வரரை வணங்கி வாழ்க்கையில் சந்தோஷத்தையும் வளத்தையும் பெற்ற பக்தர்கள் ஏராளம்.

இவ்வாலய அர்ச்சகர் விக்கி என்கிற விக்னேஸ்வரன் மற்றும் பணியாளர்கள், சுப்ரமணியன், செல்லம்மாள், முருகன் ஆகியோர்.

வேண்டியது கிடைக்க வழிபட வேண்டிய தலம் ஆயில்ய நட்சத் திரத்தில் சகஸ்ர நாம, அர்ச்சனை செய்தால் தீராத பிரச்சினையில் இருந்து தீர்வு கிடைக்கும் என்பது ஐதீகம். பஞ்சமி வராகி நட்சத்திர மாக ஆயில்ய நட்சத்திரம். இங்கு மாதம்தோறும் தேய்பிறை வளர் பிறை பஞ்சமியில் வாராகியம்மன் வழிபாடு மிகச் சிறப்பாக நடை பெறுகிறது. இங்கு உள்ள வாராகி அம்மன் சன்னதி முன்பு உரல் உலக்கை உள்ளது. குழந்தை இல்லாத தம்பதிகள் தம்பதியாக, கஸ்தூரி மஞ்சள், விரலி மஞ்சள், குண்டு மஞ்சள் ஆகியவற்றை உரலில் போட்டு இருவரும் சேர்ந்து இடிக்க ஒரு வருடத்தில் அவர் களுக்கு புத்திர பாக்கியமானது கிடைக்கும்.



முருகன்

இங்குள்ள பைரவர் வாழ் விற்கு ஒளியை தரக் கூடியவர். இவரை வழிபாடு செய் தால் குழந்தை களுக்கு ஞாபக சக்தி அதிகரிக் கும். ஞானம் கிட்டும். இவர் வடக்கு நோக்கி அருள்பாலிக்கி றார். யோகத்தை தரும் இந்த பைரவ மூர்த்தியை வணங்கு வது இன்னும் சிறப்பானது.



செல்லம்மாள்



மேலும் திருமணம் ஆகாதவர்கள், கடன் பிரச்சினை அனைத்து விதமான பிரச்சினைகளும் நீங்க பக்தர்கள் தங்களது கையாலே மஞ்சளை இடித்து தருகிறார்கள். அதை அர்ச்சகர் சுவாமிக்கு சாட்சி செய்து அந்த மஞ்சளை பிரசாதமாக தருகிறார்கள். மக நட்சத்திரத் தில் மகா அபிஷேகம் செய்தால், அனைத்து விதமான நன்மைகளும் கிடைக்கும்.

இவ்வாலயத்தில் கலைமகள் சரஸ்வதிக்கு தனி சன்னதி உள்ளது ஆண்டுதோறும் சரஸ்வதி பூஜை அன்றுசிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. மூலவர் - தீர்த்தபுரீஸ்வரர் (எ) ஆனந்தீஸ்வரர் (எ) அரத்துறை நாதர் (எ) வான்மீகி நாதர் அம்பாள் - திரிபுரசுந்தரி (எ) ஆனந்தநாயகி (எ) அரத்துறைநாயகி (எ) வண்டார் குழலி.

**ஆலய அமைவிடம்**

**தரிசன நேரம்:** காலை 7.00 மணிமுதல் பகல் 12.00 வரையும்; மாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை திறந்திருக்கும்.

தொழுதூர் - விருத்தாசலம் சாலையில் தொழுதூரில் இருந்து சுமார் 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கொடிகளம் என்னும் இடத்தில் இருந்து பிரிந்து செல்லும் சாலையில் சுமார் ஒரு கிலோமீட்டர் சென்றால், இத்தலத்தை அடையலாம்.

**ஆலய தொடர்புக்கு**

94879 13593, 96558 68424. 84386 36485

# தை மாத எண்ணியல் பலன்கள்



ஆர். மகாலட்சுமி

**1, 10, 19, 28.**

இந்த எண்களில் பிறந்தவர்கள் சூரியனின் ஆதிக்கம் பெற்றவர்கள். தலைமைப் பண்பு மிக்கவர்கள். இந்த மாதம், இந்த எண்ணில் பிறந்தவர்களுக்கு, அரசு பணி கிடைக்க வாய்ப்புண்டு. சிலர் தனியார் வேலை கிடைக்கப்பெறுவர். வேலை வாய்ப்பு கண்டிப்பாக கிடைக்கும். பணவரவு என்பது மாச சம்பளத்தை பொறுத்தது. வணிகர்கள், சொந்தத் தொழில் செய்பவர்கள், ஒரே விதமான பணவரவு பெறுவர். உங்களின் இளைய சகோதரி, பெரிய தொழிற்சாலையில் வேலைக்கு சேர்வார். வீட்டுக்கடன் கிடைக்கும். பெற்றோர் நலன் கவனிக்கப் படவேண்டும். வாரிசுகளின் திருமணம் நடக்கும். ஏற்கெனவே வந்த மருமகன், முறுக்கிக்கொண்டு திரிவார். கலைஞர்கள் வேலைப்பளுவும், வருமானமும் பெறுவர். பங்கு லாபம் தரும். கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும். காதல், கலப்பு திருமணம் நடக்க வாய்ப்புண்டு. லஞ்ச தொகை வரவு அதிகரிக்கும். நீதிமன்ற வழக்குகள் வெற்றி தரும். சொந்தத் தொழில் செய்வோர் வேலைப்பளு காண்பர். அரசியல்வாதிகள், கண்டிப்பாக சேவை செய்தே ஆகவேண்டிய நிர்பந்தம் உண்டாகும்.

**பரிகாரம்:** அருகிலுள்ள கோவிலில் சூரிய பகவானையும், ஈசனையும் வணங்குவதோடு, அங்குள்ள அர்ச்சகருக்கு தேவையறிந்து உடலுழைப்பு கொடுங்கள்.

## ஜனவரி 15 முதல் பிப்ரவரி 12 வரை

### 2, 11, 20, 29.

இந்த எண்ணில் பிறந்தவர்கள் சந்திரனின் ஆதிக்கம் பெற்றவர்கள். இவர்கள், சந்திரனைப் போலவே அழகும், பொறுமையும், வேகமும் கொண்டவர்கள். இந்த மாதம், காதல் திருமணம் நடக்கும். அதுவும் மிகப்பெரிய செல்வாக்கான, கௌரவமான வரனுடன் காதல் கல்யாணம் நடக்கும். இந்த திருமணம், உங்களுக்கு பணவரவு மற்றும் தொழில் வாய்ப்பும் கொண்டுவரும். வியாபாரத்துக்கு என்றே தனியாக கைபேசி வாங்குவீர்கள். பணியாள் மாற்றம் உண்டு. இளைய சகோதரம் இடம் மாறுவார். அது திருமணம் அல்லது வியாபாரத்தில் இருக்கும். உங்கள் மூத்த சகோதரிக்கு திருமணம் நடக்கும். அல்லது குழந்தை பிறக்கும். இதனால் உங்கள் தாயார், அவரிடம் அதிக அனுசரணை காட்டுவார். வீடு லாபம் தரும். கலைஞர்கள் வெகு மேன்மை காண்பர். பங்கு வர்த்தகம் பல மடங்கு உயரும். செக்யூரிட்டி, சம்பந்த தொழில்புரிவோர் லாபமும் மேன்மையும், வெகுஜன சந்திப்பும் பெறுவர். வேலை மாற்றம் கண்டிப்பாக உண்டு. சிலர் வேலையை விட்டுவிட்டு, தொழில் ஆரம்பித்துவிடுவர். உங்கள் தந்தை, அவர் வேலையை, அவரே பார்த்துக்கொள்ளும் நிலை உண்டு. தொழில் தொடங்கும் எண்ணம் உடையவர்கள், இந்த மாதம் தொடங்கவும், அரசியலில் உள்ளோர் நிறைய சந்திப்புக்கள் நடத்துவர். வழக்குகள் தள்ளிப்போகும்,

**பரிகாரம்:** அம்பாளையும், சந்திரனையும் வணங்கி, அங்குள்ள அர்ச்சகருக்கு காபி, டீ, பால் வாங்கிக் கொடுங்கள்.

### 3, 12, 21, 30.

இந்த எண்ணில் பிறந்தவர்கள் குருவின் ஆதிக்கம் பெற்றவர்கள். எனவே நியாயமான, தர்மமான, அறிவும், சிந்தனையும் கொண்டவர்கள். இந்த மாதம் திருமணம் நடக்கும். அது உங்கள் தொழில் சார்ந்து, அறிமுகமான நபருடன், விருப்பத் திருமணமாக இருக்கும். இதில் ஒருவர், மிக செல்வம்மிக்கவராக இருப்பார். பணவரவு சம்பந்த தரவுகள், கைபேசியில் கொட்டும். வீடு சம்பந்தமாக, நிறைய சந்திப்புகள் நடக்கும். சினிமா கலைஞர்கள், வீரமான, உக்ரமான பாத்திரமேற்று நடிப்பர். இதன்மூலம் செல்வம், செல்வாக்கு, பிற நாட்டு வாய்ப்பும் பெறுவர். பங்கு வர்த்த முதலீடுகள், செமத்தியான வருமானம் தரும். உங்கள் வாரிசுமூலம் வெளிநாட்டு பணம் கிடைக்கும். சிலர் அரசு அல்லது அரசியல் சார்ந்த வேலை பெறுவர். உங்கள் தந்தை, பணவரவு தருவார். தொழில் பங்குதாரருடன் சேர்ந்து, தொழில் வளர்ச்சி பெறுவீர்கள். இந்த வளர்ச்சி செல்வத்தை பெருக்கும். அரசியல்வாதிகள், இந்த மாதம் அநியாயத்துக்கு, பணம் செலவழிக்க வேண்டியிருக்கும். அது வாரிசுக்காவும் அல்லது வாழ்க்கைத் துணைக்காகவும் இருக்கலாம். சீருடை பணியாளர்கள், வெகுதூர மாற்றம் பெறுவர்.

**பரிகாரம்:** சங்கரநாராயணரை வணங்கவும். கோவில் குருக்களின், வீட்டுத் திருமணத்துக்கு தேவைக் கேட்டு, முடிந்த பண உதவி செய்யவும்.

### 4, 13, 27, 31.

இந்த எண்ணில் பிறந்தவர்கள் ராகுவின் ஆதிக்கம் பெற்றவர்கள். எதையும் குயுக்தியாக பெரிய அளவில், சற்று ரகசியமாக செய்யும் குணமுள்ளவர்கள். இந்த மாதம், உங்கள் புத்திசாலித்தனத்தால் நல்ல பணவரவு பெறுவீர்கள். எனினும் உங்கள் கைபேசியின் ஒரேயொரு தகவல், உங்கள் மொத்த பணத்தையும் கொண்டு போய் விடும். எனவே, கைபேசி விஷயத்தில் கவனம் தேவை. உங்கள் பெற்றோர்வகையில் செலவு ஏற்படும். மருமகன்- மருமகள் சார்ந்து, செலவுசெய்ய வேண்டியிருக்கும். உங்கள் மாமனாரின் தொழில் விஷயமாக உதவிசெய்ய வேண்டியிருக்கும். சிலர் தொழில் முதலீடு சம்பந்தமாக, கடன் வாங்குவீர்கள். அரசியல்வாதிகள், தாங்கள்

இருக்கும் இடத்துக்கும், சொந்த பூர்வீக இடத்துக்கும் அலைய வேண்டியிருக்கும். கலைஞர்கள் டி.வி. சீரியலில் முதலீடு செய்வர். பங்கு வர்த்தகம் பற்றி யோசிக்க வேண்டாம். சீருடை சம்பந்த ஒப்பந்தம் மாறும். தொழில் பணியாளர் அல்லது விளம்பர நிறுவனத்தை மாற்றுவீர்கள். இந்த எண்ணில் பிறந்த காவல்துறை உயரதிகாரி கவனமாக இருக்க வேண்டும்.

***பரிகாரம்:*** வராஹி அம்மனை வணங்கவும். சாலை அமைக்கும் பணியாளர்களுக்கு, அவர்களின் செலவுக்கு பணம் கொடுங்கள்.

### 5, 14, 23.

இந்த எண்காரர்கள், புதன் ஆதிக்கம் பெற்றவர்கள். இவர்களின் அறிவு, புத்திசாலித் தனம் என இவை ரொம்ப குசும்பு பிடித்ததாக இருக்கும். அதிலும் இந்த மாதம், இன்றும், இன்னும் புத்தி கூர்மையாகும். இதனைக் கொண்டு, தொழிலை முதன்மை இடத்துக்கு கொண்டு வந்துவிடுவர். இவர்களின் பல தொழில்கள், பங்கு சந்தையில் பட்டியல் இடப்படும். சிலர் தொழில்களின் பங்குகள் அதிக முகமதிப்பும், லாபமும் பெறும். சிலர் மிகச் சிறந்த பங்குகளை வாங்கி குவிப்பர். இவர்களின் தொழில் மேன்மைக்கு உதவும் வகை வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்து திருமணம் செய்துகொள்வர். அப்படியே வியாபாரத்துக்கு, சொந்த இடம் வாங்கி விடுவர். பண விஷயமெல்லாம். நன்றாகத்தான் இருக்கும். ஆனால் இந்த மாதம், உங்கள் பணியாளர் விஷயமாக, பெரிய அவமானம் மற்றும் காவல்துறை வரை செல்வது என இருக்கும். சிலர் வீடுகளில், இளம் பெண்கள், வீட்டு வேலை செய்பவருடன், அதிக நட்புகொள்ள வாய்ப்பு தெரிகிறது; கவனம் தேவை. வீட்டிலேயே, வெளிநாட்டு பணி செய்வீர்கள். உங்கள் குடும்பத்தில் ஒருவர், அறுவை சிகிச்சைக்கு உட்படுவர். அரசியல்வாதிகள் தங்கள் வாரிசு சம்பந்தமாக செலவு, அலைச்சல் கொள்வர். கலைஞர்கள் எங்காவது அடிபட வாய்ப்புண்டு.

***பரிகாரம்:*** நரசிம்மரை வணங்கவும். ஆசிரிய பெருமக்களுக்கு முடிந்த உதவியை செய்யுங்கள்.

### 6, 15, 24.

இந்த எண்ணில் பிறந்தவர்கள் சுக்கிரன் ஆதிக்கம் பெற்றவர்கள். எனவே எந்தச் செயலிலும், ஒரு நேர்த்தியும், அழகும் இருக்கும். இந்த மாதம் பணவரவு மிக செழிப்பாக அமையும். உங்கள் வாழ்க்கைத் துணையின் தொழிலில், மிக நல்ல உயர்வு அடையப்பெற்று, அதன்மூலம் பணவரவு உண்டாகும். சிலரின் வீடுகளை அரசு எடுத்துக்கொண்டோ அல்லது விற்பதாலோ, நல்ல பண செழிப்பு கிடைக்கும். வீடு, வாகன சம்பந்த நஷ்ட ஈட்டுத்தொகை கைக்கு வரும். இளைய சகோதர திருமணம் நடக்கும். உங்கள் வாரிசுகளில் சிலர் வேலையில் சேர்வர். கலைஞர்கள், பிறமொழி படங்களில் வேலை, புகழ், அதிர்ஷ்டம் பெறுவர். பங்கு வர்த்தகம் பரவாயில்லை. இப்போது கிடைக்கும் வேலை தகவல் தொடர்புடையதாக இருக்கும். இந்த மாதம் திருமணம் நடந்தால், மிக படோபடமாக, அரசியல் தலைவர்கள் வருகையுடன், மிக செலவுடன் நடக்கும். பூர்வீக வீடு பணம் கொண்டுவரும். அரசியல்வாதிகள், தங்கள் கட்சி தவிர்த்த மற்ற கட்சியினரோடும் நிறைய சந்திப்புகள் நடத்த வேண்டியிருக்கும். பிறந்த ஊர் சார்ந்த அலைச்சலும், செலவும் உண்டு.

***பரிகாரம்:*** துர்க்கையை விளக்கேற்றி வணங்கவும். வீடு கட்டும் பெண் தொழிலாளர் களின் பயண செலவுக்கு உதவவும்.

### 7, 16, 25.

இந்த எண்ணில் பிறந்தவர்கள் கேதுவின் ஆதிக்கம் பெற்றவர்கள். இந்த மாதம் சீருடை சார்ந்த பணி கிடைக்க வாய்ப்புள்ளது. உங்கள் இளைய சகோதரிக்காக கடன் வாங்க நேரிடும். உங்கள் பெற்றோர், இவ்வளவு நாள் பிறருக்கு செய்த உதவி, சேவை அர்ப்பணிப்பு, இவை இப்போது பெரும் பாராட்டைப் பெறும். அரசு பணி செய்வோர் பதவி உயர்வு பெறுவர். உங்கள் ஆபிஸில், நிறைய பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பீர்கள். உங்கள் எதிரிகளும் உங்களிடம் பணிவு காட்டுவர். கலப்பு திருமணம் நடக்கும். மறுமணம் நடக்கும். சில அரசியல்வாதிகள் தாங்கள் மந்திரி ஆவதற்கு காய் நகர்த்துவர். சில

அரசியல்வாதிகள், குறுக்குவழியில் தங்கள் வாரிசை அரசியலுக்குள் புகுத்துவர். மாணவர்கள், மருத்துவ படிப்பை எதிர் நோக்கியிருந்தால், அது சார்ந்த படிப்பு கிடைக்கும். சில மருத்துவர்கள், அறுவை சிகிச்சை படிப்பில் முதன்மை பெறுவர். விளையாட்டு வீரர்கள், அரசு வேலை பெறுவர்.

***பரிகாரம்:*** வெள்ளிக்கிழமை விநாயகரை வணங்கவும். மனபிறழ்வு கொண்டவர்களுக்கு உணவு வாங்கிக் கொடுங்கள்.

**8, 17, 26.**

இந்த எண்ணில் பிறந்தவர்கள் சனி பகவானின் ஆதிக்கம் பெற்றவர்கள். இவர்கள் நல்ல உழைப்பாளிகள். தங்கள் கடும் உழைப்பினால், உயர்வு பெறுபவர்கள். இந்த மாதம் உங்கள் எண்ணம், லட்சியம், ஆசை இவை நிறைவேறக் காண்பீர்கள். அது வீடு வாங்குவதாக இருக்கலாம். வாரிசு சம்பந்தமாக அமையலாம். வேலை அல்லது வேலையில் பதவி உயர்வாக இருக்கலாம். திருமணமாக இருக்கக்கூடும். லஞ்சப் பண வரவாக இருக்கலாம். ஆன்மிக தரிசன மாக இருக்கலாம். வழக்கின் வெற்றியாக விளங்கலாம். தொழிலில் முதன்மையும், பரவலாகவும் தெரியலாம். அரசியலில் ஈடுபடுவதாக இருக்கலாம். வேறு கட்சிக்கு மாறுவதாக அமையலாம். மூத்த சகோதர சம்பந்தமாக விளங்கலாம். சமையல் கலைஞர்களின் கனவாக இருக்கக்கூடும். பெண்ணுக்கு, ரொம்பநாள் தடைப்பட்ட, திருமணம் கை கூடுவதாகவும் இருக்கலாம். ஆக, நீங்கள் எதனை எதிர்பார்த்து, பிரார்த் தனைகள் செய்தீர்களோ, அது அனைத்தும் நிறைவேறக் காணலாம்.

***பரிகாரம்:*** மலை உச்சியிலுள்ள முருகரை வழிபடவேண்டும். சமையல் கலைஞர்களின் தேவைக் கேட்டறிந்து உதவவும்.

**9, 18, 27.**

இந்த எண்ணில் பிறந்தவர்கள் செவ்வாய் ஆதிக்கம் பெற்றவர்கள். இந்த மாதம் தொழில் விஷயத்தில் ஒரு மிகப்பெரிய உயர்வும், ஒரு அவமானமும் ஒரு சேரப் பெறுவர். அதுபோலவே பெரிய கௌரவம் கிடைக்கும்போது, ஒரு கீழ் சொல்லும் சேர்ந்தே கிடைக்கும். உங்கள் சாமர்த்தியமான பேச்சு தொழிலை உயர்த்தும். நல்ல உழைப்பாளியான பணியாளர்கள் கிடைப்பர். அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகளிடம் மாட்டிக்கொண்டு முழியாய் முழிப்பார்கள். சில மந்திரிகள், ஆளும் கட்சியினரால் சற்று பந்தாடப்படுவர். அரசு வேலை கிடைக்கும் வாய்ப்புண்டு. திருமணம் தேடிவரும். காதல் மணம் நடக்கும். காவல் துறையினர் கவன மாக பொதுமக்களிடம் பழகவேண்டும். பொதுமக்களும் கூடியமட்டும், காவல் துறையினர் அருகில் போகாமல் இருப்பது நல்லது. இன்ஷுரன்ஸ் ஆட்கள் நிறைய கமிஷன் காண்பர். உங்கள் தந்தை ஆன்மிக பயணம் செல்வார்.

***பரிகாரம்:*** துர்க்கையை வணங்கவும். பாதுகாப்பு பணியில் ஈடுபட்டோருக்கு, தேவைக் கேட்டறிந்து உதவி செய்யவும்.

## ஹோமமும் பயன்களும்!

- **சரஸ்வதி ஹோமம்– கல்வி, அறிவு பெருக..**
- **சண்டி ஹோமம்– தடைகளை உடைத்து எறிய...**
- **ஆயுஷ்ய ஹோமம்– நீண்ட ஆயுள் வேண்டி...**
- **தன்வந்திரி ஹோமம்– நோயற்ற வாழ்வு வாழ...**
- **தில ஹோமம்– எமபயம் நீங்க...**
- **ஆவஹந்தி ஹோமம்– தானியம் செழிக்க...**
- **மகா மிருத்யுஞ்ஜய ஹோமம்– நீண்ட நாள் வாழ பயங்கள் அகல...**
- **வாஸ்து ஹோமம்– வீட்டு பிரச்சினைகள் நீங்க...**

# தை மாத கிரக நிலைகள்

## சூரியன்

தை மாதம் சூரியன் எப்போதும் மகர ராசியில் இருப்பார். சூரியன் அரசாங்கத்தைக் குறிப்பார். இந்த மாதம் கால புருசனின் 10-ஆமிடத்தில் தொழில் ஸ்தானத்தில் அமர்ந்துள்ளார். இதனால், ஏதோ காரணத்துக்காக, அரசு ஊழியர்கள், அரசாங்கத்தின் வேலைப்பளு கூடி, பெண்டு நிமிர்த்திவிடும். இதில் இன்னொரு முக்கிய விஷயம் உள்ளது. இந்த தை மாதம் இந்த வருடத்தில், சூரியனுடன் செவ்வாய், சுக்கிரன், புதன் இவர்கள் சேர்க்கை. இதில் ஆளும் கட்சியைக் குறிக்கும். செவ்வாய் உச்ச நிலையில் உள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. எனவே, அரசாங்கம் என்ற ஊழியர்கள், ஆளும் கட்சியால் அதிக வேலை வாங்கப்படுவார்கள். பாதுகாப்புத் துறையும், அரசாங்கத்தை அதிக கெடுபிடி செய்யும். எப்போதுமே, தை, மாசி மாதங்களில், சூரியன், மகரம், கும்பம் போன்ற சனி வீடுகளில் இருப்பார். எனவே அந்த மாதங்களில், அரசாங்கம், ஏதோ ஒருவித இன்னலுக்கு ஆட்படும். இதற்கு சனிக்கு, சூரியனை கண்டாலே ஆவாது என்பது காரணமாகும். கூடவே, புதன் என்ற எதிர்கட்சியும், சுக்கிரன் என்ற கூட்டணிக் கட்சியும் சேர்ந்தே உள்ளனர். எனவே, அரசாங்க அமைப்பு, யாருக்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் விழிபிதுங்கும் நிலை ஏற்படும்.

## செவ்வாய்

இவர் ஆளுங்கட்சியை குறிப்பார். இந்த தை மாதம் முழுவதும் இவர் உச்சமாகி உள்ளார். எனவே ஆளுங்கட்சி, அதிரிபுதிரி பண்ணும். கூடவே இருக்கும் அரசாங்க கிரகம் சூரியன். எனவே அரசாங்க அலுவல்கள், அரசு பணியாளர்கள், அரசு உயர் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் என அனைவரையும் தனக்கு தோதுப்பட்ட விதத்தில் மாற்றி அமைத்துவிடும். இதனால் ஆளுங்கட்சியின் ஸ்த்ரத்தன்மை வலுவாகும். இவ்வளவு பண்ணிட்டோம். இந்த கூட்டணிக் கட்சியை ஒரு வழி பண்ணிவிட மாட்டோமா என்று, கூட்டணிக் கட்சிகளை தங்கள் விருப்படி, இணைத்துக்கொள்வர். எதிர்கட்சியான புதன், தை மாதம் பாதிவரை, இவர்களிடம் மாட்டிக்கொண்டு முழியாய் முழிப்பார். அப்புறம் கிரேட் எஸ்கேப் ஆகிவிடுவார். ஆக, இந்த தை மாதம், ஆளுங்கட்சியின் மாதம் என்றே சொல்லலாம்.

## புதன்

இவர் எதிர் கட்சியைக் குறிக்கும். கிரகம். தை மாதம் 15-ஆம் தேதிவரை மகர ராசியில், அரசுக் கிரகம் சூரியன், ஆளுங்கட்சி கிரகம் செவ்வாய், கூட்டணி கட்சி கிரகம் சுக்கிரன் என இவர்களுடன் மட்டுமல்ல, இவர்களுக்கிடையே மாட்டிக்கொண்டு படாதபாடு படுவார்கள். ஆளுங்கட்சி மிக பலமாக இருப்பதால், எதிர் கட்சியைப் பார்த்து, வெவ்வே என நக்கலடிக்கும். நிஜமாகவே எதிர் கட்சியினரால் எதுவும் செய்ய முடியாமல் போகும். எனினும் தை மாதம் 15-ஆம் தேதிக்கு பிறகு ஆறுதலும், தேறுதலும் உண்டாகும்.

## குரு

குரு காலபுருசனின் 3-ஆமிடத்தில், இருபுறமும் கிரகங்களின்றி உள்ளார். தனது சுய சாரம் பெற்றுள்ளார். குருவின் பார்வை புண்ணியத்தால், நிறைய திருமணங்கள் நடக்கும். வெளிநாட்டு வர்த்தகம் மேன்மை அடையும். குரு, காலபுருசனின் 11-ஆமிடமான அரசியல் ஸ்தானத்தைப் பார்ப்பதால், நாட்டின் அரசியல் நிகழ்வுகளை, எல்லை மீறாமல், ஒரு கட்டுக்குள் வைத்திருப்பார். வெளிநாட்டு, வணிகம் சீர் அடையும். இந்த மாதம், குருபகவான், தனித்து, எந்த சுபர் அல்லது பாபர் பார்வையுமின்றி நிற்கிறார். இதனால் நீதித்துறை, கல்வி போன்ற குரு பகவானின் காரக செயல்கள் முழுமையாக

தன்னிச்சையாக நடக்கும். ஆன்மிகமும் முழு சுதந்திரத்தோடு இயங்கும். சாலை பயணங்கள் ஒழுங்குபடுத்தப்படும். தை மாதம், தனித்த குரு எவ்வித பலன்கள் தரப்போகிறார் என்பது ஆச்சர்யமான எதிர்பார்ப்பாக உள்ளது.

## சுக்கிரன்

இவர் கூட்டணிக் கட்சிகளைக் குறிப்பார். இவர் மகர ராசியில், சூரியன்+ உச்ச செவ்வாய்+ புதன்கூட உள்ளார். உச்ச செவ்வாய் எனும் ஆளும் கட்சி ஆட்களால் மிக மிரட்டப்படுவார். எனவே, எதற்கு வம்பு என, ஆளுங்கட்சியினருடன், அனுசரணையாக நடந்துகொள்வார். மேலும் காவல் துறையின் செயல்களுக்கு, அது கண்டிக்கத்தக்கதாக இருந்தாலும், கண்டுகொள்ளாமல், மௌனமாக இருப்பர்.

## சனி

இது காலபுருசனின் 11-ஆம் வீடான அரசியல் ஸ்தானத்தில் ஆட்சியாக அமர்ந்துள்ளார். கூடவே ராகுவும் உள்ளார். சிறப்பாக, குரு பார்வையைப் பெறுகிறார். சனி+ராகு எத்தனை கோல்மால் செய்தாலும், குருவின் பார்வை கட்டுப்படுத்தும். இது நீதிமன்றங்கள் வழியே கட்டுப்பாடுகள் உண்டாகும். இந்த மாதம் அரசியல்வாதிகள், தகவல் தொடர்புமூலம் பரப்புரை செய்வர். அது நல்ல விஷயம், நாதாரி விஷயம் என எதுவாக இருப்பினும் செய்தி தொடர்பே பிரதானமாக இருக்கும். எதிர்கட்சியும், ஆளும் கட்சியும் கோட்டைத்தாண்டி நீயும் வராதே, நானும் வரமாட்டேன் என ஜெண்டில்மேன் அக்ரிமெண்ட் போட்டுக்கொள்வர். இது சனிபகவான் குரு சாரம் பெற்றிருப்பதாலும், குருபார்வை பெற்றிருப்பதாலும் குரு தனித்து இருப்பதாலும் இவ்விதம் கூறப்பட்டது.

## ராகு

காலபுருசனின் அரசியல் இடத்தில் ராகு அமர்வு. கூடவே சனியும். எனவே அரசியலை அதகளம் செய்ய ராகு முழு முனைப்பு காட்டுவார். ஆனால் குரு பார்வை, ராகுவின் அடாவடி செயல்களுக்குத் தடை போட்டு விடுவார். இந்த கிரக நிலையால் வெளிநாடு சம்பந்த இனங்கள் நல்ல நன்மை தரும் விதத்தில் இருக்கும்.

## கேது

இவர் காலபுருசனின், 5-ஆமிடமான சிம்மத்தில், சுக்கிர சாரத்தில் உள்ளார். அவரால் முடிந்தமட்டும் காதல் விஷயங்களை கட்டுப் பண்ணிவிடுவார். கூட்டணிக் கட்சிகளுக்கிடையே, மந்திரி பதவி சார்ந்து, தொண்டர் கூட்டம் சார்ந்து அல்லது இளம் பெண் சார்ந்து கலகத்தை மூட்டி, பிரிக்கும் வேலையை செய்வார். கூட்டணிக் கட்சிக்களுக்குள்ளேயே, சண்டையும் பதட்டமும், பிரிவும் இருக்கும். இதனால் இவர்கள் ஆளுங் கட்சியை, வேறு வழியின்றி அனுசரித்து போக நேரிடும்.

## வானிலை

**தை** மாதம் 5, 6, 7-ஆம் தேதிகளில், மகர ராசியில், சூரியன், செவ்வாய் எனும் நெருப்பு கிரகம் + சுக்கிரன் எனும் நீர் கிரகம் + புதன் எனும் காற்றுக் கிரகம் இவர்களோடு பயணம். மகரம் ஒரு நில ராசி. இதில் செவ்வாய் உச்சம். எனவே சுள்ளென்று வெயில் அடிக்க வாய்ப்பு அதிகம்.

தை 7, 8, 9 கும்ப ராசியில் சனி+ராகுவுடன் பயணம். காற்று அதுவும் வெப்பக் காற்று வீசும். தை 9, 10, 11 திருக்கணிதப்படி சனி மீன ராசியில் உள்ளார். அதன்படி சந்திரன் இந்த தேதியில் மீன ராசியில் சென்றால், கடல் பின் வாங்குவத போன்ற செயல் நடக்கும்.

தை 15, 16, 17 மிதுன ராசியில் சந்திரன் ஓட்டம். அங்கு குரு உள்ளார். இது ஒரு காற்று ராசி. எனவே அதிக காற்று வீசும்.

தை 20, 21, 22 சந்திரன், சிம்ம ராசியில் கேது பகவானுடன் நகர்வு. வெப்பத்தின் தாக்கம் குறைவாக இருக்கும். அதற்காக மழையெல்லாம் பொழியாது.

தை 27, 28, 29 விருச்சிக ராசியில், சந்திரன் பயணம். இது ஒரு நீர் ராசி. சந்திரன் நீர் கிரகம். எனினும் சனியின் பார்வை, விருச்சிகத்தில் விழுவதால், மழை பெய்ய வாய்ப்பு கிடையாது.

இந்த மாதம் நீர் ராசிகளில், சந்திரன் செல்லும் போதும், மழை பெய்ய வாய்ப்பு இல்லாத நிலையே உள்ளது. வெப்பமான வானிலை இருக்கும்.

# குலதெய்வத்தின்
## பெரியாண்டவர் – பேச்சியம்மன்
# பேரருளால் பெற்ற உயர்வு!



**செ**ன்னை கோடம்பாக்கம் வன்னியர் தெருவில் ஐம்பது ஆண்டுகளாக சிறிய கடையாக ஆனால் பெரிய புகழுடன் செயல்பட்டு வரும் 'சங்கர் ஸ்டோர்' என்ற 'அக்கா கடை' உரிமையாளர்கள், எழுபது வயதை கடந்தும் சுறுசுறுப்பாக காலை ஏழு மணி முதல் இரவு ஒன்பது மணி வரை தங்களின் மளிகை கடையை திறந்து வைத்து வியாபாரம் செய்து வாடிக்கையாளர்களின் வற்றாத ஆதரவை நம்பிக்கையை பெற்றுவிட்ட, உதவிக்கு என்று தங்கள் கடையில் எவரையும் வேலைக்கு அமர்த்தாமல் இவர்கள் இருவர் மட்டுமே பம்பரமாய் சுழன்று கடையை தேடிவந்து கேட்கும் கஸ்டமர்களுக்கு தேவைப்படும் மளிகை சாமான்களை வழங்கி வரும் காளிராஜன்-அஞ்சாதேவி தம்பதியை அவர்கள் இல்லத்தில் சந்தித்தோம். புன்னகையுடன் நம்மை வரவேற்று அமர வைத்து கணவர் காளிராஜன் உடன் இருக்க நம் கேள்விகளுக்கு உற்சாகமாக பதில் அளித்தார்.

**உங்கள் சங்கர் ஸ்டோர் 'அக்கா கடை' ஆக புகழ் பெற்றது எப்படி?**

'சங்கர் எங்கள் ஒரே மகனின் பெயர்.. தவமாய் தவமிருந்து நாங்கள் பெற்றெடுத்த தவப்புதல்வனின் பெயர்.. சொந்த ஊரான சிவகாசியில் நானும் என் கணவரும் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தோம். எங்களுக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்ததும் எங்களின் குலதெய்வமான பெரியாண்டவர் பேச்சியம்மன் கோவிலுக்கு சென்று பரிபூரணமாக சரண் அடைந்து கண்ணில் நீர் பெருக பிரார்த்தனை செய்து, சிவகாசி மண்ணில் சிறப்பான சக்திகளுடன் வேண்டி வரும் பக்தர்கள் வேண்டுதல்கள் அனைத்தையும் நிறைவேற்றி வரும் பெரியாண்டவர்-பேச்சியம்மன் திருவருளை வேண்டி வணங்கிவிட்டு எங்களை வாழ வைப்பது உன் பொறுப்பு என்று எதிர்கால

முன்னேற்றத்தை தரும் பொறுப்பை பெரியாண்டவர் பேச்சியம்மனிடம் ஒப்படைத்து விட்டு மன தைரியம், ஆழ்ந்த நம்பிக்கை உடன் சென்னை வந்து என்னுடன் பிறந்த அண்ணன் சேர்மக்கனி, அண்ணி காளீஸ்வரி அவர்கள் மகன் சரவணன் உதவியுடன் கோடம்பாக்கம் வன்னியர் தெருவில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இளம் பெண்ணாக இருந்த நானும், இளைஞராக இருந்த என் கணவரும் உடல் பலம் மற்றும் மனபலம் துணை இருக்க, பெரியாண்டவர் பேச்சியம்மனை முழுவதுமாக நம்பி சாமி கும்பிட்டுவிட்டு இந்த சங்கர் கடையை துவங்கினோம்.

இங்கே அக்கம் பக்கத்தில் குடி இருக்கும் மக்கள் இனி அதிக தூரம் அலைய வேண்டாம். நமக்கு தேவைப்படும் பொருட்களை இந்த சங்கர் ஸ்டோரிலேயே வாங்கிக் கொள்ளலாம் என்று சந்தோஷமாக வந்து வாங்கிட இனி நாம் பசி.. பட்டினி இல்லாமல் நிம்மதியாக வாழலாம் என்று முதல் கட்ட முன்னேற்றத்தை தந்த எங்கள் குலதெய்வம் பெரியாண்டவர் பேச்சியம்மனுக்கு நன்றி கூறினோம்.

பள்ளி மாணவர்கள்-மாணவிகளுக்கு தேவைப்படும் அனைத்தையும் வாங்கி எங்கள் சங்கர் ஸ்டோரில் வைத்ததும் அக்கா கடைக்கு போனால் அனைத்தும் கிடைக்கும் என்று வந்து அவரவர்களுக்கு தேவையானதை வாங்கியதோடு என்னை பாசமான அக்காவாக மதிக்க துவங்கிவிட்டார்கள். அவர்கள் 'அக்கா கடை' என்று அன்போடு அன்று வைத்த பெயர் இன்றும் நிலைத்து விட்டது.





மாணவ, மாணவிகளுக்கு 'அக்கா கடை' ஆனதால் அனைவருக்குமே வயது வித்தியாசம் இல்லாமல் நான் அக்கா ஆகிவிட்டேன். என்னை விட வயதில் பெரியவர்கள் கூட என்னை 'அக்கா' என்றும் எங்கள் கடையை 'அக்கா கடை' என்றும் அழைக்க துவங்கி விட்டார்கள்.

**அக்கா கடை தந்த அதிர்ஷ்ட மற்றும் அபார கடின உழைப்பு வளர்ச்சியை சொல்லுங்க?**

'எங்களுக்கு திருமணம் ஆகி ஓராண்டிலேயே 'சங்கர்' பிறந்தார். அவர் பெயரில் தான் 'சங்கர் ஸ்டோர்' துவங்கினோம். சங்கரை அருகில் உள்ள நடிகை பண்டரி பாய் நடத்தி வந்த பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தோம்.

நாங்கள்தான் படிக்கவில்லை.. எங்கள் பிள்ளை 'சங்கர்' நன்கு படித்து பட்டம் பெற பெரியாண்டவர் பேச்சியம்மன் அருளை தினமும் வேண்டி பிரார்த்தனை செய்தோம்.



எங்கள் குலதெய்வம் எங்களை கைவிட வில்லை. சங்கர் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாகவே நன்கு படித்தார்.

**குலதெய்வம் கோவிலுக்கு செல்வீர் களா?**

'வாழ்வில் உயர்வு தந்த பெரியாண்டவர் பேச்சியம்மனுக்கு நன்றியோடு இருக்கிறோம். வருடம்தோறும் மகன்- மருமகள், பேரன்கள் உள்ளிட்ட எங்கள் குடும்பத்தினர் அனை வருமாக குலதெய்வத்தின் பேரருளை பரி பூரணமாக பெற்று வருகிறோம்.

**சமீபத்தில் நீங்கள் பெருமை பெற்ற விஷயம் எது?**

'துபாயில் பணிபுரியும் சங்கர் பல



தமிழ் சேவைகளை செய்து வருகிறார். எனவே அதனை கௌரவிக்கும் விதமாக சமீபத்தில் அமைச்சர்கள் பலர் வந்து கவர்னர் முன்னால் என் மகன் சங்கர் பாராட்டு சான்றிதழ் மற்றும் விருது தந்து கௌரவிக்கப்பட்டார். சென்னையில் கவர்னர் மாளிகையில் பிரம் மாண்டமாக நடத்தப்பட்ட இந்த விழாவில் நாங்களும் பங்குபெற்று எங்கள் மகன் சங்கர் விருது வாங்கு வதை பார்த்து பூரிப்பும் பெருமையும் அடைந்து குலதெய்வத்திற்கு மனமார நன்றி சொன்னோம்.


**அக்கா கடையை விரிவுபடுத்தும் எண்ணம் உண்டா?**

எங்களுடைய கடையை விரிவுபடுத்தி பெரிய டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோராக ஆக்கி தருகிறேன் என்று சொன்னார் சங்கர். நாங்கள் மறுத்துவிட்டோம். எங்கள் ஆயுள் உள்ளவரை அக்கா கடையில்தான் இருப்போம். மற்றும் பழைய கடை ஐம்பது ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்ததோ தொடர்ந்து அதேபோலவே எங்களுக்கு உடல்பலம் மனபலம் இருக்கும்வரை தொடர்ந்து இப்படியே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று எங்கள் விருப்பத்தை சொன்னோம். அதனை சங்கர் மகிழ்வுடன் ஏற்று எங்களுக்கு ஒத்துழைப்பு தந்து வருகிறார்.'

குலதெய்வ அருளும் கடின உழைப்பும் தன்னம்பிக்கையும் பெற்ற மகன் மற்றும் அவர் குடும்பத்தின் உற்ற துணை இருந்தால் வாழ்வில் உயரலாம் என்பதை நிரூபித்து காட்டிய 'அக்கா கடை' தம்பதிகளின் ஆசி பெற்று விடைபெற்றோம்.

இந்த சென்னை அக்கா கடை சாதனை தம்பதிகளை வாழ்த்த தொடர்பு கைபேசி எண்: 98418 12125

-பேட்டி, படங்கள்: **ஆர்.பட்டம்மாள்**



# பூமி செழிப்புற தேவேந்திர வழிபாடு!

ராமசுப்பு

பூமியில் மனிதர்கள் எப்படி எப்படியோ வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். தப்பு செய்பவர்கள் செய்துகொண்டே இருக்கிறார்கள். அதேபோல நன்மைகள் பல செய்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஒரு அரசனுக்கு நல்லது-கெட்டது எடுத்துச்சொல்ல நான்கு மந்திரிகள் இருப்பார்கள். அதேபோல அரசனுக்குத் தெரியாமல் நடக்கும் விஷயங்களைக்கொண்டு வந்து தெரிவிக்க நான்கு தூதுவர்கள் இருப்பார்கள். இப்படி மனிதர்கள் செய்யும் நல்லது- கெட்டதை கடவுளிடத்திலே கொண்டுசேர்க்கும் வேலையைச் செய்பவர்களே தேவர்கள் எனப்படும் தூதுவர்கள்.

தேவர்கள் என்று அழைக்கக்கூடிய இவர்கள் கடவுள் அல்ல. இவர்கள் கடவுளால் படைக்கப்பட்ட மனிதர்கள் போன்ற உயர்நிலை உயிரினங்கள்

ஆவார்கள். ஆனால் இந்த தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் இடையே நிறைய வித்தியாசம் உண்டு. அந்த வேறுபாடுகளில் முதன்மையானது உருவம் சம்பந்தப்பட்டது. மனிதர்களுக்கு உருவம் உண்டு. ஆனால் தேவர்களுக்கு உருவமும் உண்டு. உருவம் இல்லாமல் அருருவமாக அலைவதும் உண்டு.

கடவுள் உருவாக்கிய இந்த உலகத்தில் அடங்கியுள்ள உயிர்களை அவரவர்கள், அதன தன் வாழ்க்கைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொடுப்பது தேவர்களின் வேலையாகும். தேவர்களது செயலுக்கு ஏற்ப 'கின்னர்', 'கிம்புருஷர்' 'யட்சர்கள்', 'சித்தர்கள்', 'சாரணர்', 'கந்தர்வர்' என்று அவர்களை அழைக்கின்றனர். தேவர்களுக்கு மூன்றுவிதமான வடிவங்கள் இருப்பதாக வேதம் கூறுகிறது. தேவலோகத்தில் அவர்கள் இருப்பதை 'ஆதி தெய்வீகம்' என்று அழைக்கின்றனர். பூமியில் பஞ்சபூதங்களோடு கலந்து உருவம் எதுவும் இல்லாமல் இருக்கும் அவர்களது நிலையை 'ஆதி பவுதிகம்' என்றும் அழைக்கின்றனர்.

தேவர்களது எண்ணிக்கை 'முப்பது முக்கோடி' என்று சொல்லப்படுகிறது. 'தேவேந்திரன்' கீழ்தான் இந்த முப்பத்து முக்கோடி தேவர்களும் வருகின்றனர்.

இந்த முப்பத்து முக்கோடி தேவர்கள் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது ஆதித்தர்கள்- 12 பேர்; ருத்ரர்கள்-11 பேர்; வசுக்கள் 8 பேர்; அஸ்வினி குமாரர்கள் 2 பேர்.

ஆதித்தர்கள்- 12

ருத்ரர்கள்- 11

வசுக்கள்- 8

அஸ்வினி குமாரர்கள்- 2

மொத்தம்- 33 பேர்கள்.

**இவர்களின் பெயர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது**

**ஆதித்தர்கள்:**

1. வைகத்தன்.
2. விபஸ்துதன்.
3. வாசன்.
4. மார்த்தாண்டன்.
5. பாஸ்கரன்.
6. ரவி.
7. லோக பிரகாசன்
8. லோகசாட்சி.
9. திருவிக்ரமன்.
10. ஆதித்தன்.
11. திவாகரன்.
12. அங்கிமாலி.

**ருத்ரர்கள்- 11 பேர்**

1. மகாதேவன்
2. ருத்ரன் (ருத்ரன்).
3. சங்கரன்.
4. நீலலோகிதன்.
5. ஈசானன்.
6. விஜயன்.
7. வீமதேவன்.
8. சவுயம்மதேவன்.
9. பலோத்பவன்.
10. கபாலிகன்.
11. ஹரன்.

**வசுக்கள்- 8 பேர்**

1. அனலன்.
2. அனிலன்.
3. ஆபத்சைவன்.
4. சோமன்.
5. தரன்.
6. துருவன்.
7. பிரத்யுஷன்.
8. பிரபாசன்.

**அஸ்வினி குமாரர்கள்- 2 பேர்**

1. நாசத்யன்.
2. தசரன்.

ஆக, மொத்தம் 12+11+8+2=33 பேர் ஆவார்கள். இந்த 33 பேர்களுக்கும், தலா ஒரு கோடி உதவியாளர்களும், பணியாளர்களும், தேவதைப் பெண்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். உதவியாளர்கள், பணியாளர்கள், தேவதைப் பெண்கள் அனைத்தும் அடங்கியதே ஒரு கோடியாகும்.

## குளத்தில் மண் கலயத்தில் விபூதி...



ஐநூறு, ஆயிரம் வருடங்கள் மிக பழமைவாய்ந்த இந்த அருள்மிகு பச்சோட்டு ஆவுடையார் திருக்கோவில் ஈரோடு மாவட்டம் காங்கேயத்திற்கு அருகில், மடவிளாகம் என்னும் ஊரிலுள்ளது.

பச்சை ஓட்டுடன் சிவன் எழுந்தருளியதால் இத்தல இறைவன் 'பச்சோட்டு ஆவுடையார்' என அழைக்கப்படுகிறார். ஆனால், கல்வெட்டுக்களில் 'பச்சோட்டு ஆளுடையார்' என காணப்படுகிறது. தலத்தின் நாயகி 'பச்சை நாயகி', 'பெரியநாயகி' என்ற திருப்பெயர் தாங்கியுள்ளாள்.

கோவிலின் பின்புறம் சிவன் தனது நகத்தால் கீரிய அற்புத சுனை உள்ளது. 'நிகபுஷ்கரணி' என்ற பெயர் பெற்ற இச்சுனைகங்கையை போன்று பெருமை பெற்றது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இங்குள்ள சுனையில், விபூதி நிரம்பிய மண் கலயம் மிதந்து வரும் அற்புத நிகழ்ச்சி நடந்துவருகிறது.

சுமார் 50 ஆண்டுகளுக்குமுன் 'குடம்' அளவுக்கு இருந்த மண் கலயம் நாளடைவில் சுருங்கி தற்போது 'சிறிய செம்பு' அளவில் மிதந்துவருகிறது. இந்த மண் கலய விபூதி கிடைப்பதற்கரிய மாபெரும் மருந்தாகும். இதை உடலில் பூசினாலும், சிறிதளவு சாப்பிட்டாலும் தீராத நோய்கள் நீங்கும் என்பது ஐதீகம்.

எனவே மொத்தம் 33 X 1 கோடி= 33 கோடி தேவர்கள் என்பது கணக்காகும்.

தேவர்கள் வாழும் உலகத்தின் ஒரு பகுதி தேவலோகம் என்றழைக்கப்படுகிறது. இதன் தலைநகரம் 'அமராவதிப்' பட்டணம் என்பதாகும். இங்குதான் தேவர்களின் தலைவன் 'தேவேந்திரன்' ஆட்சி செய்கிறான். இவருடைய அதிகாரத்தில்தான் இந்த முப்பத்து முக்கோடி தேவர்களும் பணியாற்றுகின்றனர்.

இந்த தேவர்களுக்குப் பசி என்பதும், வியாதி, முதுமை, மரணம் என்பவையும் கிடையாது. இவர்கள் தேவைப்பட்டபோது அமுதை மட்டுமே உட்கொள்பவர்கள். பூலோகத்தில் ஒரு வருடகாலம் என்பது இவர்களுக்கு ஒரு நாளாகும். மனிதர்கள் கற்றபிறகே வேதத்தை அறியமுடியும். ஆனால் தேவர்கள் பிறவியிலேயே வேதம் பற்றிய அறிவோடு பிறக்கிறார்கள். மனிதர்கள் செய்கின்ற நல்லது-கெட்டது என்ற இரண்டு செயல்களையும் கடவுளிடம் கொண்டு சேர்ப்பது இவர்களுடைய வேலையாகும். கடவுளுக்குத் துணையாக பல கோடி உயிர்களின் செயல்களைக் கண்காணித்து அதுபற்றிய தகவல்களை கடவுளுக்குத் தெரிவிப்பது என்பது பல யுகங்களாக நடந்துவருகின்றது.

கடவுள் படைத்த தேவர்கள் தவிர, மனித வாழ்க்கையில் உயர்ந்த தவத்தையும் மிக உயர்ந்த ஞானத்தையும் சிறந்த தியாகத்தையும் புரிந்தவர்கள் ஆத்மபரிமானத்தின்மூலம் தேவர்களது இயற்கை நியதியாக உள்ளது.

தேவர்களுக்கு இறைவனடியை அடையும் பாக்கியமில்லை. அதாவது 'முக்தி' பெறும் வாய்ப்பு இல்லை. ஆனால் மனிதர்கள் பூமியில் நல்ல செயல்களில் ஈடுபட்டு அதையே தொடர்ந்து தேவர்கள் ஆகலாம். ஆனால் தேவர்கள் மீண்டும் பூமியில் பிறந்து வாழ்ந்து பிறகுதான் 'முக்தி' அடையமுடியும் என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முப்பது முக்கோடி தேவ- தேவதைகள் அனைவரும் பசுவின் உடலில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே பசுவை வணங்கினால் இறைவன், தேவர்கள் உட்பட அனைவரையும் வணங்கிய புண்ணியம் கிடைக்கும்.

தேவேந்திரன் பல தீமைகளைச் செய்திருக்கிறான். அதேசமயம் பல நல்ல செயல்களையும் செய்திருக்கிறான். தேவேந்திரன் இல்லாவிட்டால் பூமியில் மழை பொழியாது. எனவே பூமியில் மழை பெய்யவும், பூமி செழிப்புடன் இருக்கவும், தேவேந்திரனை வணங்குவோம். தேவ- தேவதைகளை மதித்து நடப்போம்.

●

# ஆதியும் நானே! அந்தமும் நானே!

உலகத்து உயிர்களுக்கு எல்லாம் ஆதியும் உண்டு; அந்தமும் உண்டு. ஆதி என்பதோ நல்ல தொடக்கம். அந்தம் என்பதோ நல்ல முடிவு. ஆனால் முக்கண் முதல்வனாகிய எல்லாம் வல்ல சிவபெருமானுக்குத் தொடக்கமுமில்லை, முடிவுமில்லை. அருவமுமில்லை, உருவமும் இல்லை. அருவுருவற்றவன்.

சிவபெருமான் பிறப்பிலி. அவருடைய மேலான ஆணைக்கு இணங்கவே படைப்புக் கடவுளான பிரம்மாவும், காக்கும் கடவுளான விஷ்ணுவும் சிவனுடைய ஆணைகளை ஏற்றே தத்தம் தொழில்களைச் செய்கின்றனர். அதைத்தான் தேவார மூவர்களுள் ஒருவரான திருநாவுக்கரசரும், தமது பாக்களில் தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஆதியும், அந்தமும் என்ற வார்த்தைகளைப் பொதுவாக ஆராய்ந்து பார்க்கின்றபோது, இப்பூமியில், பிறந்த எல்லா உயிர்களுக்கும் ஆதியும், அந்தமும் உண்டு. விலங்குகளின் பரிணாமத்தை எடுத்துக்கொண்டால் பிறக்கின்றன, வளர்கின்றன. பல்வேறு போராட்டங்களுக்கு இடையே வாழ்கின்றன. ஒரு கால கட்டத்தில் இறந்து விடுகின்றன. இதிலிருந்து தொடக்கமும், முடிவும் அறியமுடிகிறது.

மனித சமுதாயத்தை எடுத்துக் கொண்டால், பத்து மாதங்கள் அன்னையின் கருவறையில் மூன்று அடுக்குப் பாதுகாப்பில் இருக்கிறார்கள். பின்பு பூமியில் வளர்ந்து ஆளாகி, பல்வேறு பிரச்சினைகளைத் தினமும் சந்தித்து, அகர்வை முதிர்வினால் இயற்கை எய்துகிறார்கள். ஒவ்வொரு நிலையும் மெதுவாக நகர்ந்து ஒரு வரலாற்றைப் படைக்கிறது.

சித்தாந்த ரத்தினம், இலக்கியச்சுடர்
முனைவர். **இராம. கண்ணன்**

**நந்தவனத்தில்**
**ஓர் ஆண்டி**
**அவன் நாலாறு**
**மாதமாய்க்**
**குயவனை வேண்டி**
**கொண்டு வந்தான்**
**ஒரு தோண்டி**
**அதைக் கூத்தாடிக்**
**கூத்தாடிப் போட்டு**
**உடைத்தாண்டி!**

ஒரு தொழிலின் நல்ல தொடக்கம் ஆரம்பமாகி, வளர்ச்சியடைந்து நிறைவு பெறும். தொழிலின் ஆதியும், அந்தமும் யாருக்கும் பிடிபடாது. தொழில் விருத்தி அடைவதும் இறைவனுடைய தீர்ப்பே ஆகும்.

இறைவன், எப்படி ஒரு செயலை தொடங்க வேண்டும், எப்படி நீட்டிக்க வேண்டும், எப்படி நிறைவு செய்யவேண்டும் என்று ஒரு தீர்மானம் வைத்திருப்பார். அதன்படி செயல்கள் எல்லாம் திறம்பட நடக்கும். தொடக்கமும், நிறைவும் தொடர்ந்து நடக்கும். இறைவனுக்கு மட்டும் தொடக்கமும் இல்லை; முடிவும் இல்லை. ஆதி அந்தம் இல்லாத அருட்பெரும் இறையே.

ஒருவரது வாழ்வின் தொடக்கமும், முடிவும் நிர்ணயிக்கப்பட இயலாத ஒன்று. எப்படித் தொடங்கும்,



# இறைவன்

எப்படி ஒரு செயலை தொடங்க வேண்டும், எப்படி நீட்டிக்க வேண்டும், எப்படி நிறைவு செய்யவேண்டும் என்று ஒரு தீர்மானம் வைத்திருப்பார். அதன்படி செயல்கள் எல்லாம் திறம்பட நடக்கும்.

எப்படி நீண்ட, நெடிய பயணம் செய்து வெற்றிகளையோ- தோல்விகளையோ தழுவும் என்பது கணிக்க இயலாத ஒன்று.

இறைவனே, ஆதியும் நானே, ஜோதியும் நானே என்று சொல்லி, எல்லா தரப்பினரையும் உசுப்பிவிட்டு, வேடிக்கை பார்ப்பது போலத் தெரிகிறது. எல்லாருக்கும் தொழில் தொடங்கும், முன்னும், பின்னும் தொடக்கமும், முடிவும் இல்லாத இறை வனை நெஞ்சில் இருத்தி வணங்கிய பின்னரே தத்தம் தொழில்களில் விரைவாக ஈடுபடுகின்றனர்.

பாலுக்குள் வெண்ணைபோலவும், எள்ளுக்குள் எண்ணெய் போலவும், விறகில் தீபோலவும், இறைவன் தொடக்கமும், முடிவும், இல்லாது அண்ட சராசரங்களிலும் வெற்றி உலாவருகின்றான்.

இயற்கையோடு இறைவன் நிகழ்த்தும் திருவிளையாடல்கள் எல்லாம் முடிவும், முதலும் இல்லாமல் இருக்கிறது. வெயில், குளிர், பனி, மழை, காற்று, பூகம்பம் ஒன்றுமே சொல்லிவிட்டு வருவதுமில்லை; சொல்லிவிட்டுச் செல்வதும் இல்லை. இயற்கை தன்னுடைய சீற்றங்களைக் காட்ட சிறகு விரித்து ஆடும்போது ஏழை- பணக்காரன், உயர்ந்தவன்- தாழ்ந்தவன் என்ற எந்தவித பாகுபாடும் பார்க்காமல் தன் தாண்டவத்தைக் காட்டுகிறது.

ஆதியும் நானே, அந்தமும் நானே என்ற ஏக இறைவனின் அதிரடி ஓசையை எல்லாரும் ஏற்று இறைவழிபாடு கொள்கின்றனர். திசை நோக்கித் தொழுகின்ற திருக்கூட்டத்தினரின் இறையாண்மையிலும், ஒருபோதும் ஆதியும், அந்தமும் இருப்பது இல்லை. உருவ வழிபாடே இல்லாத கிறித்துவர்களின் ஒரு பிரிவினர், இறைவனை ஆதி, அந்தம் இல்லாத தேவனாகத்தான் கருதி, என்றும் வழிபடுகின்றனர். மொத்தத்தில் எல்லா மதத்தினரும், எல்லா இனத்தின ரும், எல்லா தரப்பினரும், இறையை ஆதி அந்தம் இல்லாதவனாகத்தான் வழிபடுவதைக் காணமுடிகிறது.

# ஊனம் நீக்கும் கூனஞ்சேரி!

✡ பழங்காமூர் மோ. கணேஷ்

உடல் ஊனத்தால் உள்ளம் கலங்கி நிற்பவர்கள் பலர் உண்டு. தினமும் போராட்டம்தான் இவர்களது வாழ்க்கை. இப்படிப் பட்டவர்களின் ஊனத்தை நீக்கும் உன்னதத் திருத்தலமாகத் திகழ்கிறது கூனஞ்சேரி.

பிறக்கும்போதே எட்டு கோணல்களாகப் பிறந்த எண்கோண மகரிஷி என்னும் தபோரிஷி ஒருவர் இருந்தார். அவரது வாழ்வில் நடந்த அற்புதத்தைப் பார்ப்போம்.

பாரத தேசத்தின் வடகிழக்குப் பகுதியான தண்டக்காரண்யத்தில் தானவ மகரிஷி என்பவர் குடிலமைத்து வாழ்ந்துவந்தார். ஈசனது அருள்வாக்கின்படி சிறுவர்களுக்கு வேதங்களை கற்பித்தார். ஆனால் இவருக்கு குழந்தைப் பேறு இல்லை. இவர் வேதங்களை போதிக்கும்போது இவரது மனைவியும் அதை கேட்டுவந்தார். இதனால் இவரின் மனைவிக்கு ஏற்பட்டிருந்த தோஷங்கள் யாவும் நீங்கப்பெற்று, அவள் கர்ப்பவதியானாள்.

ஒருசமயம் தானவ மகரிஷியிடம் பாடம் பயின்று வந்த சிறுவன், பாடம் கற்கும் போதே தற்செயலாக தூங்கி விட்டான். இதனால் கோபம்







கொண்ட தானவர், அச்சிறுவனை கடிந்துக்கொண்டார். அப்போது இவரது மனைவியின் வயிற்றினுள் இருந்த குழந்தை, “தந்தையே இரவு- பகல் பார்க்காமல் போதனை செய்தால் தூக்கம்தானே வரும். இது இயற்கைதானே? இதை தாங்கள் அறியமாட்டீரா? என குரல் கொடுத்தது.

இதைக்கேட்டத் தானவர், ஆத்திரம் அடைந்து, தனது வாரிசு என்றும்கூட நினைக்காமல், ‘நீ பிறக்கும் முன்பே கேள்வி கேட்கிறாயா? வளைந்த கேள்விக்குறி போல, நீ எட்டு கோணலாகப் பிறப்பாய்’ என்று சாபமிட்டார்.

சாபம் பலித்தது. குழந்தை எட்டுவித உடல் வளைவுகளோடு பிறந்தது. தானவர் தன் சாபத்தை எண்ணி மனம் வருந்தினார். அப்போது மிதிலை நாட்டு (சீதா பிராட்டியின் தந்தையான ஜனக மகரிஷியின் நாடு) இராஜ சபையின் இராஜகுருவாக விளங்கிய வந்திக்கும், தானவ மகரிஷிக்கும் வாதம் ஏற்பட்டது. அதில் தோல்வியடைந்த தானவர், மனைவியிடம்கூட சொல்லாமல் தண்டக்காரண்யத்தை விட்டு கயிலாயம் புறப்பட்டுச் சென்றார்.

பலகாலம் கயிலாயநாதரை தியானித்தபடி கடந்தவம் புரிகின்றார். இதனிடையில் எட்டு கோணலாகப் பிறந்த அஷ்டவக்கிரர் வளர்ந்து கல்வி- கேள்விகளில் தேர்ச்சியடைந்து, சிறந்த ஞானியாகின்றார். தனது தந்தைக்கு ஏற்பட்ட நிலையை தனது தாயிடம் கேட்டறிந்த அஷ்டவக்கிரர், மிதிலையை (தற்போதைய நேபாள நாடு) அடைந்து, வந்தியிடம் வாதம் நடத்தி, வந்தியை வாதத்தால் தோற்கடிக்கின்றார். தனது தந்தையின் மானத்தை மீட்டதோடு, வந்தியால் தோற்கடிக்கப்பட்டு சிறையில்

அடைக்கப்பட்டிருந்த 100 பண்டிதர்களையும் மீட்கின்றார்.

பின்னர் தந்தையைத்தேடி கயிலாயம் சென்று அவரை கண்டுபிடிக்கின்றார். அப்போது தனது மகனின் அஷ்டகோணல் நீங்கிட, கயிலாயநாதரிடம் கையேந்துகின்றார் தானவர். மனமிறங்கிய மகாதேவர், "சோழவள நாட்டில் காவிரியின் கிளை ஆறான பழவாற்றங்கரையில் தனக்கு ஒரு ஆலயம் எழுப்பி, பிருத்வி, அப்பு, அக்னி, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆத்மா ஆகிய எட்டு லிங்கங்களை தேய்பிறை அஷ்டமியன்று ஸ்தாபித்து, எட்டு விதமான பழங்கள், புஷ்பங்கள் மற்றும் நைய்வேத்தியங்களால் எம்மை மகிழ்வித்தால், அஷ்டவக்கரனின் ஊனம் நீங்கும்" என அசரீரி வாயிலாக வாக்குறைத்தார் வானோர்க்கு அரசர்.



அதன்படி தானவரிஷி அவரது மனைவி மற்றும் அஷ்ட வக்கிரருடன் சோழதேசம் வந்தார். பழவாற்றங்கரையில் முற்காலசோழமன்னனது துணையோடு ஸ்ரீ பார்வதி அம்மை உடனுறை ஸ்ரீ கயிலாசநாதருக்கு ஆலயம் எழுப்பினார்.




ஸ்ரீல ஸ்ரீ வராஹி ஆன்மீகம், சித்தா மற்றும்

மூலிகை ஆராய்ச்சி மையம்



இங்கு அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும். ஸ்ரீ வாராஹி அன்னையின் மூலம் அனைத்து விதமான கோளாறுகளும் சரி செய்யப்படும். நவக்கிரகக் கோளாறுகள் நீங்க, சத்ரு வசியம், சத்ரு நாசம், திருமணத்தடைகள் நீங்க, தகாத உறவுகளை பிரிக்க, காதலில் வெற்றி பெற, கடன் தொல்லைகள் தீர, வராத கடன்கள் வசூலாக, கனவன் மனைவி ஒன்று சேர, குழந்தை பாக்கியம் கிடைக்க, தீராத நோய்கள் தீர, தொழிலில் வெற்றி பெற, குழந்தைகள் நன்றாக படிக்க, வாஸ்து தோஷம் நீங்க, தோட்டம் வெள்ளாமை சிறக்க, கணவன் - மனைவி வசியம், அஞ்சனம் மற்றும் அனைத்து பிரச்சினைகளுக்கும் உடனடி தீர்வு சர்வ வசிய அஞ்சனம் ராஜ வசிய மை கிடைக்கும். மூல வியாதி ஒரே முறை மருந்தின் மூலம் குணப்படுத்தப்படும். அனைத்து விதமான மூலிகை செடிகளும் கிடைக்கும்.

சர்க்கரை நோய், ஆண்மைக்குறைவு, குடியை நிறுத்த மூலிகை மருந்து கிடைக்கும்.

ஜோதிடர்களுக்கு முக்காலம் குறிசொல்லும் கர்ணாயட்சனி மற்றும் வாக்குபலித அஞ்சனம் கிடைக்கும்.

உயிர் காக்கும் மூலிகையான கரு நொச்சி இலை கிடைக்கும்.

Dr. G.K. ஸ்ரீநிவாஸன், SMP, RMP.,

33, கருப்பணன் தெரு, நாயக்கன்காடு, கோபி - 638 476, ஈரோடு மாவட்டம்.

முன்பதிவிற்கு: 99940 55510, 96983 39955 www.siddhamedicineandherbals.in

ஆலயத்தினுள்ளே வடபாகத்தில் எட்டு லிங்கங்களையும் தேய்பிறை அஷ்டமியன்று நிறுவி, அதியற்புதமாய் வழிபாடுகள் நடத்தினார். பின்னர் கயிலை ஈசனது திருவருளால் அஷ்டவக்கிரரது கோணல் (கூனல்) நிமிர்ந்து நன்னிலை அடைந்தார். பின்னர் இத்தலத்திலேயே பலகாலம் சிவபூஜை செய்து, நற்கதி அடைந்தார். இச்சம்பவத்திற்கு பின் இத்தலம் “கூனல் நிமிர்ந்தபுரம் என்றாகி, தற்போது கூனஞ் சேரி என்று அழைக்கப்படுகின்றது.

மிதிலை மன்னன் ஜனகரின் கேள்வி களுக்கு அஷ்டவக்கிரமகரிஷியின் பதில்கள் அடங்கிய தொகுப்பே பிரபலமான ‘அஷ்ட வக்கிரகீதை’ ஆகும். அஷ்டவக்கிர மகரிஷி யின்மூலமே ஜனகரின் அறியாமைக் களைந்து ஞானம் உண்டானது. இதன்பிறகே ஜனகர், ‘இராஜரிஷி’ என்று அழைக்கப்பட்டார்.

பேருந்து சாலையின் இடதுபுறம் ஆலயம் தென்முகத் தோரணவாயிலுடன் அமைந்துள்ளது. உள்ளே சென்று இடப்பக்கம் திரும்பிட, ஈசனது சன்னதி உள்ளது. மகாமண்டபம், அர்த்தமண்டபம், கருவறை என்கிற அமைப்பில் சுவாமி சன்னதி அமையப்பெற்றுள்ளது. முதலில் நந்தியம்பெருமானது தரிசனம். சன்னதிக்குமுன்பு இரு பக்கங்களின் இரண்டு கணபதிகள் குடிகொண்டுள்ளனர். தலையில் குட்டிக்கொண்டு உள்ளே செல்ல, மகாமண்டபத்தின் தென்புறத்தில் தலகணபதியும், வடபுறத்தில் வள்ளி - தெய்வானையுடன் ஸ்ரீ சுப்ரமணியரும் வீற்ற ருள்கின்றனர்.



மூலஸ்தானத்தில் லிங்கரூபராய் திருவருள் புரிகின்றார் ஸ்ரீ கயிலாயநாதர். சகல வரங்களையும் நல்கும் பெருமான் இவர். இவரை மனமுருகி வணங்கிய பின், ஆலய வலம்வருகின்றோம். கோஷ்ட மாடங்களில் உரிய தெய்வங்களை தரிசிக்கின்றோம்.

கோமுகத்திற்கு அருகே வீற்றிருக்கும் ஸ்ரீ சண்டிகேஸ்வரர் விக்ன சண்டராக விசித்திரமாக காட்சி தருகின்றார். இவரது சிரசில் ஸ்ரீ கணபதி அமர்ந்துள்ளார். ஆலய வடக்கு பகுதியில் கிழக்குப் பார்த்தவாறு வரிசையாக எட்டு லிங்கங்கள் நந்தி வாகனத் துடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவை: பிருத்விலிங்கம், அப்புலிங்கம், அக்னிலிங்கம், வாயுலிங்கம், ஆகாசலிங்கம், சூரியலிங்கம், சந்திரலிங்கம் மற்றும் ஆத்மலிங்கம் ஆகும். கயிலாயநாதர் திருவருளால் இந்த எட்டு லிங்கங்களை நிருவி வழிபட்ட பின்னரே அஷ்டவக்கிர முனிவரது கூன் நிமிர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அஷ்ட லிங்கங்களை நமஸ்கரித்து, பின்னர் கணபதி மற்றும் காலபைரவரையும் வணங்கு கின்றோம். அருகே குலோதுங்க சோழனும், அவனது மகனும் சிற்பங்களாக உள்ளனர்.

சுவாமி சன்னதிக்கு இடபாகத்தில் தனியே சன்னதி கொண்டருள்கின்றாள் ஸ்ரீ சௌந்தரநாயகி. ஈசனதி இச்சா சக்தியாக அருள்புரிகின்றாள் இவ்வன்னை. சௌந்தரம் எனில் அழகு என்பது பொருளாகும். இவ் வம்பிகையின் எழில்மிகுந்த தோற்றத்தில் நம் மனம் மயங்குவது உறுதி. இவ்வன்னையின் வரத அஸ்தம் நடன முத்திரையுடன் உள்ளது.

பிரதான அம்பிகையான ஸ்ரீ பார்வதிதேவி தெற்கு பார்த்தவண்ணம் தனியே சன்னதி கொண்டு திகழ்கின்றாள். கரங்களில் ஜெப மாலையும், நீலோற்பல புஷ்பமும் கொண்டு ஜடாமகுடதாரியாக அருளுகின்றாள். இவ்வம்பிகையின் அருட்தரிசனம் நமை பரவசத்தில் ஆழ்த்துகின்றது.

சிறிய ஆலயம்தான். ஆனால் அருள் தழும்புகின்றது. பொதுவாக நடக்கும் எல்லா சிவாலய விசேடங்களும் இங்கு சிறப்புற

நடத்தப்படுகின்றன. பிரதிமாத பௌர்ணமி யன்று 108 தீபங்கள் ஏற்றி சிறப்பு வழிபாடுகள் நடக்கின்றன. அதோடு, தேய்பிறை அஷ்டமி யில் பைரவருக்கு சிறப்பு அபிஷேக - அலங்கார - ஆராதனைகள் செய்யப்படுகின்றன.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இவ் வாலயத்தில் தினமும் இரண்டுகால பூஜை கள் நடக்கின்றன. தற்போது ஆலயத்தில் திருப்பணிகள் நடைபெற்றுவருவதால், இவ்வாலய அர்ச்சகரை தொடர்புகொண்டு, திருப்பணியில் பங்குபெற்று, புண்ணிய பலன் களைப்பெற அன்பர்களை வேண்டுகின் றோம்.

காவிரியின் கிளையாறான பழவாறு இத்தலத்தின் தீர்த்தமாகவும், வில்வம் இத்தல விருட்சமாகவும் திகழ்கின்றது.

**பரிகாரங்கள்**

● அஷ்ட லிங்கங்களுக்கு விபூதி அபிஷே கம் செய்து, அதை பிரசாதமாக தினமும் பூசிவர, நற்பலன் உண்டாகும்.

● அஷ்டலிங்களுக்கு சுத்தமான மரச்செக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் செய்து, அதை அங்கங்களில் தடவிவர, விசேஷ பலன் உண்டு.

● வாய்பேசா குழந்தைகளுக்கு... எட்டு லிங்கங்களுக்கும் தேன் அபிஷேகம் செய்து, அதைப் பெற்றுச்சென்று, பருகிவர, நல்லபலன் உண்டாகி, பேச்சு குறைபாடுகள் நீங்குகிறது.

● முதல் தேய்பிறை அஷ்டமிக்கு கணபதிக் கும், 2-ஆவது அஷ்டமி கயிலாசநாத சுவாமிக் கும், 3-ஆவது அஷ்டமி முதல் 10-ஆவது அஷ்டமிவரை ஒவ்வொரு லிங்கத்திற்கும் என எட்டு லிங்கங்களுக்கும், 11-ஆவது மாதம் அம்பிகைக்கும் கீழ்க்கண்டவாறு பூஜை செய்து வரவேண்டும். இது போன்ற முறையில் வழிபாடு செய்தால் எப்பேர்ப்பட்ட ஊனமும் சரியாகும். 6-ஆவது மாதத்திலேயே உடலில் பல மாற்றங்கள் ஏற்பட்டு, நல்ல முன்னேற் றம் கிடைக்கும்.

ஒவ்வொரு தேய்பிறை அஷ்டமின்றும் அபிஷேகம் நடத்தி, எட்டுவித பூக்களால் அர்ச்சனை செய்து, எட்டுவித பழங்களைப் படைத்து, எட்டுவிதமான அன்னங்களால்



நைவேதனம் செய்து வழிபடவேண்டும். அதோடு, கலசம் ஸ்தாபித்து, ஹோமம் நடத்தி, அந்தந்த மூர்த்திக்கு கலசா பிஷேகம் செய்து, அந்த கலச தீர்த் தத்தை பாதிக்கப்பட்டவரின் மேல் ஊற்றிட வேண்டும்.

உடல் ஊனத்தை சரிசெய்வது மட்டுமில்லாமல், புத்திர பாக்கியத்திற்கும் உகந்த தலம் இந்த கூனஞ்சேரி. அதோடு, நரம்புத் தளர்ச்சி மற்றும் நரம்பு சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் தீர்வளிக்கின்றார் ஸ்ரீ கயிலாசநாதர்.

**வழி:** கும்பகோணத்திலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில் திருவையாறு செல்லும் சாலையில், சுவாமிமலைக்கு அருகேயுள்ள அண்டங்குடிக்கு வடக்காக அமைந்துள்ளது கூனஞ்சேரி. இவ்வூருக்கு அருகே புள்ளம் பூதங்குடி மற்றும் ஆதனூர் திவ்யதேசங்கள் அமைந்துள்ளன.

**ஆலய தொடர்புக்கு**

கூனஞ்சேரி விக்னேஷ் குருக்கள்: அலைபேசி: 93454 65829.

●

# 2026 ஜனவரி மாத ராசிபலன்கள்

## மேஷம்

2026-ஆம் ஆண்டு மேஷ ராசிக்கு 2-ஆவது ராசியிலும், 6-ஆவது லக்னத்திலும் (கன்னி) பிறக்கிறது. ராசிநாதன் செவ்வாய் தொடக்கத்தில் 9-லும் பிறகு 10-ஆமிடமான மகரத்திலும் உச்சம் பெறுகிறது. ராசிநாதனுக்கு குருபார்வை. 11-ஆமிடத்துக்கும் குருபார்வை. எனவே இம்மாதம் சில நன்மைகளையும் காரிய அனுகூலங்களையும் எதிர்பார்க்கலாம். 3-ல் வக்ரமாக இருக்கும் குரு தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் அதிகபடுத்துவார். என்றாலும் சில நேரம் கற்பனை பயத்தையும் எதிர்காலம் பற்றிய கவலைகளையும் தருவார். 15-ஆம் தேதிமுதல் 10-ல் வரும் சூரியன் உத்தியோகம் மற்றும் தொழில்துறையில் சில நன்மைகளை ஏற்படுத்துவார். 2, 7-க்குடைய சுக்கிரனும் 15-ஆம் தேதிமுதல் சூரியனுடன் சேர்க்கை. எனவே தன வரவு உண்டாகும். மாதத்தின் முற்பகுதியில் தம்பதிகளுக்குள் கருத்து வேறுபாடு விலகி ஒற்றுமையுணர்வு ஏற்படும். அதற்கு 7-ஆமிடத்தைப் பார்க்கும் குருவும் காரணமாக அமைவார். 11-ல் உள்ள சனி முன்னேற்றச் சூழ்நிலைகளை உருவாக்குவார். பிள்ளைகள் பற்றிய கவலை மாறும்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமை விநாயகருக்கு நெய்தீபமேற்றி வழிபடவும்.

## ரிஷபம்

உங்கள் ராசியிலும், மிருகசீரிட நட்சத்திரத்திலும், 5-ஆவது லக்னமான கன்னியிலும் பிறக்கிறது 2026-ஆம் ஆண்டு. எனவே இம்மாதம் மதிப்பு, மரியாதை, அஸ்தஸ்து உயருதல் போன்ற நன்மைகளை சந்திக்கலாம். ஒரேநாளில் ஒபாமா ஆக முடியாவிட்டாலும் உங்கள் முயற்சிக்கேற்ப பலன்கள் நற்பலன்களாக அமையும். 2-ல் உள்ள குரு பொருளாதார நிலையை மேம்படுத்தும். திருமணமாகாத இளைஞர்- இளைஞிகளுக்கு திருமணப் பேச்சுவார்த்தை கைகூடும். 5-ஆவது லக்னம் என்பது திரிகோணம். எனவே எண்ணிய திட்டங்கள் செயல்வடிவம் பெறும். கருதிய காரியங்கள் கைகூடும். 2, 5-க்குடைய புதன் 11-ஆம் தேதிமுதல் 9-ல் மாறுகிறார். அதன்பின் ராசிநாதன் சுக்கிரனும் மாறுகிறார். அது ஒருவகையில் ப்ளஸ்தான். ஜனன ஜாதகத்தில் பாதகமான தசாபுக்திகள் நடந்தாலும் கோட்சாரம் சாதகமாக அமைவதால் மிகப்பெரிய சங்கடங்களுக்கு இடம் ஏற்படாது. தகப்பனார்வழி உறவில் கடந்த காலத்தில் இழப்புகள் ஏற்பட்டிருந்தாலும் உங்கள் நடவடிக்கையில் பாதிப்பு நிகழாது.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமை ஸ்ரீரங்கம் சென்று வழிபடவும்.

## மிதுனம்

2026-ஆம் ஆண்டு உங்கள் ராசிக்கு 12-ஆவது ராசியிலும், 4-ஆவது லக்னத்திலும் பிறக்கிறது. இம்மாதம் ராசிநாதன் புதன் தொடக்கத்தில் 7-ஆமிடத்திலும், பிறகு 8-ஆமிடத்துக்கும் (மகரம்) மாறுகிறார். 12-க்குடைய சுக்கிரனும் அங்கு சேருகிறார். ஆக, வீண் விரயம் ஏற்பட வாய்ப்புண்டு. பூமி, மனை சம்பந்தப்பட்ட விரயமும் உண்டாகும். அல்லது சொத்து பரிவர்த்தனை ஏற்படலாம். ஜென்மத்திலுள்ள குரு வக்ரகதியில் சஞ்சரிப்பதால் உடல்நிலையில் அவ்வப்போது சோர்வு, ஆரோக்கிய குறைவு உண்டாகலாம். 3-ல் உள்ள கேது தைரியம், தன்னம்பிக்கை இவற்றைத் தந்தாலும், உடன்பிறந்த வகையில் நிலவும் சங்கடங்கள், பிரச்சினைகள் மனக் குழப்பத்தைத் தரும். ஜனன ஜாதக தசாபுக்திகள் சாதகமாக இருந்தால் சிலர் வீடு அல்லது மனை வாங்கலாம். 14-ஆம் தேதிமுதல் 11-க்குடைய செவ்வாய் 8-ல் உச்சமாக மாறி 2-ஆமிடத்தைப் பார்ப்பது நல்லது. விரயத்திலும் ஒரு வரவு உண்டு. 7-ஆமிடத்தைப் பார்க்கும் குரு திருமண வாய்ப்பைத் தருவார்.

**பரிகாரம்:** புதன்கிழமையன்று சக்கரத்தாழ்வாரை வழிபடவும்.

## கடகம்

2026-ஆம் ஆண்டு உங்கள் ராசிக்கு 11-ஆவது ராசியிலும், (ரிஷபம்) 3-ஆவது லக்னத்திலும் (கன்னி) பிறக்கிறது. லக்னநாதன் புதன் தொடக்கத்தில் 6-ல் நின்றாலும் 11-ஆம் தேதிமுதல் கடக ராசிக்கு 7-ல் மாறி ராசியைப் பார்க்கிறார். சுக்கிரனும் அவருடன் பின்தொடர்ந்து இணைகிறார். எனவே, 'கழுவின மீனில்



✡ சி.எஸ். ஞானமூர்த்தி



நழுவின மீன்போல்' சில சந்தர்ப்பங்களில் தப்பிக்கலாம். அட்டமத்துச்சனி கடக ராசியினரை ஒரு புறம் வாட்டி வதைத்தாலும், 11-ஆவது ராசியில் பிறக்கும் புத்தாண்டு காரிய அனுகூலத்தைத் தரும். 12-ஆமிடத்து வக்ர குரு சிலருக்கு இடமாற்றத்தைத் தரும். அப்படி இடமாற்றம் ஏற்படாத சிலருக்கு தேக சுகத்தில் குறையை ஏற்படுத்தி ஒரே இடத்தில் உட்கார வைத்துவிடும். மேற்கூறிய பலன் நன்மையா- தீமையா என்ற சந்தேகம் வரலாம். அதாவது- 11-ஆவது ராசி நன்மை, 12-ஆமிடத்து குரு, அட்டமத்துச்சனி இவை சுமாரான பலனைத் தான் தரும். மேலும் மூல காரணகர்த்தா அவரவர் கர்மவினையைப் பொறுத்தது.

**பரிகாரம்:** சனிக்கிழமை கால பைரவருக்கு மிளகு தீபம் ஏற்றி வழிபடவும்.

## சிம்மம்

2026-ஆம் ஆண்டு உங்கள் ராசிக்கு 10-ஆவது ராசியிலும், 2-ஆவது லக்னத்திலும் பிறக்கிறது. மேலும் 11-ஆமிடத்தில் வக்ர குரு சஞ்சாரம். உத்தியோகம், தொழில் இயக்கம் இவை சீராக இயங்கும். ஒருசில நேரம் வேகம் இருந்தாலும் சிலநேரம் வேகம் குறைவாகக் காணப்படும். 11-ல் உள்ள குரு 5-ஆமிடத்தைப் பார்ப்பதால் பிள்ளைகளுக்கு வேலை சம்பந்தமாகவோ அல்லது திருமணம் சம்பந்தப்பட்ட கவலைகளோ மாறும். உத்தியோக வாய்ப்பு கைகூடும். தொழில்துறையிலும் நல்ல சிப்பந்திகள் அமையும். ராசிநாதன் சூரியன் 5-ல் நிற்க குருவின் பார்வையும் அங்கு கிடைப்பது நன்மை. புதிய வேலையில் சேர்ந்தவுடன் நற்பெயரும் மதிப்பும் கிடைக்கப்பெறலாம். 4, 9-க்குடைய செவ்வாய் 6-ல் உச்சம் பெறுவதால் ரியல் எஸ்டேட், கட்டடத் தொழில் செய்வோருக்கு கடனுதவியும் கிடைக்கும். தந்தையாரால் ஆதரவும் உண்டாகும். 7-ல் உள்ள சனி கணவன் அல்லது மனைவிக்கு சில தொல்லைகளைத் தரலாம்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமை விநாயகருக்கு செம்பருத்தி பூசாற்றி வழிபடவும்.

## கன்னி

2026-ஆம் ஆண்டு உங்கள் ராசிக்கு 9-ஆவது ராசியிலும், ஜென்ம லக்னத்திலும் (கன்னியில்) பிறக்கிறது. 4, 7-க்குடைய குரு 10-ல் வக்ரமாக சஞ்சாரம். ஆன்மிக எண்ணம் அதிகரிக்கும். சிலருக்கு ஆன்மிக யாத்திரையும் மேற்கொள்ள நேரிடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஓய்வில்லாத உழைப்பு உண்டாகும். என்றாலும் அதற்கேற்ற தன வரவும் ஏற்படும். 12-க்குடைய சூரியன் 4-ல் நிற்பதால் தாயாருக்கு மருத்துச் செலவு, குடியிருக்கும் வீட்டில் வீண் விரயம் அல்லது மனையை விற்பது போன்ற

பலன்களை சந்திக்கலாம். 12-ல் உள்ள கேது வெளிநாட்டு வேலைக்கு அல்லது வெளிமாநில வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு அனுகூலம் உண்டாகும். 6-ஆமிடத்தைப் பார்க்கும் குரு போட்டி, பொறாமையை ஏற்படுத்துவார். அதேசமயம் வக்ரம் என்பதால் அதற்குண்டான தீர்வும் அமையும். கணவன்-மனைவிக்குள் அவ்வப்போது சச்சரவு தோன்றி விலகும்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமையன்று பெருமாளுக்கு நெய்தீபமேற்றி வழிபாடு செய்யவும்.

## துலாம்

2026-ஆம் ஆண்டு உங்கள் ராசிக்கு 8-ஆவது ராசியிலும், 12-ஆவது லக்னத்திலும் பிறக்கிறது. லக்ன நாதன் புதனும் ராசிநாதன் சுக்கிரனும் 3-ல் சஞ்சாரம். ராசிக்கு 9-ல் உள்ள குருவின் பார்வை 8-ஆமிடம், 12-ஆமிடம் மறைவு ஸ்தானம். எனவே விரயம் இல்லாமல் ஆதாயம் இல்லையென்ற சூழ்நிலை என்றாலும் குருபார்வை ராசிக்கு கிடைப்பதால் முயற்சியில் தளர்ச்சி இல்லை. ராசிநாதன் குரு பார்க்கிறார். முக்கிய அந்தஸ்துள்ள பிரமுகர்களின் தொடர்பு கிடைக்கும். அதன்மூலம், உங்களின் அந்தஸ்தும் உயரும். 3-ஆமிடத்தை 3-க்குடையவரே பார்ப்பதால் எந்தத் தடை வந்தாலும் எதிர்த்து நின்று போராடும் தன்னம்பிக்கை குறையாது. உடன்பிறந்தவகையில் எச்சரிக்கையுடனும் கவனமுடன் செயல்படுவது அவசியம். யாருக்கும் ஜாமீன் பொறுப்பு ஏற்க வேண்டாம். 5-ல் உள்ள ராகு சில நேரம் உங்களது திட்டத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தினாலும் குரு 5-ஆமிடத்தைப் பார்க்கிறார். திட்டத்தில் தாமத பலனை சந்திக்கலாம். 11-ல் உள்ள கேது வழக்கு, வியாஜ்ஜியங்களில் சாதகமான பலன்களைத் தருவார். குடும்பத்தில் தம்பதிகளுக்குள் ஒற்றுமை நிலவும்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமை ராகு வேளையில் சரபேஸ்வரரை வழிபடவும்.

## விருச்சிகம்

2026-ஆம் ஆண்டு உங்கள் ராசிக்கு 7-ஆவது ராசியிலும், 11-ஆவது லக்னத்திலும் பிறக்கிறது. 7- கேந்திரம். 11- என்பது ஜெய ஸ்தானம். 7-க்குடைய சுக்கிரனை குரு பார்க்கிறார். எனவே முயற்சி செய்யும் காரியங்களில் முன்னேற்றத்தையும், வெற்றியையும் எதிர்பார்க்கலாம். 8-ல் குரு வக்ரகதியில் நின்றாலும் 2-ஆமிடத்தைப் பார்ப்பதால் தன ப்ராப்திக்கு இடமுண்டு. மாதப் பிற்பாதியில் 10-க்குடைய சூரியன் 9-ஆமிடத்தைப் பார்ப்பதால் அக்காலகட்டம் தர்மகர்மாதிபதி யோகம் சற்று வழிநடத்தும். தொழில், உத்தியோகம் நல்லமுறையில் நடப்பதை சந்திப்பவர்களுக்கு குடும்பத்தில் நிம்மதிக்குறைவு உண்டாகலாம். 5-க்குடையவர் 8-ல் மறைவதால் பிள்ளைகள்வழியில் மனக்கவலை, சஞ்சலம், அவர்களுக்கு நடக்க வேண்டிய சுபகாரியங்கள் தாமதமாவது இவையெல்லாம் மனதை வருத்தலாம். 4-ல் உள்ள சனி, ராகு தேக சுகத்தில் சௌகரியக் குறைவைத் தந்தாலும் பாதிப்புக்கு இடம் ஏற்படாது. சிலர் குடியிருப்பு மாற்றத்தை சந்திக்கலாம்.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமை துர்க்கையம்மனை வழிபடவும்.

## தனுசு

2026-ஆம் ஆண்டு உங்கள் ராசிக்கு 6-ஆவது ராசியான ரிஷபத்திலும், 10-ஆவது லக்னமான கன்னியிலும் பிறக்கிறது. 6 என்பது ரோகம், ருணம், சத்ரு போன்றவற்றை குறிக்கும். 10 தொழில், ஜீவித ஸ்தானம், தொழில் துறையில் உள்ளவர்களுக்கு கடன் உண்டாகும். அது தொழிலுக்குண்டான சுபக்கடன் ஆகும். தொழில் அபிவிருத்திக்கான முயற்சிகளும் செயல்படும். அதே சமயம் போட்டி, பொறாமைகளும் அதிகமாகும். உடல்நிலையில் சற்று கவனம் தேவை. 3-ல் உள்ள ராகு உடன்பிறந்தவழியில் கருத்து வேறுபாடுகளையும் தந்து விரிசலைத் தருவார். யார் நல்லவர்- கெட்டவர் என்ற சிந்தனையை விட்டுவிட்டு சற்று நிதானமாக ஆராய்ந்து முடிவெடுப்பது நல்லது. ராசியை ராசிநாதன் பார்ப்பது ஒரு பலம். 7-ல் வக்ரகதியில் செயல்படுவதால் கணவன் அல்லது மனைவியிடையே வாக்குவாதம் அல்லது ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எழலாம். உத்தியோகத்தினருக்கு மதிப்பு, மரியாதை உயரும். மேலதிகாரிகளிடையே பாராட்டுப் பெறலாம். தர்மகர்மாதிபதி யோகம் நன்றாக வழிநடத்தும்.

**பரிகாரம்:** நவகிரக குருபகவானை வியாழக்கிழமை வழிபடவும்.

## மகரம்

2026-ஆண்டு உங்கள் ராசிக்கு 5-ஆவது ராசி ரிஷபத்திலும், 9-ஆவது லக்னம் கன்னி லக்னத்திலும் பிறக்கிறது. ஏழரைச்சனியின் கடைசிக்கூறு பாதச்சனி

நடக்கிறது. 5-க்குடைய சுக்கிரனும், 9-க்குடைய புதனும் 12-ல் மறைவு. எவ்வளவு முயற்சி செய்தாலும், உழைத்தாலும் அதற்குரிய பலன் கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, நஷ்டத்தைச் சந்தித்துக்கொண்டிருப்பவர்களுக்கு இந்த புத்தாண்டு ஒரு விமோசனத்தைத் தரும். 5, 9-க்குடையவர்கள் மறைந்தாலும் குருபார்வையைப் பெறுவதால் மறைவு தோஷம் பாதிக்காது. ஏழரைச்சனி முடியும் நேரத்தில் நிச்சயம் நன்மையைத் தருவார். இதில் சந்திர தசை அல்லது சந்திர புக்தி நடப்பவர்களுக்கு விதிவிலக்கு. வீண் அவப்பெயர் சங்கடத்தை சந்திக்க நேரும். 15-ஆம் தேதிமுதல் 5-க்குடையவர் அவர் ஸ்தானத்திற்கு 9-ல் வருவது சிறப்பு. கேந்திராதிபதி திரிகோணம் ஏறுவது நன்மையல்லவா! தொழில்துறையில் திடீர்மாற்றம் நிகழும். அது முன்னேற்றத்திற்கான படியாக அமையும்.

**பரிகாரம்:** சனிக்கிழமை காலபைரவரை வழிபடவும்.

## கும்பம்

2026-ஆம் ஆண்டு உங்கள் ராசிக்கு 4-ஆவது ராசியிலும், 8-ஆவது லக்னத்திலும் பிறக்கிறது. 4- தாய் ஸ்தானம், தன்சுகம், வீடு, மனை பூமி, வாகனம் சம்பந்தப்பட்ட ஸ்தானம். ஏழரைச்சனியில் ஜென்மச் சனி நடந்தாலும் மேற்கண்ட வகையில் நற்பலன்கள் கிடைக்கும். வீடு வாங்கும் யோகம் ஏற்படும். பழைய வாகனத்தை மாற்றிவிட்டு புதிய வாகனம் வாங்கும் அமைப்பும் உண்டாகும். இவையெல்லாம் குரு ராசியைப் பார்க்கும் பெருமையால் நடைபெறும். அதேசமயம் 8-ஆவது லக்னத்திலும் அல்லவா ஆண்டு பிறக்கிறது. எதிலும் நிதானமும் பொறுமையும் அவசியம். வாகனத்தில் கவனம் தேவை. ஜனன ஜாதகத்தில் 8-க்குடைய தசாபுக்தி நடந்தால் அபகீர்த்தி, அவமானம், இழப்பு இவற்றை சந்திக்கலாம். 14-ஆம் தேதிமுதல் 3, 10-க்குடைய செவ்வாய் 12-ல் உச்சம் பெறுகிறார். உடன்பிறந்த உறவுகளால் மகிழ்ச்சியும் ஆதரவும் உண்டாகும். உத்தியோகத்தினருக்கு இடமாற்றம் அல்லது வேலை மாற்றம் ஏற்படலம். ஜென்ம ராகு சப்தம கேது திருமண தாமதத்தைத் தரும். தந்தையாருக்கு உடல்நலத்தில் கவனம் தேவை.

**பரிகாரம்:** சனிக்கிழமை ஆஞ்சனேயரை வழிபடவும்.

## மீனம்

2026-ஆம் ஆண்டு உங்கள் ராசிக்கு 3-ஆவது ராசியிலும், 7-ஆவது லக்னத்திலும் பிறக்கிறது. ராசிநாதன் 4-ல் வக்ரம். கேந்திர லக்னத்தில் ஆண்டு பிறப்பதும் லக்னநாதனை குரு பார்ப்பதும் ஒரு வகையில் நன்மைதான் என்றாலும் புதிய ஒப்பந்தங்கள் முடிவாதில் தாமதம் ஏற்படும். அல்லது நடந்துகொண்டிருக்கும் தொழிலில் சிப்பந்திகள் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். அவ்வப்போது உங்கள் உடல்நலனிலும் சௌகரியக்குறைவு, அசதி, சோர்வு போன்றவையும் ஏற்படும். மாத பிற்பாதியில் சூரியன் 11-ல் மாறி அங்கு உச்சமாக சஞ்சரிக்கும் செவ்வாயுடன் இணையும்போது காரிய அனுகூலத்தை எதிர்பார்க்கலாம். ஏழரைச்சனியில் விரயச்சனி. ஒருசிலருக்கு தொழில் விரயத்தை உண்டாக்கினாலும் நண்பர்கள்வகையில் சகாயம் ஏற்பட இடமுண்டு. ராசிநாதன் 4-ல் வக்ரம்பெற்று 12-ஆமிடத்தையும் அங்குள்ள சனியையும் பார்ப்பதால் சிலர் குடியிருப்பு அல்லது உத்தியோகம் சம்பந்தப்பட்ட வகையில் மாற்றம் நிகழும். படிக்கும் மாணவ- மாணவியருக்கு கவனச் சிதறல் உருவாகும். விடாமுயற்சி தேவை.

**பரிகாரம்:** காலபைரவர் மற்றும் ஆஞ்சனேயரை வழிபடவும்.



## நவகிரகங்களும் மனித உடலும்!

| | |
|---|---|
| சூரியன்- | எலும்பு. |
| சந்திரன்- | எலும்பு மஜ்ஜை. |
| செவ்வாய்- | ரத்தம். |
| புதன்- | தோல். |
| குரு- | தசை. |
| சுக்கிரன்- | இந்திரியம். |
| சனி- | நரம்பு. |
| ராகு- | முடி |
| கேது- | நகம். |

-ஆர்.கே. லிங்கேசன்

## வாசகர்கள் தூவிய அர்ச்சனை!

# புத்தாண்டிலும் தித்திக்கட்டும்!




முகப்பு அட்டையில் தேஜஸ்ஸாக சபரிமலை ஐயப்பன், கூடவே ஆண்டு முழுவதும் பூஜிக்க வைக்கும் சிறப்பான வண்ணக் காலண்டர்; உள்ளே புதிய கோணத்தில் ஆன்மிக விஷயங்கள் என டிசம்பர் மாத இதழ் சரியான கலக்கல் அய்யா!

**-ஆர். கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்.**

ஐம்புலன்களின் வழியாக வரும் தீமைகளை நீக்கி நல்வழியில் மனதை செலுத்துபவர்களுக்கு அவர்தம், கண் எதிரில் கடவுளைக் காணமுடியும் என்பது உறுதியான நிலைப்பாடு தான்.

**-ஜி. ஜெயராம், மடிப்பாக்கம்.**

ஆண்டு முழுக்க பூஜிக்க வைக்கும் 2026 வண்ணக் காலண்டர், இந்த ஆண்டு மிகவும் அருமையாக இருந்தது! அட்டையில் அருள்தரும் ஐயப்பன் அழகு முகத்துடன்!! 84 பக்கங்களும், தரும் தகவல்கள் மிகவும் தெளிவுடன் சிறப்புடன் இருக்கிறது.

**-டி. மாணிக்கம், திருச்சி.**

'சித்தர்களைத் தேடி மலைப்பயணம்' அதிசயங்களை அள்ளித் தந்து மெய்சிலிர்க்கும் அனுபவத்தை மலைக்க வைக்கும் பயணத்தை வியப்பின் விளிம்பிற்கே எங்களை அழைத்துசென்று தரிசித்து அருள்பெறச் செய்யும் அற்புத கட்டுரை! நன்றி.

**-கவிதா ராஜா, சென்னை-23.**

சபரிமலை வாசனின் அற்புத தரிசனம் சரண கோஷம் போடவைத்தது. ஆன்மிக தகவல்கள் மட்டுமின்றி இறை அருளை உணர்ந்தவர்களின் உள்ளத்தை கட்டுரையாய் வழங்குவது உன்னதம். கனவிலும் காண இயலாத குபேர் மந்திர ஆலயத்தை நேரில்கண்டு தரிசித்த மகிழ்வை தந்தமைக்கும் நன்றி. புன்னை நல்லூர் கொண்டல் சுருட்டப்பள்ளி திருமருகல் என்று எத்தனையோ ஆலய தரிசனங்கள் அத்தனையும் வரப் பிரசாதங்கள்.

பெருமாள், முருகன் குபேரன், சாய்பாபா படங்களோடு அமைந்த 2026 வண்ணக் காலண்டர் இறை அருளோடு புத்தாண்டை மன மகிழ்வோடு வரவேற்க செய்தது.

நக்கீரன் குழுமத்திற்கு புத்தாண்டு வாழ்த்துகள்.

**-சங்கீத சரவணன், மயிலாடுதுறை.**

வருடந்தோறும் டிசம்பர் மாத 'ஓம் சரவணபவ' இதழுடன் வண்ணக் காலண்டரை எங்கள் இல்லம் செழிக்க நம்பிக்கையுடன் எங்களை இணைக்கும் இணைபிரியா 'கிரியாஊக்கியாக செயல்படும் 'ஓம் சரவணபவ' ஆசிரியர் குழுவினருக்கு அற்புத வாழ்த்துகள்!

**-கா. சித்ரா காமராஜ், கோவை.**

பிரதமர் முன்னால் தன் பாகுபாடற்ற கருத்தினை துணிச்சலாக எடுத்தியம்பிய ஐஸ்வர்யாராய் பாரதியார் கூறிய புதுமைப்பெண் என வியந்தோம்.

**-கே. பிரபாவதி கன்னியாகுமரி.**

- நல்லிகுப்புசாமி செட்டியார் பிறந்தநாள் தகவல்... 'ஓம் சரவணபவ' அளித்த முத்திரை!

- முனைவர் விஜயசுந்தரி அம்மாவின் அரவணை அமுது புத்தாண்டிலும் தித்திக்கட்டும். வாழ்த்துக்கள்!

- பேராசிரியர் கு. ஞானசம்பந்தனின் இராமாயணக் காட்சியின் விளக்கமாக வந்த இலக்குவன், இந்திரஜித், சீதா பிராட்டியாருக்காக தன் அண்ணனுக்கு மாலையிட வைத்த தருணம் அருமையான சொல் வண்ணங்கள்!

**-எஸ்.ஆர். ஹரிஹரன், சென்னை.**


*நக்கீரன் பப்ளிகேஷனுக்காக நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600 014-ல் அச்சிட்டு வெளியிடுபவர் : **நக்கீரன்கோபால்***

Owned by Nakkheeran Publications, Printed and Published by **Nakkheeran Gopal.** Printed at Nakkheeran Printers and Binders, 105, Jani jahan khan road, Royapettai, Chennai-14. and Published from the same address. Phone: 43993000

Editor: **Nakkheeran Gopal** Editor Incharge: **R.D.Saravanaperumal**


ஓம் சரவணபவ
ஜனவரி
2026
இதழுடன்
இலவச
இணைப்பு
2026
2
பிரபல
ஜோதிடர்களின்
துல்லியமான கணிப்பில்
புத்தாண்டுப் பலன்கள் 2026